இன்றைய செய்தி நாளைய வரலாறு




# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 23 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆவணி 15 – வெள்ளிக்கிழமை 01 செப்டம்பர் 2023 – கோவை ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 23: Thiruvalluvar Year - 2054 - Aavani 15 - Friday 01 September 2023 - Kovai★★ 12 Pages ₹ 5.00




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (30.8.2023) முகாம் அலுவலகத்தில், அண்மையில் அஜர்பைஜான் நாட்டில் நடைபெற்ற FIDE உலக கோப்பை செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் சிறப்பாக விளையாடி இரண்டாவது இடத்தை பெற்று சாதனை படைத்த செஸ் கிராண்ட் மாஸ்டர் பிரக்ஞானந்தாவை பாராட்டி ஊக்குவிக்கும் விதமாக உயரிய ஊக்கத் தொகையான 30 இலட்சம் ரூபாய்க்கான காசோலை மற்றும் நினைவுப் பரிசு வழங்கி, வாழ்த்தினார். இந்த நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் பிரக்ஞானந்தாவின் பெற்றோர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## முதலமைச்சரின் காலை உணவு திட்டம் அருமையான திட்டம்!

### நாடாளுமன்ற நிலைக்குழு உறுப்பினர்கள் பாராட்டு!

புதுடெல்லி, செப்.1 –

முதலமைச்சரின் காலை உணவு திட்டம் மிகவும் அருமையான திட்டம் என்று நாடாளுமன்ற நிலைக்குழு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பாராட்டு தெரிவித்துள்ளது.

தி.மு.க மக்களவை குழு துணைத் தலைவர் கனிமொழி தலைமையிலான ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் நிலைக்குழுவினர் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளை பார்வையிட்டு வருகின்றனர். இந்த குழுவினர் நேற்று முன்தினம் மதுரையில் முதலமைச்சர் காலை உணவு திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்தனர். மதுரை சாந்தமங்கலத்தில் உள்ள மாநகராட்சி பள்ளிக்குச் சென்ற அவர்கள் பள்ளியில் மாணவ மாணவிகளுக்கு உணவு பரிமாறினர். மாணவ – மாணவிகளுக்கு வழங்கப்பட்ட உணவின் தரத்தையும் அவர்கள் ஆய்வு செய்தனர். உணவு தரமாகவும், அருமையாகவும் இருப்பதாக அவர்கள் தெரிவித்தனர். காலை உணவுத் திட்டம் மகத்தான திட்டம் என்று நிலைக்குழுவில் இடம்பெற்றுள்ள உத்தரபிரதேச எம்.பி. ஷ்யாம் சிங் பாராட்டு தெரிவித்தார்.

**உ.பி. ஜான்பூர் தொகுதி எம்.பி. ஷ்யாம் சிங் பேட்டி!**

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்த முதலமைச்சரின் காலை உணவு திட்டம் மிகவும் அருமையான திட்டம். பொதுவாக பல தரப்பு குழந்தைகள் இருக்கிறார்கள். இத்திட்டத்தின் மூலம் குழந்தைகள் பள்ளிகளுக்கு வருவது நிச்சயம் அதிகரிக்கும். நானும் குழந்தைகளுடன் காலை உணவு திட்டத்தில் வழங்கப்படும் உணவை சாப்பிட்டேன். மிகவும் தரமாகவும், அருமையாகவும் உள்ளது என்று கூறினார்.

அதே போல் மற்ற உறுப்பினர்களும், தமிழ்நாடு முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தை பாராட்டினர்.

ஆய்வின் போது சட்டமன்ற உறுப்பினர் கோ. தளபதி, ஆட்சியர் சங்கீதா, மாநகராட்சி மேயர் இந்திராணி, மதுரை மாநகராட்சி ஆணையர் பிரவீன் குமார் உள்ளிட்டோரும் உடனிருந்தனர்.

## கேஸ் விலை குறைப்பு – தேர்தல் நெருங்குவதற்கான அறிகுறி!

# ‘இந்தியா’ கூட்டணிக் கட்சிகளின் எண்ணிக்கை மேலும் உயர வாய்ப்பு!

### கொளத்தூரில் பல்வேறு பணிகளைப் பார்வையிட்டு - அடிக்கல் நாட்டிய பின் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி!

**சென்னை, செப்.1–**

**‘இந்தியா’ கூட்டணிக் கட்சிகளின் எண்ணிக்கை இன்னும் உயர வாய்ப்புள்ளதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் பேட்டியளித்துள்ளார்.**

**கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, 5 இடங்களில் மழைநீர் உறிஞ்சும் பூங்காக்கள், தணிகாசலம் நகர் கால்வாயில் திறந்த மற்றும் மூடிய நீர்வழித்தடம் மற்றும் தமிழ்நாடு உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை மண்டல உதவி ஆணையர் அலுவலகக் கட்டடம் ஆகிய பணிகளுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (30.08.2023) கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் மின்பகிர்மானக் கழகத்தின் மின்மாற்றி இருக்குமிடத்தைச் சுற்றி பாதுகாப்பினை ஏற்படுத்தும் வகையில் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு கட்டமைப்புகள் மற்றும் ரூ.18.40 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் ஆகியவற்றை பார்வையிட்டு ஆய்வு செய்து, பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் ரூ.1.09 கோடி மதிப்பீட்டில் 5 இடங்களில் மழைநீர் உறிஞ்சும் பூங்காக்கள், நீர்வளத்துறையின் சார்பில் ரூ.91.36 கோடி மதிப்பீட்டில் தணிகாசலம் நகர் கால்வாயில் திறந்த மற்றும் மூடிய நீர்வழித்தடம் அமைக்கும் பணி மற்றும் ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை மண்டல உதவி ஆணையர் அலுவலகக் கட்டடம் ஆகிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

**மின்மாற்றியினைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு கட்டமைப்புகளை பார்வையிட்டு ஆய்வு செய்தல்**

பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் “நமக்கு நாமே” திட்டத்தின் கீழ், 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் எஸ்.ஆர்.பி.கோயில் வடக்கு பிரதான சாலை மற்றும் தெற்கு பிரதான சாலை, ஜவஹர் நகர் முதல் பிரதான சாலை ஆகிய மூன்று இடங்களில் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் மின்பகிர்மானக் கழகத்தின் மின்மாற்றி இருக்குமிடத்தைச் சுற்றி பாதுகாப்பு கட்டமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் எஸ்.ஆர்.பி. கோயில் வடக்கு பிரதான சாலையில் மின்மாற்றியினைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு கட்டமைப்பினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

**ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தல்**

கொளத்தூர் சட்டமன்றத்தொகுதிக்குட்பட்ட திரு.வி.க. நகர் பேருந்து நிலையம் அருகில் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியின் கீழ், 15 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பல்லவன் சாலையில் பெரியார் நகர், ஜவஹர் நகர் மற்றும் ஜி.கே.எம். காலனி ஆகிய பகுதிகளுக்கு 1110 மீட்டர் நீளத்திலும்,

1 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் எஸ்.ஆர்.பி.கோயில் (வடக்கு), ராமமூர்த்தி காலனியிலிருந்து பல்லவன் சாலை வரை 175 மீட்டர் நீளத்திலும்,

1 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஆண்டாள் அவென்யூ பகுதியிலிருந்து பல்லவன் சாலை வரை 465 மீட்டர் நீளத்திலும், என மொத்தம் 18 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 1,750 மீட்டர் நீளத்தில் நடைபெற்று வரும் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் பணிகளை முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

**பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் 5 மழைநீர் உறிஞ்சும் பூங்காக்கள் அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டுதல்**

வி.வி. நகர் 2வது தெரு பூங்காவில் 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், பூம்புகார் நகர் 4வது தெரு பூங்காவில் 26 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், பெரியார் நகர் 29வது தெரு பூங்காவில் 26 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், ஜவஹர் நகர் 5வது பிரதான சாலை பூங்காவில் 28 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், செல்வி நகர் 5வது தெரு விளையாட்டு மைதானத்தில் 14 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், என மொத்தம் 1 கோடியே 9 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 4 பூங்காக்கள் மற்றும் 1 விளையாட்டு மைதானம் ஆகியவற்றில் 5 மழைநீர் உறிஞ்சும் பூங்காக்கள் (Sponge Park) அமைக்கும் பணிகளுக்கு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

இப்பூங்காக்களில் 5 மழைநீர் உறிஞ்சும் பூங்காக்கள் அமைக்கப்படுவதுடன், பசுமையான செடிகள், புல்வெளிகள், சுற்றுச்சுவர், சிறுவர்களுக்கான விளையாட்டு உபகரணங்கள், நடைபாதை, இருக்கைகள், மின்விளக்குகள், கண்காணிப்பு கேமராக்கள், குடிநீர்வசதி, பாதுகாவலர் அறை உள்ளிட்ட பல்வேறு பணிகளும் மேற்கொள்ளப்படும்.

கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் அருகில் உள்ள அனிதா அச்சீவர்ஸ் அகாடமியை பார்வையிட்டார்.

கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் அருகில் உள்ள அனிதா அச்சீவர்ஸ் அகாடமியில் மாணவ, மாணவியர்களுக்கு TALLY பயிற்சி வகுப்புகள், பெண்களுக்கு தையற் பயிற்சி வகுப்புகள் நடைபெறும் இடத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்.

கொளத்தூர், ஹரிதாஸ் சாலையில் உள்ள தாமரைக் குளம் பூங்காவை பார்வையிட்டார்

கொளத்தூர், ஹரிதாஸ் சாலையில் பெருநகர சென்னை மாநகராட்சியின் தாமரைக் குளம் பூங்காவை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு, அங்கு நடைபயிற்சி மேற்கொண்ட பொதுமக்களிடம் கலந்துரையாடினார்.

**தணிகாசலம் நகர் கால்வாயில் திறந்த மற்றும் மூடிய நீர்வழித்தடம் அமைக்கும் பணிகள் மற்றும் தமிழ்நாடு உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை உதவி ஆணையர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி ஆகியவற்றிற்கு அடிக்கல் நாட்டுதல்**

நீர்வளத்துறையின் சார்பில் 91 கோடியே 36 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சென்னை மாதவரம் மற்றும் அயனாவரம் வட்டங்களில் அமைந்துள்ள தணிகாசலம் நகர் கால்வாயில் திறந்த மற்றும் மூடிய நீர்வழித்தடம் அமைக்கும் பணிகள் மற்றும் கொளத்தூர், நேர்மை நகரில் 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 758.10 சதுர மீட்டர் பரப்பளவில் தமிழ்நாடு உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை மண்டல உதவி ஆணையர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி ஆகியவற்றிற்கு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

**பின்னர் செய்தியாளர்களுக்கு முதல்வர் பேட்டியளித்தார்.**

**செய்தியாளர்கள் கேள்விக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அளித்த பதில் வருமாறு:**

**செய்தியாளர் :** இந்தியா கூட்டணி 28 கட்சிகளுடன் உயர்ந்திருக்கிறது. அதை எப்படி பார்க்கிறீர்கள்?

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** அது இன்னும் உயர்வதற்கான வாய்ப்பு இருக்கிறது.

**செய்தியாளர் :** கேஸ் விலை குறைப்பு, இந்தியா கூட்டணிக்கான நெருக்கடியா?

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** இல்லை, இல்லை, அது தேர்தல் நெருங்குவதற்கான ஒரு அறிகுறி.

**செய்தியாளர் :** பெட்ரோல், டீசல் விலை கூட குறைவதற்கான வாய்ப்பு இருக்கிறதா?

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** ஆச்சரியமில்லை!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேட்டியளித்தார்.

இந்நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, ஆர்.கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, எஸ்.சுதர்சனம், துணை மேயர் மு.மகேஷ்குமார், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், கூடுதல் தலைமைச் செயலாளர்/ பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையர் திருமதி பூஜா குல்கர்னி, நகர் ஊரமைப்பு இயக்குநர் பா.கணேசன், அனிதா அச்சீவர்ஸ் அகாடமியின் தலைமை நிர்வாக அதிகாரிகள் இரா.நரேந்திரன், திருமதி. ஹெலன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## 14 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு!

### வானிலை ஆய்வு மையம் அறிவிப்பு!

சென்னை, செப். 1 -

தமிழ்நாட்டில் 2 நாட்களுக்கு மழை பெய்யக்கூடும் என்றும், 14 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளது என்றும் வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. தமிழ்நாட்டில் கோடை காலம் முடிந்திருந்தாலும், இன்னும் அதன் தாக்கம் இருந்து வருகிறது. கடந்த வாரம் வரை தமிழ்நாட்டில் ஆங்காங்கே ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்தாலும், பல இடங்களில் வெயிலே வாட்டி வதைத்தது.

அதன்படி, தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒரு சில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழையும், கோவை, நீலகிரி, கடலூர், திருவாரூர், நாகை, மயிலாடுதுறை, புதுக்கோட்டை, அரியலூர், திருச்சி, திண்டுக்கல், மதுரை, தேனி , தஞ்சாவூர், தென்காசி ஆகிய 9 மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்யக்கூடும்.

தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் சில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழையும், கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர் ஆகிய மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்பு இருக்கிறது.

தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் சில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழையும், கோவை மாவட்ட மலைப்பகுதிகள், நீலகிரி, கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர், சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு மற்றும் புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்யக் கூடும் என்று ஆய்வு மையம் தெரிவித்து இருக்கிறது.

## உலகக் கோப்பை போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற

# செஸ் வீரர் பிரக்ஞானந்தாவுக்கு ரூ. 30 லட்சம் பரிசு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கி வாழ்த்திப் பாராட்டினார்!

சென்னை, செப்.1-

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை, உலகக் கோப்பை செஸ் போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்ற பிரக்ஞானந்தா சந்தித்து வாழ்த்துப் பெற்றார். அவருக்கு 30 லட்சம் ரூபாய் பரிசுத்தொகையை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

முன்னதாக சென்னை விமான நிலையத்தில் பிரக்ஞானந்தாவிற்கு அரசு சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

அஜர்பெய்ஜானில் நடைபெற்ற உலகக் கோப்பை செஸ் போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்ற பிரக்ஞானந்தா நேற்று முன்தினம் சென்னை திரும்பினார். சென்னை திரும்பிய அவர், முதலமைச்சரின் ஆழ்வார்பேட்டை முகாம் அலுவலகத்தில் முதல்வர் மு.க. ஸ்டாலினை சந்தித்தார். அப்போது உலகக்கோப்பை செஸ் போட்டியில் தான் பெற்ற பதக்கங்களை முதலமைச்சரிடம் கொடுத்து பிரக்ஞானந்தா வாழ்த்துப் பெற்றார். இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், செஸ் கிராண்ட் மாஸ்டர் பிரக்ஞானந்தாவுக்கு பொன்னாடை போர்த்தி வாழ்த்து தெரிவித்தார்.

இதைத்தொடர்ந்து தமிழ்நாடு அரசின் சார்பில் 30 லட்சம் ரூபாய்க்கான காசோலையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிரக்ஞானந்தாவிற்கு வழங்கி பாராட்டு தெரிவித்தார்.

**அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பொன்னாடை அணிவித்து வாழ்த்து!**

முதல்வர் மு.க.ஸ்டாலின், இளைஞர் நலன் மற்றும் மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை சந்தித்துப்பின் செஸ் விளையாட்டு வீரர் பிரக்ஞானந்தா செய்தியாளர்களுக்கு பேட்டியளிக்கையில்,

தமிழ்நாடு அரசு சார்பில் ரூபாய் 30 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. அதற்காக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதல்வர் அவர்களை சந்தித்து வாழ்த்து பெற்றதில் மகிழ்ச்சி - விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகளை தமிழ்நாடு அரசு ஊக்கப்படுத்தி வருகிறது. இதற்காக தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனக்கு பொன்னாடை அணிவித்து, வாழ்த்திய அமைச்சர் அண்ணன் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

முன்னதாக உலக கோப்பை செஸ் போட்டியில் வெள்ளிப்பதக்கத்துடன் தாயகம் திரும்பிய இளம் செஸ் வீரர் பிரக்ஞானந்தாவிற்கு சென்னை விமான நிலையத்தில் தமிழ்நாடு அரசு சார்பில் மேள தாளம் முழங்க உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

அஜர்பெய்ஜானில் நடைபெற்ற உலகக் கோப்பை செஸ் போட்டியில் இறுதி போட்டி வரை முன்னேறி அசத்திய இந்தியாவின் இளம் வீரர் தமிழ்நாட்டை சேர்ந்த பிரக்ஞானந்தா, 5 முறை சாம்பியனான முதல் நிலை வீரர் நார்வேயின் மாக்னஸ் கார்ல்சனை எதிர்கொண்டார். டை பிரேக்கர் வரை சென்ற ஆட்டத்தில், பிரக்ஞானந்தா 2வது இடம் பிடித்தார். வெள்ளிப்பதக்கத்துடன் நேற்று சென்னை திரும்பிய பிரக்ஞானந்தாவிற்கு தமிழ்நாடு அரசு சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. விமான நிலையத்தில் மேள தாளம் முழங்க கலை நிகழ்ச்சிகளுடன் வரவேற்பு அளிக்கப்பட்டது.

தமிழ்நாடு அரசு சார்பில் அதிகாரிகள் மற்றும் மாணவ, மாணவிகள் என பல்வேறு தரப்பினரும் வருகை தந்து பிரக்ஞானந்தாவுக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர். வரவேற்பை தொடர்ந்து திறந்த வாகனத்தில் அழைத்து செல்லப்பட்டார். விமான நிலையத்தில் பொதுமக்கள் திரண்டு வந்து வரவேற்பு அளித்தது மகிழ்ச்சி அளிப்பதாக பிரக்ஞானந்தா தெரிவித்தார்.



இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 01-09-2023

# பா.ஜ.க.வின் முகத்திரையைக் கிழிக்கும் சி.ஏ.ஜி. - 1

'இந்தியா' கூட்டணி பேசும் மக்கள் அரசியலுக்குப் பதில் சொல்ல முடியாத நரேந்திரமோடியும், அமித்ஷாவும், 'அது ஊழல் கூட்டணி' என்று சொல்லி திசை திருப்பி வருகிறார்கள். ஆனால் ஒன்றிய பா.ஜ.க. அரசின் ஊழல் என்பது நாடறிந்தது ஆகும். அந்த நாடறிந்த செய்திக்கு ஆதாரங்கள் வேண்டுமா? இதோ மத்திய தணிக்கைத் துறை அறிக்கை வந்திருக்கிறது. பா.ஜ.க.வின் முகத்திரையை கிழிக்கிறது சி.ஏ.ஜி. அறிக்கை. இந்த அறிக்கையில் ஏழு விதமான திட்டங்களில் நடந்திருக்கக் கூடிய முறைகேடுகள் மட்டுமே அம்பலமாகி இருக்கிறது. ஒவ்வொன்றாக - சுருக்கமாகக் காண்போம்.

★ **அயோத்தியா மேம்பாட்டுத் திட்டம்:**

உத்தரப்பிரதேச மாநிலத்தில், அயோத்தியா மேம்பாட்டுத் திட்டத்தை ஒன்றிய பா.ஜ.க. அரசு செயல்படுத்துவதில் மிகப்பெரிய ஊழல் நடந்திருப்பதை சி.ஏ.ஜி. அறிக்கை அம்பலப்படுத்தியுள்ளது. ஒன்றிய பா.ஜ.க. அரசு, கடந்த 2015-ஆம் ஆண்டு ஸ்வதேஷ் தர்ஷன் (Swadesh Darshan) திட்டத்தினை அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின் கீழ் உத்தரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், இமாச்சலப்பிரதேசம், சிக்கிம், கோவா, தெலுங்கானா ஆகிய 6 மாநிலங்களில் 6 திட்டங்களை அறிவித்தது ஒன்றிய அரசு. 2015 ஜனவரி முதல் 2022 மார்ச் மாதம் வரையிலான இத்திட்டத்தின் செயல்பாடு குறித்து, இந்திய தலைமை கணக்குத் தணிக்கையாளர் ஆய்வு நடத்தி அறிக்கையை வெளியிட்டுள்ளது.

உத்தரப்பிரதேச மாநிலத்தில் இராமாயண நிகழ்வுகள் தொடர்புடைய இடங்களை ஒருங்கிணைத்து சுற்றுலா வளர்ச்சிக்காக உருவாக்கப்பட்டதுதான் அயோத்தியா மேம்பாட்டுத் திட்டம். இத்திட்டத்தைச் செயல்படுத்தியதில் 8 கோடியே 22 லட்சம் ரூபாய் வீணடிக்கப்பட்டுள்ளதாக குற்றஞ்சாட்டியுள்ளது சி.ஏ.ஜி. அயோத்தியா மேம்பாட்டுத் திட்டத்தில் ஒப்பந்ததாரர்களுக்குப் பணி கொடுக்கப்படும் போது, குறிப்பிட்ட அளவு உத்தரவாதத் தொகையை செலுத்தி இருக்க வேண்டும். ஆனால் நிர்ணயிக்கப்பட்டதை விட குறைவான அளவிற்கு இந்த உத்தரவாதத் தொகை கொடுக்கப்பட்டுள்ளது.

**உதாரணமாக, 62 கோடியே 17 லட்சம் ரூபாய்க்கு ஒப்பந்தம் எடுத்த ஒரு ஒப்பந்ததாரர், உத்தரவாதத் தொகையாக 3 கோடியே 11 லட்சம் ரூபாய் செலுத்த வேண்டிய நிலையில் வெறும் ஒரு கோடியே 86 லட்சம் ரூபாய் மட்டுமே செலுத்தியுள்ளார். ஆனால் அவருக்கு ஒப்பந்தம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதேபோல் ஒப்பந்ததாரர்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்ட பணிகள் ஒரே செலவினத்தை கொண்டவை என்பதையும் வெளிச்சத்திற்கு கொண்டுவந்துள்ளது சி.ஏ.ஜி. அறிக்கை.**

**ஒப்பந்ததாரர்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்ட பணிகளுக்கு 19 லட்சத்து 13 ஆயிரம் ரூபாய் கூடுதலான செலவு காண்பிக்கப்பட்டுள்ளது. அயோத்தி மேம்பாட்டுத் திட்டப் பணிகளைப் பெற்ற பின்னரே 3 ஒப்பந்ததாரர்களுக்கு ஜி.எஸ்.டி. பதிவு ரத்து செய்யப்பட்டிருக்கிறது. ஆனாலும் ஒரு ஒப்பந்ததாரருக்கு முறைகேடாக 19 லட்சத்து 57 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. அயோத்தியா மேம்பாட்டுத் திட்டத்தில், பல பணிகளுக்கு, அடிப்படை பணிகள் கூட செய்யப்படாமல் ஒப்பந்ததாரர்களின் கணக்கில் பணம் செலுத்தப்பட்டுள்ளதையும், பல பணிகளுக்குக் கூடுதல் தொகை வழங்கப்பட்டிருப்பதையும் சி.ஏ.ஜி. அறிக்கை அம்பலப்படுத்தியுள்ளது. இப்படி, அயோத்தியா மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்தியதில் 8 கோடியே 22 லட்சம் ரூபாய் மக்கள் வரிப்பணம் வீணாக்கப்பட்டிருக்கிறது.**

ஸ்வதேஷ் தர்ஷன் திட்டத்தின் கீழ் உத்தரப்பிரதேசத்தில் அயோத்தியா மேம்பாட்டுத் திட்டம்போல, கோவாவில் சின்குவேரிம் - அகுவாடா சிறை மேம்பாடு, இமாச்சலப் பிரதேசத்தில் இமாலயன் சர்க்யூட், தெலுங்கானாவில் ஹெரிட்டேஜ் சர்க்யூட், சிக்கிம் மாநிலத்தில் ரங்போ-சிங்டம், மத்தியப் பிரதேசத்தில் புத்த சர்க்யூட் ஆகிய திட்டங்களிலும் முறைகேடு நடந்திருப்பதை வெளிச்சத்திற்கு கொண்டு வந்துள்ளது சி.ஏ.ஜி. அறிக்கை. அதன்படி, மத்தியப் பிரதேசம், இமாச்சலப்பிரதேசம், சிக்கிம், தெலுங்கானா, கோவா ஆகிய மாநிலங்களில் செயல்படுத்தப்பட்ட திட்டங்களின் கீழ் ஒப்பந்ததாரர்கள் 19 கோடியே 73 லட்சம் ரூபாய் அளவில் முறைகேடாக கணக்குக் காண்பித்து ஆதாயம் அடைந்துள்ளனர் என்பதை ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தியுள்ளது சி.ஏ.ஜி. அறிக்கை. எந்தத் திட்டத்தின் பேரும் புரியவில்லை. புரியாமல் பேர் வைப்பதே சுருட்டுவதற்குத் தானா?

★ **உதான் திட்டம்:**

ஒன்றிய அரசின் "உதான்" திட்டம் தோல்வியில் முடிந்து விட்டது என்பதை சி.ஏ.ஜி. அறிக்கை சொல்கிறது.

நாட்டின் சிறு நகரங்களுக்கும் விமான சேவையை விரிவுபடுத்துவதாகக் கூறி ஒன்றிய அரசு கடந்த 2016 அக்டோபர் 21-ம் தேதி உதான் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. ஏழைகளும் விமானங்களில் பயணிக்கலாம் - நடுத்தர நகரங்களுக்கும் குறைந்த கட்டணத்தில் விமான சேவை என்று கூறி ஒன்றிய பா.ஜ.க. அரசால் பெரும் விளம்பரத்துடன் தொடங்கப்பட்டது "உதான்" என்ற விமான சேவைத் திட்டம். இத்திட்டத்தின் மூலம், செருப்பு அணிந்த சாமானியர்களும், விமானத்தில் பயணிக்கலாம் என்று பெருமையுடன் கூறியது பா.ஜ.க. அரசு.

**உதான் திட்டத்திற்காக ஒன்றிய அரசு 1,089 கோடி ரூபாயை ஒதுக்கியது. நாடு முழுவதும் உதான் திட்டம் 3 கட்டங்களாக செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்ட நிலையில், திட்டமிடப்பட்ட 774 வழித்தடங்களில் 403 தடங்களில் விமான சேவை கடைசி வரை தொடங்கப்படவே இல்லை என்ற அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளது சி.ஏ.ஜி. அறிக்கை. மொத்தத்தில் உதான் திட்டத்தில் 774 தடங்களில் விமான சேவை வழங்க முடிவு செய்ததில் 7 சதவிகித தடங்களில் மட்டுமே விமானங்கள் இயக்கப்படுகின்றன. 93 சதவிகித தடங்களில் விமானங்கள் இயக்கப்படவில்லை.**

தமிழ்நாட்டில் சேலம், தஞ்சாவூர், ராமநாதபுரம், வேலூர் நகரங்களுக்கு உதான் திட்டத்தில் விமான சேவை அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டது. ஆனால், திட்டமிடப்பட்ட 4 நகரங்களில் சேலத்துக்கு மட்டுமே உதான் திட்டத்தில் விமானம் இயக்கப்பட்டது. 2018 முதல் 2021 வரைக்கும் தான் விமானம் வந்தது. அதுவும் சென்னைக்கும் சேலத்துக்குமான ஒரே ஒரு விமானம் மட்டுமே வந்தது. இரண்டு ஆண்டுகளாக சேலத்துக்கு விமானம் இல்லை. அந்த விமானநிலையம் செயல்படவே இல்லை.

ராமநாதபுரம், தஞ்சாவூர், வேலூருக்கு உதான் திட்டத்தில் விமானங்கள் இயக்கப்படவே இல்லை என்பது அனைவருக்கும் தெரியும். உதான் திட்டத்தில் ஆயிரத்து 89 கோடி ரூபாய் செலவிட்டும் 83 வழித்தடங்களில் விமான சேவை தொடங்கப்படவில்லை என சி.ஏ.ஜி. அறிக்கை கூறியுள்ளது.

சிறு நகரங்கள் என்று அடையாளம் காணப்பட்ட வழித்தடங்களில் எந்த நிறுவனம் விமானங்களை இயக்குகிறதோ அந்நிறுவனங்களுக்கு 3 ஆண்டுகளுக்கு மானியம் வழங்கியது ஒன்றிய அரசு. இப்படியாக 112 நகரங்களில் இயக்கப்பட்ட விமானங்களுக்கு மானியம் கொடுக்கப்பட்டது. மூன்று ஆண்டுகளுக்கு மானியம் கொடுத்தார்கள். அதனை நிறுத்தினார்கள். அதன்பிறகு விமானமும் நிறுத்தப்பட்டு விட்டது. 112 நகரங்களுக்கு இயக்கப்பட்ட விமான சேவை வெறும் 54 வழித்தடங்களாக அதன்பின்னர் சுருங்கியது.

மொத்தமாக அறிவிக்கப்பட 774 வழித்தடங்களில் 720 வழித்தடங்களுக்கு விமானங்கள் இயக்கப்படவில்லை என்று கூறியுள்ளது சி.ஏ.ஜி. அறிக்கை... இதன்மூலம், ஒன்றிய பா.ஜ.க. அரசால் பெரும் விளம்பரத்துடன் தொடங்கப்பட்ட உதான் திட்டம் படுதோல்வியடைந்திருப்பது அம்பலமாகியுள்ளது.

**அது உதான் திட்டமல்ல, உடான்ஸ் திட்டம்!**

- தொடரும்



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (30.08.2023) பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் "நமக்கு நாமே திட்டத்தின் கீழ், கொளத்தூர், எஸ்.ஆர்.பி. கோயில் வடக்கு பிரதான சாலையில் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் மின்பகிர்மானக் கழகத்தின் மின்மாற்றி இருக்குமிடத்தைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு கட்டமைப்பினை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்நிகழ்வின்போது, நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, ஆர். கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, துணை மேயர் மு. மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.





தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (30.08.2023) கொளத்தூரில், 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை மண்டல உதவி ஆணையர் அலுவலகக் கட்டுமானப் பணிக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்வின்போது, நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, ஆர். கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, எஸ். சுதர்சனம், துணை மேயர் மு. மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையர் திருமதி பூஜா குல்கர்னி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### பிரக்ஞானந்தாவின் சாதனைகள்

# நாட்டிற்கே பெருமை சேர்க்கின்றன!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ட்விட்டர் பதிவு!

சென்னை, செப்.1-

செஸ் கிராண்ட் மாஸ்டர் பிரக்ஞானந்தாவின் சாதனைகள் நாட்டிற்கே பெருமை அளிக்கின்றன என்றும்; செஸ் கிராண்ட்மாஸ்டர் பிரக்ஞானந்தா அவர்களுக்கு ரூ.30 லட்சம் உயரிய ஊக்கத்தொகை வழங்கி சிறப்பித்தது குறித்தும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :

**வெற்றியுடன் சென்னை திரும்பிய இளந்திறமையாளர் பிரக்ஞானந்தா வைச் சந்தித்ததில் பெருமகிழ்ச்சி அடைந்தேன்!**

**பிரக்ஞானந்தாவின் சாதனைகள் தமிழ்நாட்டிற்கு மட்டுமின்றி நாட்டிற்கே பெருமை சேர்க்கின்றன. பிரக்ஞானந்தா வுக்கு நினைவுப்பரிசும், 30 லட்சம் ரூபாய் உயரிய ஊக்கத்தொகையும் வழங்கிச் சிறப்பித்தேன். விளையாட்டில் இளம் திறமையாளர்களை வளர்ப்பதற்கான நமது அரசின் உறுதிப்பாட்டை இத்தகைய நடவடிக்கைகள் பிரதிபலிக்கின்றன**

**இதே வேகத்தில் தொடர்ந்து சென்று, வரவிருக்கும் சவால்களிலும் வெற்றி பெறுங்கள், பிரக்ஞானந்தா!**

இவ்வாறு தனது ட்விட்டர் பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.



நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேருவை நேற்று முன்தினம் (30.08.2023) தலைமைச் செயலகத்தில், இங்கிலாந்து நாட்டின் அமஸ்பரி (Amesbury) மேயரான தமிழ்நாட்டை பூர்வீகமாக கொண்ட டாக்டர். சாருலதா (எ) மோனிகா தேவேந்திரன் சந்தித்தார்.

### சிலி நாட்டில் நவீன தொழில்நுட்ப வசதியுடன் கட்டப்படும் அடுக்குமாடிக் குடியிருப்புகள் போல

# தமிழ்நாட்டிலும் முதல்வர் ஒப்புதலுடன் செயல்படுத்த திட்டம்!

## சென்னை விமான நிலையத்தில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் பேட்டி!

சென்னை, செப். 1-

சிலி நாட்டில் நவீன தொழில்நுட்ப வசதியுடன் கட்டப்படும் அடுக்குமாடி குடியிருப்புகள் போல தமிழ்நாட்டிலும் முதல்வர் அவர்களின் ஒப்புதலோடு செயல்படுத்த உள்ளோம் என்று சிலி நாட்டிற்கு பயணம் சென்று சென்னை விமானம் நிலையம் திரும்பிய அமைச்சர் தா.மோ. அன்பரசன் கூறியுள்ளார்.

உலக வங்கி அழைப்பின் பேரில் தமிழ்நாடு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை மற்றும் நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு துறை அமைச்சர் தா. மோ.அன்பரசன் தென்அமெரிக்காவில் உள்ள சிலி குடியரசு நாட்டிற்கு அரசு முறை பயணமாக சென்றார்.

சிலி நாட்டில் நகர்ப்புர திட்டமிடல் துறை மூலம் கட்டப்பட்டுள்ள பல அடுக்குமாடி குடியிருப்பு திட்ட பகுதிகளை நேரில் சென்று பார்வையிட்டார். சிலி நாட்டின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர திட்டமிடல் துறை அமைச்சர் கார்லோஸ் மான்டெஸ் சிஸ்டர்னாஸ் மற்றும் உலக வங்கி பிரதிநிதி விர்ஜீனியா பிராண்டன், இசபெல் பிரெயின், உலக வங்கியின் மூத்த நகர்ப்புற நிபுணர் யான் எப். ஜாங் ஆகியோர் உடன் சென்று காண்பித்தனர்.

சிலி குடியரசு நாட்டில் பயணத்தை முடித்துக் கொண்டு அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேற்று முன்தினம் சென்னை திரும்பினார்.

சென்னை விமான நிலையத்தில் அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:

தென் அமெரிக்காவில் உள்ள சிலி நாட்டில் நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் பல அடுக்குமாடி குடியிருப்புகள் எப்படி எல்லாம் கட்டப்படுகிறது, கட்டப்பட்ட வீடுகள் எப்படி எல்லாம் மக்களுக்கு வழங்கப்படுகிறது என்பதை எல்லாம் நீங்கள் நேரடியாக வந்து பார்வையிட்டு, அதை தமிழகத்தில் செயல்படுத்திட வேண்டும் என்று உலக வங்கி அழைத்தன் பேரில்,

முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலோடு, நானும், வீட்டு வசதி துறை முதன்மை செயலாளர் செல்வி. அபூர்வா, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் முனைவர்.சங்கர், வாரிய இணை மேலாண்மை இயக்குநர் தங்கவேலு ஆகியோருடன் கடந்த வாரம் சிலி நாட்டிற்கு சென்றோம்.

சிலி நாட்டு வீட்டு வசதி வாரிய அமைச்சர் மற்றும் உலக வங்கி குழுவினரோடு சிலி நாட்டில் பல இடங்களில் கட்டப்பட்டு வரும் அடுக்குமாடி வீடுகளை பார்வையிட்டோம். கட்டப்பட்டு வரும் வீடுகளை பற்றி உலக வங்கி ஏற்பாடு செய்த ஆய்வு கூட்டங்களி லும் பங்கேற்றோம்.



சிலி நாட்டில் புதிய நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கட்டப்பட்டு வரும் வீடுகள் பார்ப்பதற்கு பிரமிக்கத்தக்க அளவிற்கு இருந்தது. நம்முடைய தமிழ்நாட்டில் நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் ஏழைகளுக்கு கட்டப்படும் வீடுகள் நவீனமாகவும், புதுமை யாகவும் கட்டப்பட வேண்டும் என்ற உணர்வு, அக்கட்டிடங்களை பார்த்தவுடன் எங்களுக்கு ஏற்பட்டு இருக்கிறது.

அந்நாட்டில் நவீன தொழில்நுட்ப வசதியுடன் அடுக்குமாடி குடியிருப்பு கள் போல தமிழகத்திலும் கட்டலாம் என்பதை முதல்வர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று, முதல்வர் அவர்களின் ஒப்புதலோடு செயல்படுத்த உள்ளோம் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த பயணம் உண்மையிலேயே வெற்றி பயணமாக அமைந்தது. சிலி நாடு வசதி மிக்கவர்கள் மிகுந்த நாடாக இருந்தாலும், அந்நாட்டிலும் ஏழை எளிய மக்கள் உள்ளதால், அவர்களுக்காக கட்டப்படும் அடுக்கு மாடி குடியிருப்புகளை பார்வையிட வேண்டும் என்ற நல்ல நோக்கில் உலக வங்கி எங்களை அழைத்து சென்றது மகிழ்ச்சி அளிக்கிறது. நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு மிகவும் பயனுள்ள பயணமாக இருந்தது.

சிலி நாட்டில் 10 ஆண்டுகளுக்கு முன்பு பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. அதனால் தான் அங்கு அடுக்குமாடி குடியிருப்புகளில் பக்கவாட்டு சுவர் இல்லாமல், கான்கிரீட் பில்லர் மட்டும் அமைத்து அதிக பாரம் இல்லாமல் பக்கவாட்டில் அட்டைகள், கண்ணாடிகள் வைத்து கட்டப்படுவது பார்ப்பதற்கு மிகவும் நன்றாக இருந்தது.

கட்டுமான செலவு குறைவாக இருப்பதுடன், நிலநடுக்கத்தை தாங்கும் வகையில் அமைக்கப்படுகிறது.

இவ்வாறு அமைச்சர் தா.மோ.அன்பரசன் கூறினார்.



சென்னை, எத்திராஜ் மகளிர் கல்லூரி வளாகத்தில் நேற்று முன்தினம் (30.08.2023) தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், தமிழறிஞர்களைக் கொண்டு நடைபெறவுள்ள ஒரு நாள் இளையோர் இலக்கியப் பயிற்சிப் பாசறையினை குத்து விளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (30.08.2023) நீர்வளத்துறையின் சார்பில் 91 கோடியே 36 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சென்னை மாதவரம் மற்றும் அயனாவரம் வட்டங்களில் அமைந்துள்ள தணிகாசலம் நகர் கால்வாயில் திறந்த மற்றும் மூடிய நீர்வழித்தடம் அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டி பணிகளை தெடங்கி வைத்தார். இந்நிகழ்வின்போது, நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, ஆர்.கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, எஸ்.சுதர்சனம், துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (30.08.2023) கொளத்தூர், ஜவஹர் நகரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் ரூ.1.09 கோடி மதிப்பீட்டில் 5 இடங்களில் மழைநீர் உறிஞ்சும் பூங்காக்கள் அமைக்கும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்வின்போது, நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, ஆர்.கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### சட்டத்தின் துணையுடன்

# சமூக நீதியை நிலைநாட்டியவர் - மறைந்த நீதிபதி கே.சாமிதுரை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தி!

சென்னை, செப்.1–

சட்டத்தின் துணையுடன் சமூக நீதியை நிலைநாட்டியவர் மறைந்த உயர்நீதி மன்ற நீதிபதி ஐயா கே.சாமிதுரை அவர்கள் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

சென்னை உயர்நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி ஜஸ்டிஸ் கே.சாமிதுரை அவர்கள் மறைவையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:–

சென்னை உயர்நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி ஜஸ்டிஸ் கே.சாமிதுரை (வயது 91) அவர்கள் மறைந்தார் என்ற செய்தியறிந்து மிகவும் வருத்தமுற்றேன். எளிய பின்புலத்தில் பிறந்து, கடும் உழைப்பால் உயர்நீதிமன்ற நீதிபதியாக உயர்ந்து சட்டத்தின் துணையுடன் சமூக நீதியை நிலைநாட்டியவர் ஐயா சாமிதுரை அவர்கள். முதன்முறை உயர்நீதிமன்ற நீதிபதி ஆகும் வாய்ப்பு வந்தபோது அதனை மறுத்த, பதவி மேல் ஆசைகொள்ளாத அரிய மனிதர் அவர். பின்னர் இரண்டாம் முறை வாய்ப்பு வந்தபோதுதான் மரபு கருதி அதனை ஏற்றுக்கொண்டார்.



2018ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினை வேந்தல் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு தலைவர் கலைஞரின் புரட்சிகரமான பங்களிப்புகளை அவர் பட்டியலிட்டதும், அப்போதே என் மீது மிகுந்த அன்பும் நம்பிக்கையும் கொண்டு, “வருங்கால முதலமைச்சர்” என அழைத்ததும் என் நெஞ்சில் நீங்காமல் நிழலாடுகிறது.

ஜஸ்டிஸ் சாமிதுரை அவர்களை இழந்து வாடும் அவரது கொள்கை வழித்தோன்றல் கேரள உயர்நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி கேரள மனித உரிமை ஆணையத்தின் தற்போதைய தலைவர் ஜஸ்டிஸ் எஸ்.மணிக்குமார் உள்ளிட்ட அவரது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### அமைச்சர் மனோ தங்கராஜ் தலைமையில்!

# ஆவின் நிறுவன சீரமைப்பு குறித்து ஆய்வுக்கூட்டம்!

சென்னை,செப்.1-

பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் தலைமையில் சென்னை நந்தனம், ஆவின் இல்லத்தில் நேற்று முன்தினம் (30.8.2023) காலை 11 மணி அளவில் மாவட்ட ஆவின் பொது மேலாளர்கள் மற்றும் அனைத்து மாவட்ட துணை பதிவாளர்கள் (பால் வளம்) உடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

கடந்த மே மாதம் பால் வளத்துறை அமைச்சராக பொறுப்பேற்ற அமைச்சர் த.மனோ தங்கராஜ் அவர்களால் முன்னெடுக்கப்பட்ட திட்டங்களின் நிலை குறித்தும் மற்றும் நிருவாக சீரமைப்பு குறித்து பிறப்பித்த உத்தரவுகளின் நிலை குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப் பட்டது.

இதில் அனைத்து ஒன்றியங்களிலும் ஒப்பந்த தொழிலாளர்களுக்கு சம்பளம் அவரவர் வங்கி கணக்குகள் மூலம் நேரடியாக வழங்கப்படுவதை உறுதி செய்தல், பால் பதப்படுத்தல் இடங்கள் மற்றும் ஆவின் பிரதான வாயிலிலும் CCTV கேமரா பொறுத்துதல், Bio Metric மூலம் அனைத்து ஒன்றியங்களிலும் உள்ள பணியாளர்களின் வருகை முறையாக கண்காணிக்கப்படுகிறதா என்றும் அனைத்து ஆவின் போக்குவரத்து வாகனங்கள் மற்றும் ஒப்பந்த வாகனங்களுக்கு FC செய்யப்பட்டுள்ளதா என்றும் வாகனங் களுக்கு 6 மாதத்திற்கு ஒரு முறை FC செய்யப்பட்டுள்ளதை உறுதி செய்தல் என்று விரிவான ஆய்வு மேற்கொள்ளப் பட்டது.

பால் உற்பத்தியாளர்களிடம் (Spot Acknowledgement ) உடனடி ஒப்புகைச் சீட்டு வழங்கும் முறை பலத்த வரவேற்பை பெற்றுள்ளது. இதன் மூலம் பால் உற்பத்தியாளர்களுக்கு கூடுதலாக விலை கிடைத்துள்ளது. இதை அனைத்து தொடக்க பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு முழுமையாக Spot Acknowledgement முறையை நடைமுறைபடுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஆவின் நிறுவனத்திற்கு சொந்தமான இடம் மற்றும் கால்நடை பராமரிப்பு துறையின் கீழ் உள்ள மேய்ச்சல் நிலங்கள் தேர்வு செய்யப்பட்டு கால்நடை தீவன வளர்ப்பிற்கு உபயோகப்படுத்த வேண்டும். பால் உற்பத்தியாளர்களுக்கு புதிய கால்நடைகள் வாங்குவதற்கான கடன் வசதி வழங்கிடவும் மேலும் வங்கிகளுடன் இணைந்து 2 இலட்சம் கறவை மாடுகள் புதியதாக வாங்குவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சிறிய பால்பண்ணை அமைக்கவும் அறிவுறுத்தப் பட்டுள்ளது.

தொடக்க பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு ஊக்கத் தொகை வழங்குதல், தமிழ்நாடு முழுவதும் ஆவின் பால் உப பொருட்களின் விலை ஒரே சீராக இருத்தல், பால் உற்பத்தி மற்றும் கொள்முதலை அதிகரித்தல் மற்றும் கொள்முதல் செய்யப்பட்ட பால் ஒன்றியங்களுக்கு வந்தடையும் வழித்தடம் (Route) சரிபார்க்க படவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் பால் வளத்துறை இயக்குநர் மற்றும் ஆவின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் சு.வினீத், பண்டி கங்காதர் முதன்மை விழிப்புக்குழு அலுவலர், பால்வளத்துறை துணை பால் ஆணையர் ரா.இலட்சுமணக் குமார் (இணைப்பதிவாளர்) பால்வளத்துறை மற்றும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் நிருவாகப் பிரிவு, கணக்குப்பிரிவு, விற்பனைப் பிரிவு, திட்டமிடுதல் பிரிவு, கொள்முதல் பிரிவு, விழிப்புக்குழுப் பிரிவு, பொறியியல் பிரிவு, கட்டுமானப்பிரிவு, தர உறுதி, அம்பத்தூர் பால் பண்ணை மற்றும் பால் உப பொருட்கள் பண்ணை, மாதவரம் பால் பண்ணை, சோழிங்கநல்லூர் பால் பண்ணை, மற்றும் இதர பிரிவுகளை சார்ந்த உயர் அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### விடியல் பயணத் திட்டம்

# மலைப் பகுதிகளில் விரைவுபடுத்திட உரிய நடவடிக்கை!

## அமைச்சர் சா.சி. சிவசங்கர் தலைமையில் ஆய்வு!

சென்னை, செப்.1-

முதலமைச்சர் அவர்களால் நடைமுறைப்படுத்தப்பட்ட “விடியல் பயணத் திட்டத்தினை” மலைப்பகுதிகளில் விரிவுபடுத்திட ஏதுவாக ஆய்வு செய்யுமாறு, நேற்று முன்தினம் (30.8.2023) தலைமைச் செயலகத்தில் போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தினார்.

இவ்வாய்வுக் கூட்டத்தில், விடியல் பயணத் திட்டத்தின் வெற்றியைத் தொடர்ந்து அதனை மலைப் பகுதியில் உள்ள மகளிர் அனைவரும் பயன் அடையுமாறு விரிவுபடுத்த ஆய்வு செய்யுமாறு போக்குவரத்துத்துறை அமைச்சர் அறிவுறுத்தினார்கள். மேலும், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணிப்போர் எண்ணிக்கை கொரோனா காலத்திற்கு முந்தைய நிலையை கடந்துள்ளது. புதிய பேருந்துகளை அறிமுகப் படுத்துவதையும், பழைய பேருந்துகளை புதுப்பித்து இயக்கும் பணியினையும் விரைவுப்படுத்திட வேண்டும் என அறிவுறுத்தினார்கள்.

அதனைத் தொடர்ந்து, பணிக்கு வராத பணியாளர்களை, பொதுமக்களின் நலன் கருதி, பணிக்கு தவறாமல் வருகை புரிந்து பேருந்துகளை இயக்கிட ஏதுவாக, அவர்களுடன் கலந்துரையாடுமாறு கேட்டுக் கொண்டார்கள். மேலும், எரிபொருள் செயல்திறன், பேருந்துகள் பயன்பாடு, இருக்கைகள் நிரப்பும் விகிதம், கிலோ மீட்டர் செயல்பாடு, நிதி நிலை செயல்பாடு ஆகியவற்றை குறித்து ஆய்வு செய்தார்கள். மேலும், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழங்களில் உள்ள காலிப்பணியிடங்களை நிரப்பிட ஏதுவாக பணியாளர் நியமனத்திற்காக இணையதளம் மூலம் விண்ணப்பம் சமர்ப்பிக்கும் முறையின் நிலையையும், கருணை அடிப்படையிலான பணி நியமன எண்ணிக்கையை அதிகரிக்க உள்ள சாத்தியக் கூறுகளையும் ஆய்வு செய்தார்கள். அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து அளிக்கப்படும் கோரிக்கைகளின் நிறைவேற்றுதலை ஆய்வு செய்தார்கள்.

உச்ச நீதிமன்றம் மற்றும் பல்வேறு நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுத்திட வேண்டும் என தெரிவித்தார்கள். அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் கூடுதல் வருவாய்க்காக அமைக்கப்பட்டு வரும் பெட்ரோல் மற்றும் டீசல் சில்லரை விற்பனையகங்கள், மின்சாரச் செலவை குறைப்பத ற்காக மேற்கொள்ளப்படும் சூரிய மின் தகடுகள் நிறுவுதலின் தற்போதைய நிலையை குறித்து ஆய்வு செய்து விரைவுபடுத்துமாறு அறிவுறுத்தினார்கள்.

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக உடைமைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய அமைக்கப்பட்டு வரும் CCTV கண்காணிப்பு கேமராக்கள் நிறுவுவதையும், கைரேகை தொழில்நுட்ப வருகைப் பதிவேட்டையும் துரிதப்படுத்த வேண்டும் என கேட்டுக் கொண்டார்கள். 2023ஆம் ஆண்டு சட்டமன்ற கூட்டத் தொடர் அறிவிப்புகளின் அமலாக்க முன்னேற்றத்தினை ஆய்வு செய்தார்கள். மேலும், போக்குவரத்துக் கழகங்கள் வாரியாக உயிரிழப்பு விபத்துக்களின் எண்ணிக்கையை ஆராய்ந்து, அதனை வெகுவாக குறைத்திட நடவடிக்கை எடுத்திட வேண்டும் என்றும் கூறினார்கள்.

அதனைத் தொடர்ந்து, தொலைதூரப் பேருந்து பயணிகள் அனைவரும் இருக்கையை உறுதி செய்து பயணித்திட ஏதுவாக, பேருந்து பயணச் சீட்டு முன்பதிவு வசதியை தேர்ந்தெடுக்க பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டும் என கேட்டுக் கொண்டார்கள். பயணிகள் உதவி எண்ணின் மூலம் பெறப்படும் பொதுமக்களின் குறைபாடுகளுக்கு முன்னுரிமை அளித்து, அதனை உடனடியாக நிவர்த்தி செய்திட வேண்டும் என தெரிவித்தார்கள். மேலும், மழைக் காலம் தொடங்கி விட்டதால் மக்கள் எந்தவித இடர்பாடும் இன்றி பேருந்துகளில் பயணிக்க ஏதுவாக, பேருந்துகளில் உள்ள குறைபாடுகளை போர்க்கால அடிப்படையில் சரி செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

### வேலை வாய்ப்பு அளித்ததில்

# ஒன்றிய பா.ஜ.க. அரசின் மெகா மோசடித்தனம்!

## தினகரன் நாளேடு தலையங்கம்!

சென்னை, செப்.1-

5.50 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு அளித்ததாக ஒன்றிய பா.ஜ.க. அரசு அறிவித்ததையடுத்து, அதிலும் ஒன்றிய அரசு மெகா மோசடித்தனம் செய்துள்ள செய்தி கூட விரைவில் வரலாம் என்று தினகரன் நாளேடு தலையங்கம் எழுதியுள்ளது.

அது வருமாறு :-

2022 அக்டோபர் முதல் இப்போது வரை 5.50 லட்சம் பேருக்கு வேலை வழங்கி விட்டதாக முழங்கியிருக்கிறது மோடி அரசு. இந்த ஆண்டு இறுதிக்குள் 10 லட்சம் பேருக்கு வேலை வழங்கப்படும் என்று உறுதி அளித்து இருக்கிறார்கள். ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை வழங்கப்படும் என்ற வாக்குறுதி தற்போது 10 லட்சம் அளவுக்கு சுருங்கிப்போய் இருப்பது பிரதமர் மோடியின் ஆகச்சிறந்த நிர்வா கம் தான். ஆனால் இப்போது வேலைவாய்ப்பு வழங்கியிருப்பதாக கூறப்பட்டு இருக்கும் 5.50 லட்சம் பேரையும் எப்படி தேர்வு செய்தார்கள், எந்த தேதிகளில் தேர்வுகள் நடத்தப்பட்டது என்று ஆராய்ந்தால் இன்னும் ஒரு மெகா மோசடி வெளியே வரும் போல் தோன்றுகிறது.

ஒன்றிய அரசின் இந்த வேலை வழங்கும் திட் டம் ரோஜ்கார் மேளா என்று அழைக்கப்படுகிறது. எல்லைப் பாதுகாப்பு படை, சிஐஎஸ்எப், சிஆர்பி எப், சிஐஎஸ்எப், எஸ்எஸ்பி, ஐடிபிபி உள்ளிட்ட ஒன்றிய உள்துறை அமைச்சகம் கட்டுப்பாட்டில் இருக்கும்





பல்வேறு காவல் பணிகளிலும், ஒன்றிய அரசின் பல்வேறு துறைகளிலும் இந்த 5.50 லட்சம் பேருக்கும் வேலை வழங்கியிருப்பதாக அறிவிப்பு வெளியிட்டு இருக்கிறது.

ஒன்றிய அமைச்சர் பி.எல். வர்மா கூறுகையில், ‘இதுவரை 5.50 லட்சம் பேருக்கு வேலை வழங்கி விட்டோம். இந்த ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் 10 லட்சம் பேருக்கு வேலை வழங்கி விடுவோம்’ என்கிறார். அதிலும் குறிப்பாக ஒன்றிய உள்துறை அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள காவல் அமைப்புகளில் காலியாக இருந்த 1 லட்சம் பணி யிடங்களில் இதுவரை 87 ஆயிரம் பணியிடங்கள் கடந்த அக்டோபர் முதல் இப்போது வரை நிரப்பி விட்டதாக கணக்கு காட்டப்பட்டு இருக்கிறது. டிசம்பர் மாதத்திற்கு இன்னும் 3 மாதங்கள் உள்ள நிலையில் அதற்குள் 4.50 லட்சம் பணியிடங்கள் நிரப்ப வேண்டும். எப்படி நிரப்ப முடியும்?. கடந்த ஆண்டு அக்டோபர் முதல் இந்த மாதம் வரை 5.50 லட்சம் பேருக்கு எப்படி வேலை வழங்கி இருக்க முடியும்? அதை எப்படி வழங்கினார்கள் என்பது தான் இன்று எழுந்துள்ள கேள்வி.

5.50 லட்சம் பேரை தேர்வு செய்ய ஒன்றிய அரசு தேர்வுக்கான அறிவிப்பு வெளியிட வேண்டும். விண்ணப்பம் பெற வேண்டும். தேர்வர்களுக்கு ஹால் டிக்கெட் வழங்க வேண்டும். தேர்வு மையங்கள் தேர்வு செய்யப்பட்டு, விண்ணப்பித்த நபர்களை வரவழைத்து தேர்வு நடத்தப்பட வேண் டும். அதன் பின் நீ ஆன்சர் வெளியிட்டு, தேர்வு முடிவுகளை வெளியிட வேண்டும். மோடி அரசு இந்த 11 மாதங்களில் நிரப்பி உள்ளதாக அறிவித் துள்ள 5.50 லட்சம் காலியிடங்களுக்கு எப்போது இந்த நடைமுறைகள் பின்பற்றப்பட்டன, எப்போது தேர்வு அறிவிப்பு வெளியிடப் பட்டது? எத்தனை பேர் விண்ணப்பம் செய்தார்கள், எத்தனை பேர் எந்தெந்த தகுதி அடிப்படையில் நியமனம் செய் யப்பட்டார்கள், தேர்வு செய்யப்பட்ட 5.50 லட்சம் பேர் பட்டியல் எங்கே என்றெல்லாம் கேள்வி எழுப்பினால் சிஏஜி அறிக்கையில் வெளியானது போல் வேலை வழங்குவதிலும் இந்த நாட்டின் இளைஞர்களை ஏமாற்றிய மெகா மோசடித்தனம் வெளியே வரலாம்.

இதில் மோடி அரசின் கீழ் கடந்த 9 ஆண்டுக ளில் தகவல் தொழில்நுட்பம், உற்பத்தி, வர்த்தகம், போக்குவரத்து உள்ளிட்ட 9 துறைகளில் 1.50 கோடிக்கும் அதிகமான வேலைகள் உருவாக் கப்பட்டுள்ளன என்று தகவல் வெளியிட்டுள்ளார் ஒன்றிய தொழிலாளர், வேலைவாய்ப்புத் துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ். இப்போது தேர் வானவர்கள் பட்டியலே தெரியாத போது 2030ம் ஆண்டில் சுற்றுலாத்துறையில் மட்டும் 14 கோடி வரை வேலைவாய்ப்பு உருவாகும் என்று ஆசை காட்டியிருக்கிறார் நமது பிரதமர் மோடி.

இவ்வாறு தினகரன் நாளேடு தலையங்கம் எழுதியுள்ளது.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் நடைபெற உள்ள 5ஆவது ஆசிய டேக்வாண்டோ சாம்பியன்ஷிப் போட்டியில் கலந்து கொள்ளும் லோக பிரிதீப் அவர்களுக்கு தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை சார்பில் ரூ.1.75 இலட்சத்திற்கான காசோலையினை நேற்று முன்தினம் (30.08.2023) முகாம் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாதரெட்டி, கலந்துகொண்டனர்.

# பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** ஏன் தம்பி; வரும் நாடாளுமன்றத் தேர்தலை மனதில் வைத்து, சமையல் எரிவாயு சிலிண்டர் விலையை 200 ரூபாய் குறைத்திருக்கிறார்களே ?

**பட்டணம் :** **ஆமாம் அய்யா; 2014ல் பா.ஜ.க. ஒன்றிய ஆட்சி பீடத்தைப் பிடித்து அமருவதற்கு முன், சமையல் எரிவாயு சிலிண்டர் விலை 417 ரூபாய். ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியில் சிலிண்டர் விலை படிப்படியாக ஏற்றப்பட்டு, 1,118 ரூபாயை எட்டியது. விலை உயர்த்தப்பட்ட போதெல்லாம், அந்தப் பழியை எண்ணெய் நிறுவனங்களின் மீது சுமத்தியது பா.ஜ.க. இப்போது தேர்தல் வருகிறது என்றதும், அவர்களாகவே முன்வந்து, கடந்த 9 ஆண்டுகளில் 800 ரூபாய் உயர்த்திவிட்டு, தற்போது அதில் கால்பங்கு அதாவது 200 ரூபாய் குறைத்திருப்பதாக ஒன்றிய அமைச்சர் அனுராக் தாக்கூர் அறிவித்திருக்கிறார்.**

**ஒன்றிய பா.ஜ.க. அரசின் வித்தை காட்டும் விதத்தை, வாக்காளர்கள் நன்றாகவே அறிவார்கள்.**

**இந்த மாதிரி மிட்டாயைக் கொடுத்து, ஏதும் அறியாச் சிறு பிள்ளைகளைத்தான் ஏமாற்ற முடியும்; எல்லா விவரங்களையும் அறிந்திருக்கும் இந்திய வாக்காளர்களை அல்ல!**

**பா.ஜ.க.வின் பெட்டியில் இன்னும் எத்தனை ‘இனிப்பு மிட்டாய்களோ!’.**



நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு நேற்று முன்தினம் (30.08.2023) நெதர்லாந்து நாட்டின் சார்பாக சென்னையில் செயல்படுத்தப்பட உள்ள "1000 ஏரிகள் கொண்ட அபூர்வ சென்னை திட்டத்தினை சென்னை லிட்டில் பிளவர் கான்வென்டில் தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில், அரசு கூடுதல் தலைமை செயலாளர்/ தலைவர், தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம் ஹென்ஸ் ராஜ் வர்மா, அரசு முதன்மை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முனைவர்.தா.கார்த்திகேயன், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் ஆர்.கிர்லோஷ் குமார், நெதர்லாந்து நாட்டின் துணை தூதர்கள் ஹெங்க ஓவிங்க் (Henk Ovink), எவுட் டி விட் (Ewout de Wit), ஜெர்மன் நாட்டின் துணை தூதர் திருமிகு.மைக்கேல் குச்லர் (Michaela Kuchler), இத்திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமிகு. ஏவா ஃபென்னஸ் (Ev Pfannes) ஆகியோர் கலந்து கொண்டனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் லார்சன் & டூப்ரோ (Larsen & Toubro) நிறுவனத்தின் சார்பாக "தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளைக்கு ரூ.1 கோடிக்கான காசோலையை லார்சன் & டூப்ரோ நிர்வாகிகள் நேற்று முன்தினம் (30.08.2023) முகாம் அலுவலகத்தில் வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, , தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாதரெட்டி, கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு சார்பில்

# ‘நீட்’ எதிர்ப்புப் போராளிகளுக்கு வணக்கம் செலுத்தும் நிகழ்வில், பெருந்திரளாய் பங்கேற்பீர்!

## கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

சென்னை, செப்.1-

தமிழ்நாட்டு மாணவர்களின் மருத்துவராகும் கனவை சிதைத்து உயிர் கொல்லியாக உருவெடுத்துள்ள நீட் தேர்வு திணிப்பை எதிர்த்து முதல் களபலியாய் உயிர்நீத்த அன்புத் தங்கை அனிதாவின் நினைவு நாள் செப்டம்பர் 1. அரியலூர் அனிதாவில் தொடங்கிய நீட் தேர் வால் ஏற்பட்ட மரணம், குரோம்பேட்டை ஜெகதீஸ்வரன் வரை தொடர்கிறது.

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான கழக அரசு, நீட் தேர்வை தமிழ் நாட்டிலிருந்து ஒழித்துக் கட்ட அனைத்து வகையான முயற்சிகளையும் முன்னெடுத்து வருகிறது. அதற்கான காலம் வெகு தொலைவில் இல்லை. எனவே, மாணவச் செல்வங்கள் தன்னம்பிக்கையுடனும் - மன உறுதியுடனும் பொறுமை காத்திருக்க வேண்டுகிறோம்.

நீட் எதிர்ப்பு போராளிகளுக்கு வீரவணக்கம் செலுத்தும் நிகழ்வை தமிழ்நாடு மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு (FSOTN) சார்பில், அனைத்து மாவட்டங்களிலும் கல்லூரிகளிலோ அல்லது தந்தை பெரியார் சிலை, அண்ணல் அம்பேத்கர் சிலை, பேரறிஞர் அண்ணா சிலை ஆகியவற்றின் முன்பாகவோ நீட் எதிர்ப்புப் போராளி தங்கை அனிதாவின் படத்தை வைத்து மலரஞ்சலி செலுத்திட முடிவெடுக்கப்பட்டுள்ளது.

எனவே, கழக மாணவர் அணியின் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் அந்தந்த மாவட்டத்திலுள்ள தமிழ்நாடு மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு (FSOTN) தோழர்களுடன் இணைந்து, கழக மாணவர் அணியின் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் நிர்வாகிகள், கல்லூரி மாணவர் அமைப்புகளின் நிர்வாகிகளுடன் பெருமளவில் பங்கேற்று, நீட் எதிர்ப்பு போராளிகளுக்கு அஞ்சலி செலுத்துமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கழக மாணவர் அணி செயலாளர் சி.வி.எம். பி. எழிலரசன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

### தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்

# மின்னல் கந்தப்பன் இல்ல திருமண வரவேற்பு!

## அமைச்சர்கள் - கழகத்தினர் வாழ்த்துகின்றனர்

சென்னை, செப். 1 -

சென்னை தெற்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர் மின்னல் கந்தப்பன் புதல்வர் திருமண வரவேற்பு நிகழ்ச்சி இன்று நடைபெறுகிறது. இதில் அமைச்சர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு வாழ்த்துகின்றனர்.

தி.மு.கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், கழக இளைஞர் அணிச் செயலாளரும் - இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரது நல்வாழ்த்துக்களுடன் சென்னை தெற்கு மாவட்டக் கழக தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் மின்னல் கந்தப்பனின் புதல்வர் கே.ஹேமகுமார் என்பவருக்கும், (USA) கொலரடோ மாநிலம், டெண்வர் நகரில் வசிக்கும் மைக்கேல்அனெட் ஆகியோரின் புதல்வி குமாரத்தி லாரன் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சி இன்று (01-09-2023 வெள்ளிக்கிழமை) மாலை 6 மணியளவில் சென்னை 600 004, கிருஷ்ணா ஹால் IV, 2வது தளத்தில் நடைபெறுகிறது.

இம்மணவிழா வரவேற்பு நிகழ்ச்சியில் தமிழ்நாடு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினரகள் - சென்னை மாநகராட்சி மேயர், துணை மேயர், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள், பகுதிக் கழகச் செயலாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள், கழக முன்னணியினர் கலந்து கொண்டு வாழ்த்துகின்றனர்.

### திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்தநாள் விழா நிகழ்ச்சிகள் (ஜூன்-2023 - ஜூன் 2024) செப்டம்பர் - 2023 நிகழ்வு!



## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அறிவிப்பு!

| நாள் /நேரம் | நிகழ்ச்சிகள் | நிகழ்ச்சி ஏற்பாடு | தலைமை | சிறப்பு அழைப்பாளர்கள் |
|---|---|---|---|---|
| 3/09/23 11.00 பகல் | மாவட்ட அளவிலான கைப்பந்து போட்டி | மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி | ஆ.ஜான் சாலமன் மாவட்ட அமைப்பாளர் கே.லோகநாதன் மாநகர அமைப்பளர் | தயாநிதிமாறன் எம்.பி. மாநில அணி செயலாளர் |
| 3/09/23 7.00 மாலை | மாநில அளவிலான மாபெரும் கபாடி போட்டி | மணப்பாறை ஒன்றியம் | சி.ராமசாமி ஒன்றிய செயலாளர் | தயாநிதிமாறன் எம்.பி. மாநில அணி செயலாளர் |
| 6/09/23 06.00மாலை | தலைவர் கலைஞருக்கு புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | வார்டு எண் 15,15A மலைக்கோட்டை பகுதி | எம்.ஆர்.சி.சந்திரன் கே.சண்முகம் | சைதை சாதிக் தலைமை கழக பேச்சாளர் |
| 10/09/23 06.00மாலை | தலைவர் கலைஞருக்கு புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | வார்டு எண் 41,41A திருவெறும்பூர் பகுதி | விபி.கருணாகரன் அப்பு கருணாநிதி | போடி காமராஜ் தலைமை கழக பேச்சாளர் |
| 16/09/23 6.00 மாலை | தலைவர் புகழ் பரப்பும் பொதுக்கூட்டம் | வையம்பட்டி வடக்கு ஒன்றியம் | ஆர்.ஸ்ரீரங்கன் ஒன்றிய செயலாளர் | அர.சக்கரபாணி திண்டுக்கல் மேற்கு மாவட்ட செயலாளர் |
| 17/09/23 6.00மாலை | தலைவர் கலைஞருக்கு புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | வார்டு எண் 61,61A கலைஞர் நகர் பகுதி | பி.ஜாபர் அலி சி.சாமுவேல் ராஜா | தூத்துக்குடி சரத் பாலா தலைமை கழக பேச்சாளர் |
| 22/09/23 4.00மாலை | தலைவர் கலைஞர் உருவாக்கிய மாணவர் மன்றம் கல்லூரிகளில் துவங்குதல் | மாவட்ட - மாநகர மாணவர் அணி | கா.முத்து வெங்கடேஷ் ஏ.எம்.அசாருதீன் | சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. மாநில அணி செயலாளர் |
| 23/09/23 10.00காலை | மாவட்ட, மாநகர மீனவரணி சார்பில் மீன்பிடி மற்றும் மீன் வியாபார தொழிலாளர்களுக்கு கலைஞர் உருவம் பொரித்த மேலாடைகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வு | மாவட்ட, மாநகர மீனவரணி | S.சாந்தகுமாரி S.N.செய்யது பாவா பகுருதீன் | டாக்டர்.A.ஜோசப் ஸ்டாலின் மாநில அணி செயலாளர் |
| 23/09/23 6.00மாலை | தலைவர் புகழ் பரப்பும் பொதுக்கூட்டம் | அரியமங்கலம் பகுதி | ஏ.எம்.ஜி.விஜய குமார் | தா.மோ.அன்பரசன் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளர் |
| 24/09/23 11.00காலை | திருவெறும்பூர் தெற்கு ஒன்றியத்தில் அமைத்துள்ள 9 ஊராட்சிகளில் தலைவர் கலைஞர் நூற்றாண்டு கல்வெட்டு திறப்பு மற்றும் கொடியேற்று விழா | திருவெறும்பூர் தெற்கு ஒன்றியம் | சி.கங்காதரன் ஒன்றிய செயலாளர் | மாவட்ட கழக செயலாளர் |

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி**
செயலாளர்
திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.

### தஞ்சாவூர் மாவட்டத்தில் மரம் விழுந்து உயிரிழந்த

# மாணவியின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

தஞ்சை, செப். 1-

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம், பசுபதிகோவில்1 கிராமத்தில் உள்ள தனியார் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பயின்று வரும் மாணவிகள் பாபநாசம் வட்டம், உள்ளிக்கடை, கண்டகரையத்தைச் சார்ந்த செல்வி. சுஷ்மிதாசென், த/பெ. செந்தில்குமார் (வயது15) மற்றும் பாபநாசத்தைச் சேர்ந்த செல்வி.இராஜேஸ்வரி, த/பெ.கந்தன் (வயது 15) ஆகிய இருவர் மீதும் 29.8.2023 அன்று மாலை பெய்த மழை மற்றும் காற்றின் காரணமாக பள்ளியின் அருகிலுள்ள மரம் வேரோடு சாய்ந்து விழுந்ததில் செல்வி.சுஷ்மிதாசென் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வருத்தமடைந்தேன்.

மேலும் இவ்விபத்தில் படுகாயமடைந்து தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள செல்வி.இராஜேஸ்வரிக்கு சிறப்பு சிகிச்சை அளிக்க அறிவுறுத்தியுள்ளேன்.

மாணவி செல்வி.சுஷ்மிதாசென்னை இழந்து வாடும் பெற்றோருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதல்களையும் தெரிவித்துக்கொள்வதோடு அவரது குடும்பத்தினருக்கு ஐந்து இலட்சம் ரூபாயும், படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் செல்வி.இராஜேஸ்வரிக்கு ஒரு இலட்சம் ரூபாயும் நிதியுதவி வழங்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

### மூலனூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் 269 மாணவ, மாணவியர்களுக்கு

# ரூ.13.00 இலட்சம் மதிப்பீட்டில் விலையில்லா மிதிவண்டிகள்!

## அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் வழங்கினார்!

திருப்பூர், செப். 1 -

ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் மூலனூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் 05 அரசு மேல்நிலைப் பள்ளியில் பயிலும் 269 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.13.00 இலட்சம் மதிப்பீட்டில் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார்.

ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் மாவட்ட வருவாய் அலுவலர் த.ப.ஜெய்பீம் தலைமையில், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர், தெற்கு மாவட்டக் கழக செயலாளர் இல.பத்மநாபன் முன்னிலையில் திருப்பூர் மாவட்டம், மூலனூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் மூலனூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 85 மாணவர்களுக்கும், மூலனூர் அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 56 மாணவர்களுக்கும், கன்னிவாடி அரசு மேல்நிலைப்பள்ளியல் பயிலும் 80 மாணவர்களுக்கும், வடுகப்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 16 மாணவர் களுக்கும், புதுப்பை அரசு மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 32 மாணவர்களுக்கும் என மொத்தம் 269 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.13,00,040/ மதிப்பீட்டில் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார்.

அமைச்சர் தெரிவித்ததாவது: முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதலிருந்து பள்ளிக்கல்வித் துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை செயல் படுத்தி வருகிறார்கள். குறிப்பாக மாணவ, மாணவியர்களின் திறன்களை அறிந்து வழிகாட்டுதலுக்காக நான் முதல்வன் என்கின்ற சிறப்பான திட்டத்தை செயல் படுத்தி வருகிறார்கள். மேலும், புதுமைப் பெண் திட்டத்தின் கீழ் அரசு பள்ளிகளில் பயின்று பட்டப்படிப்பிற்குச் செல்லும் மாணவியர்களுக்கு அவர்களது வங்கி கணக்கிற்கு மாதம் ரூ.1,000/ செலுத்தப்பட்டு வருகிறது. முதலமைச்சர் அவர்கள் பள்ளிக்கல்வித் துறையிலும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையில் அதிகம் கவனம் செலுத்தி வருகிறார்கள். ஒன்று அறிவார்ந்த சமூகத்தை உருவாக்குவது மற்றொன்று ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்குவது, இந்த இரண்டும் நாட்டின் வளர்ச்சிக்கு மிக முக்கிய பங்கு வகிக்கிறது. ஆரம்பப் பள்ளி முதல் அனைத்து பள்ளிகளிலும் எண்ணற்ற திட்டங்கள் செயல்படுத்தப் பட்டு வருகிறது. அரசு பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கு புத்தகம், புத்தக பை, சீருடை போன்ற 13 பொருட்கள் வழங்கப் பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் அனைத்து பள்ளிகளிலும் மதிய உணவுத் திட்டம் சிறப்பாக செயல் பட்டு வருகிறது. முதலமைச்சர் அவர்கள் சிறப்பு திட்டங்களில் ஒன்றான முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை விரிவுப்படுத்தி 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் அரசு பள்ளி மாணவர்கள் பயன்பெறும் வகையில் 25.08.2023 அன்று துவக்கி வைத்தார்கள். அனைத்து குழந்தைகளும் சத்துகுறைவின்றி கல்விகற்க வேண்டும். அனைத்துக் குழந்தைகளுக்கு கல்வி வழங்க வேண்டும். மேலும் 11 மற்றும் 12 ஆம் வகுப்பு படிக்கும் மாணவ, மாணவியர்களுக்கு மிதிவண்டி வழங்கப் படுகிறது. அனைத்து குழந்தைகளும் கல்வி கற்க வேண்டும் என்பது அவர்களது உரிமை. கல்வி தான் வாழ்வை மேன்மையடைய செய்யும். மேல்நிலை வகுப்புகள் பயின்று வரும் மாணவ, மாணவியர்கள் நாம் என்ன படிக்க வேண்டும் என்று முயற்சி எடுத்தால் அதற்கான அத்தனை வாய்ப்புக்களையும் முதலமைச்சர் அவர்கள் செய்துதர தயராக உள்ளார்கள். இது போன்ற வாய்ப்புகளை மாணவர்களாகிய நீங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அனைத்து மாணவர்களும் உயர்கல்வி கற்க வேண்டும் என்ற அடைப் படையில் தாராபுரத்தில் அரசு கலைக் கல்லூரி உருவாக்கப்பட்டது. ஒரு அறிவார்ந்த சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்றால் அதற்கு கல்வி அடிப்படையாகும். கல்வியினால் அறிவைப் பெறலாம், பொருளாதரத்தில் முன்னேற்றம் அடையலாம். நமது உரிமையை பெறுவதற்கு கல்வி மிகவும் அவசியம். மாணவர்களாகிய நீங்கள் எதிர்காலத்தை தீர்மானிக்க கூடியவர்களாக இருக்கிறீர்கள். இந்த காலகட்டத்திற்கு ஏற்றார் போல் புதிய தொழில் நுட்பங் களுடன் கூடிய கல்வி முறைகள் மாறி வருகிறது. நமது எதிர்காலத்திற்கு எந்த படிப்பு தேவையோ அதை படித்து வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ந.கீதா, மாவட்ட கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள்) ஆனந்தி, ஒன்றியக் கழக செயலாளர்கள் மூலனூர் ஒன்றியக்குழு துணைத்தலைவர் ப.பழனிசாமி, துரை தமிழரசு, மூலனூர் பேரூராட்சி தலைவர், பேரூர் கழக செயலாளர் க.தெண்டபாணி, கன்னிவாடி பேரூர் கழக செயலாளர் சுரேஷ், மூலனூர் ஒன்றியக்குழு பெருந்தலைவர் கா.சுமதி, கன்னிவாடி பேரூராட்சி தலைவர் ரேவதி சுரேஷ் உள்பட மாவட்ட, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர் கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மாணவ, மாணவியர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### சிகிச்சை முடிந்து

# அமைச்சர் மா.சுப்பிரமணியன் வீடு திரும்பினார்!

சென்னை, செப். 1 -

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (30.08.2023) அதிகாலை நடைப்பயிற்சி முடித்து விட்டு பார்வையாளர்களை சந்திக்கும் போது தலைசுற்றல் ஏற்பட்டது.

உடனடியாக கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டு தேவையான மருத்துவ பரிசோதனைகள் செய்யப்பட்டது.

பரிசோதனையின் அடிப்படையில் அவர் தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டு (Coronary angiog ram) இருதய இரத்த நாள பரிசோதனை செய்ததில் குறிப்பிடத்தக்க அடைப்பு எதுவும் இல்லை என தெரியவந்துள்ளது.

அமைச்சர் மா.சுப்பிரமணியனுக்கு மருத்துவ சிகிச்சை போதுமானது என்று முடிவு எடுக்கப் பட்டு, நேற்று முன்தினம் பகல் 2.10 மணியளவில் மருத்துவமனையிலிருந்து இல்லம் திரும்பினார்.



மதுரை மாநாட்டில் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களையும், கழக துணைப் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி அவர்களையும், இழிவுபடுத்தும் வகையில் அவதூறு பரப்பிய எடப்பாடி பழனிசாமி மீது நடவடிக்கை எடுக்கக் கோரி தருமபுரி மேற்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் திருமதி.கவிதா மோகன்தாஸ், கிழக்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் திருமதி.முத்துலட்சுமி மற்றும் கழக மகளிர் அணி நிர்வாகிகள், மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் ஸ்டீபன் ஜேசுபாதத்திடம் புகார் மனு அளித்தனர்.

# இளைஞர்களின் உற்சாக எழுச்சி கண்டேன்! அளவற்ற மகிழ்ச்சி கொண்டேன்!

## கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் - 5 நாட்கள் இளைஞர் அணிச் செயல்வீரர்கள் கூட்ட எழுச்சிப் பயணம் குறித்த நெகிழ்ச்சிப் பதிவு!

**கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், கடந்த 5 நாட்களாக பல்வேறு மாவட்டங்களில் சூறாவளி சுற்றுப் பயணம் மேற்கொண்டு, கழக இளைஞர் அணியின் மாபெரும் செயல்வீரர்கள் கூட்டங்களிலும், அரசுப் பணிகளை ஆய்வு செய்திடும் ஆய்வுக் கூட்டங்களிலும் பங்கேற்று உரையாற்றி வந்ததறிவோம்!**

**மேலும் அம்மாவட்டங்களில் அண்மையில் மறைவுற்ற கழக முன்னோடிகளின் இல்லங்களுக்குச் சென்று, அவர்களின் திருவுருவப் படங்களுக்கு மலரஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்கள்.**

**சென்ற இடங்களிலெல்லாம் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை வரவேற்கவும், அவரது உரை கேட்கவும் திரண்ட கூட்டம், கழக இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாட்டின் மகத்தான வெற்றிக்குக் கட்டியங் கூறின எனின் அது மிகையல்ல!**

**தாம் சுற்றுப்பயணம் மேற்கொண்டு பங்கேற்ற நிகழ்ச்சிகள், அவைகளில் காணப் பெற்ற எழுச்சி, அரசுத் துறைப் பணிகளின் ஆய்வு குறித்து விளக்கி அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், இளைஞர் அணி அடலேறுகளுக்கு அழகுறு கடிதமொன்று தீட்டியுள்ளார்.**

**உணர்ச்சியும் எழுச்சியும் மிகுந்த அக்கடிதம் வருமாறு:-**

செயல் வீரர்கள்!

வணக்கம்!

“5 நாட்களில் 16 கழக மாவட்டங்களில் சூறாவளி சுற்றுப்பயணம்” என்கிறார்கள். நான் சூறாவளியாகச் சுற்றிச் சுழன்றேன் என்பதைவிடக் குறுகிய கால இடைவெளியில் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களை மாவட்ட வாரியாக அணிதிரட்டும் வல்லமை பெற்றது இந்தக் கழகம் என்பதுதான் நமக்கான பெருமை.

சேலத்தில் நடைபெற உள்ள கழக இளைஞர் அணியின் 2வது மாநில மாநாட்டுக்கு இளைஞர்களைத் தயார்படுத்தும் வகையில், மாவட்ட வாரியாக ‘இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம்’நடத்தலாம் எனத் திட்டமிட்டோம்.

### செயல்வீரர்கள் கூட்டம் நடத்தத் தூண்டிய காஞ்சிபுரம் கூட்டம்!

முதல் கூட்டத்தைக் கடந்த 19ஆம் தேதி காஞ்சிபுரம் மாவட்டத்தில் நடத்தினோம். அங்கு கூடிய இளைஞர்களின் எழுச்சிதான் அனைத்து மாவட்டங்களிலும் ‘செயல்வீரர்கள்’ கூட்டத்தை நடத்த வேண்டும் என்ற உற்சாகத்தை எங்களுக்குத் தந்தது.

திருமணம் உள்பட பல்வேறு நிகழ்ச்சிகளுக்காக 25ஆம் தேதி வருவதாக ஒப்புக்கொண்டிருந்த தஞ்சாவூர் மாவட்டத்திலிருந்தே அடுத்தடுத்த செயல்வீரர் கூட்டங்களை நடத்துவோம் என முடிவு செய்து மாவட்டக் கழகச் செயலாளர்கள், இளைஞர் அணி நிர்வாகிகளுக்குத் தகவல் தெரிவித்தோம். மேலும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அரசு ஆய்வுக் கூட்டம் உள்பட பல்வேறு நிகழ்ச்சிகளுக்கும் திட்டமிட்டு நேரம் ஒதுக்கினோம்.

`20ஆம் தேதிதான் நீட் தேர்வை ரத்து செய்யக்கோரி, தமிழ்நாடு முழுவதும் இளைஞர்களைக் கூட்டி மிகப்பெரிய உண்ணாநிலை அறப்போராட்டத்தை நடத்தியுள்ளோம். மீண்டும் செயல்வீரர்கள் கூட்டம் என்றால், இளைஞர்கள் திரளாகக் கலந்து கொள்ள வருவார்களா?’ என்ற சந்தேகம் எங்களுக்குள் இருந்தது.

### தஞ்சை திலகர் திடலில் கட்டுக்கடங்கா இளைஞர் கூட்டம்!

ஆனால், அந்தச் சந்தேகங்களை எல்லாம் பொய்யாக்கும் விதமாக அமைந்திருந்தது தஞ்சாவூர் திலகர் திடலில் நடைபெற்ற செயல்வீரர்கள் கூட்டம். திலகர் திடல் என்பது பெரியார், அண்ணா, கலைஞர், கழகத் தலைவர் உள்பட பலர் கூட்டம் நடத்திய வரலாற்றுச் சிறப்புமிக்க இடம். அந்த இடத்தில் நடைபெற்ற கூட்டத்தில் முதன்முதலாக நான் கலந்து கொள்வதும், அது இளைஞர் அணிச் செயல்வீரர்கள் கூட்டமாக அமைந்ததும் மகிழ்ச்சியாக இருந்தது.

திடல் முழுவதும் இளைஞர்களின் தலைகளாகக் காட்சியளிக்கும் வகையில் கட்டுக்கடங்கா கூட்டம். ‘2024 நாடாளுமன்றத் தேர்தலில் கழகத்தின் வெற்றிக்கு அச்சாரமிடும் வகையில், சேலம் மாநாடு அமைந்திட வேண்டும்’ என்று உரையாற்றினேன்.

### கழக அரசின் திட்டங்களுக்கு வரவேற்பாய் திரண்ட கூட்டம்!

தஞ்சாவூர் செயல்வீரர் கூட்டத்தை முடித்துக்கொண்டு திருவாரூர் கூட்டம். முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டை யொட்டி நம் கழகத் தலைவர் திறந்துவைத்த ‘கலைஞர் கோட்டம்’ அருகே கூட்டம். போடப்பட்டிருந்த நாற்காலிகளில் இடமில்லாமல் சுற்றிலும் இளைஞர்கள் கூடி நின்றனர். நாம் பேசபேச அவர்களிடம் அவ்வளவு ஆரவாரம்.

‘இவர்களில் பல இளைஞர்களை நாங்கள் கழகக் கூட்டங்களில் பார்த்ததில்லை. நீங்க வர்றீங்கனு ஆர்வத்தோட வந்திருக்காங்க’ என்றனர் நம் நிர்வாகிகள். கழகத் தலைவர் அவர்களின் தலைமையிலான அரசுக்கும், மாணவர்களை, இளைஞர்களை மையமாக வைத்து, அது செயல்படுத்தும் நலத்திட்டங்களுக்கும் கிடைத்த வரவேற்பே இந்தக் கூட்டம் என்பதை உணர முடிந்தது.

26ஆம் தேதி காலை ‘கள ஆய்வில் முதலமைச்சர்’ என்ற திட்டத்தின் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நாகப்பட்டின மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆய்வுக் கூட்டம். தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை ஆகிய 4 காவிரி டெல்டா மாவட்டங்களில் செயல்படுத்தப்படும் மக்கள் நலத்திட்டங்கள் குறித்து ஒவ்வொரு துறை வாரியாக விரிவாக நடைபெற்றது இந்த ஆய்வுக் கூட்டம். முதலமைச்சர் அவர்கள் மக்களின் மீது வைத்துள்ள அன்பின் வெளிப்பாடு என்றால், அது மிகையல்ல.

### மாநாடுபோல் நடைபெற்ற நாகை செயல்வீரர்கள் கூட்டம்!

மாலையில், நாகப்பட்டினம் நகரக் கழக முன்னாள் செயலாளர் சமீபத்தில் மறைந்த அண்ணன் `போலீஸ்’ பன்னீர் அவர்களின் இல்லம் சென்று அவரின் திருஉருவப் படத்துக்கு மரியாதை செய்தோம். நாகையில் கழகம் வளர்த்த அவரின் உழைப்பையும் அர்ப்பணிப்பையும் கேள்விப்பட்டிருக்கிறேன் என்பதால், அவரின் இல்லத்துக்கு என்னை அழைத்துச் செல்லவேண்டும் என்று சென்னையில் இருந்து கிளம்பும் முன்பே மாவட்டக் கழகச் செயலாளரிடம் கேட்டுக்கொண்டிருந்தேன்.

**இந்த செயல்வீரர் கூட்டங்களை ஒருங்கிணைத்து, மாநாட்டுக்கு நிதியளித்த மாண்புமிகு அமைச்சர்கள் அண்ணன் நேரு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், ரகுபதி, மெய்யநாதன், சிவசங்கர், அன்பில் மகேஷ் பொய்யாமொழி, கணேசன், மாவட்டக் கழகச் செயலாளர்கள் அண்ணன்கள் சுந்தர், எஸ். கல்யாணசுந்தரம், துரை.சந்திரசேகரன், அண்ணாதுரை, பூண்டி கலைவாணன், காடுவெட்டி தியாகராஜன், கௌதமன், நிவேதா முருகன், காரைக்கால் நாஜிம், செல்லபாண்டியன். குன்னம் ராஜேந்திரன், வைரமணி ஆகியோருக்கும், அரசு ஆய்வுக் கூட்டங்களை ஒருங்கிணைத்த சிறப்புத் திட்ட செயலாக்கத் துறைச் செயலாளர் மருத்துவர் தாரேஷ் அகமது ஐ.ஏ.எஸ். அவர்களுக்கும் நன்றி.**

அதேபோல் நாகையின் முன்னாள் நகரக் கழக செயலாளர் மறைந்த வீராசாமி அவர்களின் திருஉருவப் படத்துக்கும் மரியாதை செய்தோம். அண்ணன் பன்னீர், வீராசாமிபோன்ற மூத்த முன்னோடிகளின் உழைப்பில் இருந்து இளைஞர் அணியினர் நாம் பாடம் கற்க வேண்டும்.

அடுத்து நாகை அவுரித் திடலில் இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டம். கழகத் தலைவர் அவர்கள் அரசுப் பணிகளுக்காக 3 நாட்களாக நாகையில் இருந்தார். அதற்கான முன்னேற்பாடு, வரவேற்பு எனப் பல பணிகளுக்கு நடுவிலும் செயல்வீரர் கூட்டத்தை மாநாடு போல் நடத்திக்காட்டினார், மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் கௌதமன்.



நாகப்பட்டினம் செயல்வீரர் கூட்டத்தை முடித்துக்கொண்டு மயிலாடுதுறை புறப்பட்டோம். அங்கு சீனிவாசபுரத்தில் மயிலாடுதுறை, காரைக்கால் மாவட்டங்களுக்கான செயல்வீரர்கள் கூட்டம். “நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்று சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு ஆதரவு தெரிவித்த அ.தி.மு.க., அதன்பிறகு அமைதி காப்பது ஏன்? நீட் தேர்வுக்கு ஆதரவாக ஆளுநர் கருத்து கூறும்போதெல்லாம் அதற்கு ஏதாவது கண்டனம் தெரிவித்துள்ளார்களா? சமீபத்தில், மாநாடு என்ற பெயரில் ஆடலும் பாடலும் கலைநிகழ்ச்சி நடத்தினார்களே, அதிலாவது நீட் தேர்விலிருந்து தமிழ்நாட்டுக்கு விலக்கு அளிக்க வேண்டும் என்று ஒன்றிய அரசை வலியுறுத்தினார்களா?” என்று அ.தி.மு.க.வின் நாடக அரசியல் குறித்துக் கேள்வி எழுப்பினேன்.

26ஆம் தேதி தஞ்சாவூரில் தங்கிவிட்டு 27ஆம் தேதி காலை ஏற்கெனவே ஒப்புக்கொண்டிருந்த நிகழ்ச்சிகளுக்காக பட்டுக்கோட்டை புறப்பட்டோம். வர்த்தகர் அணி துணைத் தலைவர் அண்ணன் பழஞ்சூர் செல்வம் அவர்களின் மகள் திருமண விழா, நகர்மன்ற முன்னாள் உறுப்பினர் பரமேஸ்வரன் அவர்களின் இல்ல திருமண விழா, தஞ்சாவூர் தெற்கு மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் ரமேஷ் அவர்களின் புதுமனைப் புகுவிழா, மூத்த முன்னோடிகளுக்குப் பொற்கிழி, மாணவர்களுக்குக் கல்வி உதவித் தொகை வழங்குதல் எனப் பட்டுக்கோட்டையில் காலை முதல் மாலை வரை தொடர் நிகழ்ச்சிகள்.

பட்டுக்கோட்டை நிகழ்ச்சிகளை முடித்துவிட்டு அங்கிருந்து புதுக்கோட்டை புறப்பட்டோம். புதுக்கோட்டை மாவட்டக்கழக முன்னாள் செயலாளர் மறைந்த சிதம்பரம் அவர்களின் மனைவியார் ராஜேஸ்வரி அம்மையார் சமீபத்தில் மறைவுற்றார். அவரின் இல்லம் சென்று ராஜேஸ்வரி அம்மையாரின் திருஉருவப் படத்துக்கு மரியாதை செய்தோம்.

### ‘பாசிச ஆட்சிக்கு முடிவு கட்டுவோம்’ என புதுகையில் உரை!

அங்கிருந்து நேராகப் புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்டங்களுக்கான செயல்வீரர் கூட்டம். “இனக் கலவரத்தால் பற்றி எரியும் மணிப்பூர் மாநிலத்துக்குச் செல்லாத மாண்புமிகு ஒன்றிய பிரதமர் மோடி அவர்கள், அதுகுறித்த கேள்விகளுக்குப் பதிலளிக்க அவரை நாடாளுமன்றம் வரவைப்பதே பெரும்பாடாக உள்ளதையும், நாடாளுமன்றத்தில் கேள்விகளுக்கு அஞ்சும் ஒரு பிரதமரை இப்போதுதான் நாடு பார்க்கிறது” என்பதையும் எடுத்துக்கூறி, “அதற்கு ஒரே தீர்வு ஒன்றியத்தில் ஆட்சி மாற்றம். அதற்கு உறுதியேற்கும் நாளாக நம் மாநாடு அமையட்டும்!” என்று புதுக்கோட்டையில் உரையாற்றினேன்.

அதைத்தொடர்ந்து திருச்சிக்கு விரைந்தோம். ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டத்துக்கான செயல்வீரர் கூட்டம், கலைஞர் அறிவாலயத்தில் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. அரங்கத்தின் உள்ளேயும், வெளியேயும் இளைஞர்கள் நிரம்பி வழிந்தனர். ‘மாநாட்டு மன்னன்’ என்று போற்றப்படும் மாண்புமிகு அண்ணன் நேரு அவர்கள்தான் சேலம் இளைஞர் அணி மாநாட்டுக்கும் பொறுப்பாளர். “மாநாட்டுக்கான நிதியை நான் இப்போது அறிவிக்கப்போவதில்லை. மாநாட்டுப் பந்தலிலேயே அதை அறிவிப்பேன்” என்றார் நேரு அண்ணன்.

### அண்ணன் நேருவின் ஏற்பாட்டில் சேலம் மாநாடும் வாகை சூடும்!

“நேரு அண்ணன் அவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற அனைத்து மாநாடுகளுமே வெற்றிதான். அந்த வகையில், சேலம் மாநாடும் மிகப்பெரிய வெற்றிபெறும்” என்ற என் நம்பிக்கையை இளைஞர்களிடம் எடுத்துக்கூறி, “2024ஆம் ஆண்டு நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன் நடைபெற உள்ள இந்த மாநாட்டை வெற்றிபெற வைப்பது செயல் வீரர்களான நம் இளைஞர்கள் ஒவ்வொருவர் கையிலும்தான் உள்ளது” என்று உரையாற்றினேன்.

**இளைஞர் அணி பணிகளை ஒருங்கிணைக்க தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்ட துணை பொதுச்செயலாளர் மண்ணின் மைந்தன் அண்ணன் ஆ.ராசாவின் கழகப் பணிகளையும், மக்கள் பணிகளையும் எடுத்துக்கூறி உரையாற்றினேன். “35 வயதில் ஒன்றிய அமைச்சர், மாவட்டக் கழகச் செயலாளர் என்பது அண்ணனின் உழைப்பின் மீதும் கொள்கைப் பற்றின் மீதும் கலைஞர் வைத்திருந்த நம்பிக்கைக்குச் சான்று. கழகத்தின் மீது அவப்பெயர் ஏற்பட வேண்டும் என்பதற்காகவே தொடரப்பட்ட 2ஜி வழக்கில் அண்ணன் ஆ.ராசா அவர்கள் ஒரு வாய்தாகூட வாங்காமல் அவரே வாதாடி வென்றார். ஆனால் சொத்துக்குவிப்பு வழக்கில் அம்மையார் ஜெயலலிதா அவர்கள் 125 வாய்தா வாங்கியும் தோற்றார்” என்றேன். அதை இளைஞர்கள் கரவொலி எழுப்பி ஆமோதித்தனர்.**

செயல்வீரர்கள் கூட்டத்தை முடித்துவிட்டு, திருச்சி தனியார் மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வரும் தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வெங்கடேஷ்குமாரைச் சந்தித்து நலம் விசாரித்தோம். `எந்த உதவி தேவை என்றாலும், அழைக்கவும்’ என்று நம்பிக்கை தெரிவித்தோம்.

### அன்பில் பொய்யாமொழி மாமா திருவுருவப் படத்துக்கு மலரஞ்சலி!

அன்று இரவு, திருச்சியில் தங்கிவிட்டு மறுநாள் 28ஆம் தேதி, அன்பில் பொய்யாமொழி மாமா அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு, தெற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த அவரின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்தோம். கழகத் தலைவர் அவர்கள் இளைஞர் அணிச் செயலாளராக இருந்தபோது துணைச் செயலாளராக இருந்து கழகத்தை வளர்த்தெடுத்த அவரின் பணிகளை நினைவு கூர்ந்தோம். அதே வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த சேலம் இளைஞர் அணி மாநில மாநாட்டுக்கான கவுன்ட் டவுண் ‘டைமரை’ தொடங்கி வைத்தோம்.

பிறகு, அங்கிருந்து அரியலூர் புறப்பட்டோம். அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வாரந்தோறும் திங்கட்கிழமை நடைபெறும் குறைதீர்ப்பு முகாமில் கலந்து கொண்டு மக்களின் கோரிக்கை மனுக்களைப் பெற்றோம். அதைத்தொடர்ந்து அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி, அதன்பிறகு மாவட்டத்தில் நடைபெற்று வரும் பல்வேறு மக்கள் நலத்திட்டப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தை நடத்தினோம்.

அரியலூரில் இருந்து பெரம்பலூர் செல்லும் வழியில் அரியலூர்செந்துறை இடையிலான இரு வழிச் சாலையை நான்கு வழிச் சாலையாக விரிவாக்கும் செய்யும் பணிகளை ஆய்வுசெய்து, தரமான சாலை அமைப்பதை உறுதி செய்யுமாறு அதிகாரிகளை அறிவுறுத்தினோம்.

அங்கிருந்து பெரம்பலூர் செல்லும் வழியெங்கும் மக்கள் கூட்டம் கூட்டமாக நின்று வரவேற்றனர். ஆ.ராசா அண்ணன் அவர்களின் அலுவலகத்துக்குச் செல்வதாகத் திட்டம். ஆனால், அலுவலகத்துக்குள் செல்ல முடியாத அளவுக்கு அவ்வளவு மக்கள் வெள்ளம். அந்த வெயில் நேரத்திலும் என்னைப் பார்த்துவிட்டுத்தான் செல்ல வேண்டும் என்று நின்றார்கள். அவர்கள் எவரும் அழைத்து வரப்பட்டவர்கள் அல்ல என்பது தெரிந்தது.

**மதிய உணவு உண்பதற்கு முன்பாக 9ஆம் வகுப்பு மாணவி தர்ஷினி என்னை வந்து சந்தித்தார். அவர் அரியலூர் மாவட்டம், திருமானூர் மேற்கு ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் மூர்த்தியின் அண்ணன் முரளியின் மகள். கழக மேடைகளில் பேசி வருபவர்.**

**கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு சமீபத்தில் மாவட்ட அளவில் நடைபெற்ற பேச்சுப்போட்டியில் ‘தமிழ்த் திரையுலகில் கலைஞரின் எழுதுகோல்’ என்ற தலைப்பில் உரையாற்றி 2வது பரிசாக 7,000 ரூபாய் வென்றிருக்கிறார். அந்தத் தொகையை இளைஞர் அணி மாநில மாநாட்டுக்கான நிதியாக அளிக்க வந்திருந்தார்.**

எளிய குடும்பத்துப் பிள்ளைகள் கழகத்தின் மீது கொண்டுள்ள நம்பிக்கையையும், கலைஞரின் நினைவைப் போற்றும் விதமாகத் தொடர்ந்து இயங்குவதையும் நினைக்கும்போது நாம் இந்த இயக்கத்துக்காகவும் மக்களுக்காகவும் மென்மேலும் உழைக்க வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது. தங்கை தர்ஷினியுடன் மதிய உணவு அருந்தினோம்.

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆய்வுக் கூட்டத்துக்குச் செல்வதற்காக அண்ணன் ஆ. ராசா அவர்களின் அலுவலகத்தில் இருந்து வெளியே வந்தோம். காத்திருந்த கூட்டம் கலையாமல் அப்படியே நின்று என்னை வழியனுப்பி வைத்தது. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆய்வுக் கூட்டத்தை முடித்துவிட்டு, அரியலூர் - பெரம்பலூர் மாவட்டங்களுக்கான இளைஞர் அணி செயல் வீரர் கூட்டத்தில் கலந்துகொண்டோம்.

### அண்ணன் ஆ.ராசாவின் கழகப் பணிகள் - மக்கள் பணிகள்!

இளைஞர் அணி பணிகளை ஒருங்கிணைக்க தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்ட துணை பொதுச்செயலாளர் மண்ணின் மைந்தன் அண்ணன் ஆ. ராசாவின் கழகப் பணிகளையும், மக்கள் பணிகளையும் எடுத்துக்கூறி உரையாற்றினேன். “35 வயதில் ஒன்றிய அமைச்சர், மாவட்டக் கழகச் செயலாளர் என்பது அண்ணனின் உழைப்பின் மீதும் கொள்கைப் பற்றின் மீதும் கலைஞர் வைத்திருந்த நம்பிக்கைக்குச் சான்று. கழகத்தின் மீது அவப்பெயர் ஏற்பட வேண்டும் என்பதற்காகவே தொடரப்பட்ட 2ஜி வழக்கில் அண்ணன் ஆ.ராசா அவர்கள் ஒரு வாய்தாகூட வாங்காமல் அவரே வாதாடி வென்றார். ஆனால் சொத்துக்குவிப்பு வழக்கில் அம்மையார் ஜெயலலிதா அவர்கள் 125 வாய்தா வாங்கியும் தோற்றார்” என்றேன். அதை இளைஞர்கள் கரவொலி எழுப்பி ஆமோதித்தனர்.

இளைஞர் அணிச் செயல்வீரர்கள் கூட்டத்தை முடித்துவிட்டு, இரவு 9 மணிக்கு மேல் மாவட்டத்தில் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டோம். முதலில் பெரம்பலூரில் இயங்கும் ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் செயல்பட்டுவரும் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான தங்கும் விடுதிகளை ஆய்வு செய்தோம்.

தொடர்ச்சி 8ஆம் பக்கம்

## தி.மு.க. வழக்கறிஞர் அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## (இரண்டாவது பட்டியல்)

## தி.மு.க. வழக்கறிஞர் அணிச் செயலாளர் என்.ஆர். இளங்கோ அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. வழக்கறிஞர் அணியின் மாவட்ட அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்..

### சென்னை கிழக்கு மாவட்டம்

தலைவர் : மா. குணசேகரன் எம்.ஏ.பி.எல்., எண். 35, கலைஞர்கருணாநிதி நகர் 10வது தெரு, அயனாவரம் சென்னை - 600 023

துணைத் தலைவர்: சே. கணேஷ், பி.காம்.,பி.எல்., எம்.பி.ஏ., பழைய எண். 32, புதிய எண். 53 பெரம்பூர்நெடுஞ்சாலை ஜமாலியா சென்னை - 600 012

அமைப்பாளர் : **துரை கண்ணன்** எம்.ஏ.பி.எல்., ஆர்.சி. நவரத்தினம் பிளாட்ஸ் எண். 6/16, பிளாட் எண். சி3 6வது மெயின்ரோடு ஜவஹர்நகர் சென்னை - 600 082 துணை அமைப்பாளர்கள் ஜெ. கருணாநிதி எம்.காம்., பி.எல்., எண். 55/24, கிருஷ்ணப்ப குளத்தெரு சௌகார்பேட்டை சென்னை - 600 001 ஜி. தயாசங்கர்பி.ஏ., பி.எல்., எண். 285, 6வது பிளாக், கே.பி. பார்க், டிமலஸ் ரோடு சென்னை - 600 012 எ. சேதுராமன் பி.ஏ., பி.எல்., எண். 58, பொன்னியம்மன் தெரு புரசைவாக்கம் சென்னை - 600 007 வி. யோகராஜ், பி.ஏ., பி.எல்., எண். 58/34, கே.சி. கார்டன் 1வது தெரு, பெரவள்ளூர் சென்னை - 600 082 என். வேலன், பி.எ.,எல்.எல்.பி., எண். 15ஈ/51, சாந்தி நகர் 2வது தெரு, பெரம்பூர் சென்னை - 600 011

### சென்னை மேற்கு மாவட்டம்

தலைவர்: திருமதி.சி. சியாமளா ப. எண். 23, பு. எண். 22 2வது தெரு, ஜெயலட்சுமிபுரம் நுங்கம்பாக்கம் சென்னை - 600 0034

துணைத் தலைவர் : மோ. பாலசந்தர் எண். 6/5, 3வது குறுக்குத் தெரு ஆர்.வி.நகர். அண்ணாநகர்கிழக்கு சென்னை - 600 102

அமைப்பாளர் : **வே. தேவேந்திர**ன் 26/30, பெருமாள் கோயில் தெரு அரும்பாக்கம் சென்னை - 600 106

துணை அமைப்பாளர்கள்: தி. மதன் கோபால் எண். 20/23, கஜடி பேகம் தெரு, ராயப்பேட்டை சென்னை - 600 014 கே. கமலக்கண்ணன் எண். 40, 8வது தெரு சௌராஸ்டிரா நகர் சூளைமேடு சென்னை - 600 094 வி.என்.ஆர். பாபு எண். 35/70, டி - பிளாக் பாண்டியன் தெரு எம்.எம்.டி.ஏ. காலனி அரும்பாக்கம் சென்னை - 600 106 க. ரகுராமன் எண். எ114, வந்தனா டவர்ஸ், ஹேடோஸ் ரோடு நுங்கம்பாக்கம் சென்னை - 600 034 ஜே.வி.ரவிவர்மன் எண். 82/2, குமரப்ப தெரு நுங்கம்பாக்கம் சென்னை - 600 034

### சென்னை வடகிழக்கு மாவட்டம்

தலைவர் : ஜி. சந்திரபோஸ் எண். 49, 2வது தெரு அன்னை சிவகாமி நகர் எண்ணூர் சென்னை - 600 057

துணைத் தலைவர் : பி. ஷோபனா எண். 15/9, 4வது தெரு நெட்டுக்குப்பம், எண்ணூர் சென்னை - 600 057

அமைப்பாளர் : **கே. லட்சுமிகாந்**தன் எண்.44, நேதாஜி தெரு லட்சுமிபுரம் சென்னை - 600 099 துணை அமைப்பாளர்கள் ஜே.குமரன் எண். 8/35, பாரதியார்தெரு மாதவரம் சென்னை - 600 060 தே. வசந்தகுமார் எண். 39, வி.பி.சி. நகர், 2வது தெரு பொன்னியம்மன்மேடு சென்னை - 600 110 ஜே. பாலமுருகன் எண்.1/2, அம்சா தோட்டம் 4வது தெரு திருவெற்றியூர் சென்னை - 600 019 பி. ஜோசப் பாரி எண்.117, கங்கை அம்மன் கோயில் தெரு சிறுணியம் கிராமம் சோழவரம் சென்னை - 600 067 எம். தேவராஜ் எண். 2/12359, ஈஸ்வரன் நகர் 2வது மெயின் ரோடு பம்மதுகுளம் சென்னை - 600 052

### சென்னை தெற்கு மாவட்டம்

தலைவர்: எஸ். பொன்னுசாமி எண். 10/2பி, கதவு எண். 3 பாலாஜி பிளாட் ஸ்ரீநகர்காலனி சென்னை - 600 015

துணைத் தலைவர் : எம்.ஜி. மதிவாணன் மருத்துவமனைத் தெரு 1வது தெரு சைதாப்பேட்டை சென்னை - 600 015

அமைப்பாளர் : **தரமணி ஜெகதீச**ன் 598, பம்மல் நல்லதம்பி தெரு தந்தை பெரியார்நகர் தரமணி சென்னை - 600 113

துணை அமைப்பாளர்கள் : ச. முருகன் எண்.9/20, ஏகாம்பரம் தெரு சாலிகிராமம் சென்னை - 600 093 ஆர். பாலாஜி 9/14, 2வது தெரு டாக்டர்காணு நகர் நெசப்பாக்கம் சென்னை - 600 078 வா. திருக்குறளார் 5/188, கோபால் தெரு மடிப்பாக்கம் சென்னை - 600 009 ஜெ. கார்த்திகேயன் 16/25, அம்பிகா தெரு வேளச்சேரி சென்னை - 600 042 எம். ஜெய் கணேஷ் 1/1065, திருவேங்கடம் நகர் 2வது தெரு வடக்குபட்டு மேடவாக்கம் சென்னை - 600 100

### சென்னை தென்மேற்கு மாவட்டம்

தலைவர் : எம். ராஜதுரை எண். 13, 4வது பிரதான சாலை யுனைடெட் இந்தியா காலனி கோடம்பாக்கம் சென்னை - 600 024

துணைத் தலைவர் : கே. நந்தகோபால் எண். 11, திருவள்ளூர்சாலை தேனாம்பேட்டை சென்னை - 600 018

அமைப்பாளர் : **சி. கணேஷ்பாண்டி**யன் எண். 258/291, முதல்தளம் கே.வி.பி.கார்டன் ராஜா அண்ணாமலைபுரம் சென்னை - 600 028

துணை அமைப்பாளர்கள் : இரா. உதயகுமார் எண். 67/48, காமராஜர்சாலை ஆர்.வி.புரம், சென்னை - 600 028 டி. ஜோதிகுமார் பு. எண். 108, டீ பிளாக், க.எண்.3 புது தெரு, மயிலாப்பூர் சென்னை - 600 004 எம்.எ. முஹம்மது அர்ஷத் எண்.22, 31, 3வது குறுக்கு தெரு சி.ஐ.டி. நகர் (கிழக்கு) நந்தனம் சென்னை - 600 035 கே. ஜெயராமன் எண்.10/6, 19வது தெரு 5வது அவின்யூ அசோக் நகர் சென்னை - 600 083 கே. சரண்யா எண்.14, லாயிட்ஸ் ரோடு சென்னை - 600 005

### கோவை வடக்கு மாவட்டம்

தலைவர் : எஸ். இளங்கோவன், பி.ஏ., பி.எல்., நெ. 2/84, தயா இல்லம் தேவராயபுரம் அஞ்சல் கோயமுத்தூர் 641 109

துணைத் தலைவர் : ர. ரமேஷ்குமார்பி.ஏ., பி.எல்., நெ.56, எல்.எஸ். புரம், 4வது வீதி மேட்டுப்பாளையம் கோயமுத்தூர் 641 301

அமைப்பாளர் : **பத்ரி (எ) பழனிசாமி** 77/48எ, நாதகவுண்டன் புதூர் ஆலந்துரை கோயமுத்தூர் 641 101

துணை அமைப்பாளர்கள் : எம். முகமது சபிக் அகமது,பி.காம்.பி.எல்., 49, மதீனா நகர், மேட்டுப்பாளையம் கோயமுத்தூர் 641 109 கே. வெற்றி பி.காம்.பி.எல்., நெ. 5எ, ராணி ராஜலட்சுமி நகர் குளத்துப்பாளையம் தொண்டாமுத்தூர்அஞ்சல் கோயமுத்தூர் 641 109 ஜி. கோகிலவாணி, பி.ஏ., பி.எல்., 188, அஞ்சுகம் நகர், சின்னவேடம்பட்டி போஸ்ட் கோயமுத்தூர் 641 049 சு. ராஜேஷ்குமார், எம்.எஸ்.சி.பி.எல்., 6/66, காந்தி காலனி தென்னமநல்லூர்அஞ்சல் கோயமுத்தூர் 641 109 சு. தங்கவேல் எம்.ஏ.பி.எல்., 2/23ஜெ, யூனியன் ரோடு தெற்கு புதுப்பாளையம், என்.எஸ்.என். பாளையம் அஞ்சல் கோயமுத்தூர் 641 031

### கோவை தெற்கு மாவட்டம்

தலைவர் : எஸ். சக்திவேல் ச12, கிருபானந்தவாரியார்வீதி "சி" காலனி, ஜோதி நகர் பொள்ளாச்சி 642 001

துணைத் தலைவர் : எஸ். கோபாலகிருஷ்ணன் டி85, நெய்தல் தெரு அமர்ஜோதி நகர், கண்ணம்பாளையம் சூலூர், கோயமுத்தூர் 641 402

அமைப்பாளர் : **டி. மருதராஜ்** 7, தண்ணீர்பந்தல் ஜெயலட்சுமி நகர், வடுகபாளையம் பொள்ளாச்சி 642 001

துணை அமைப்பாளர்கள்: ஆர். சேனாதிபதி 18, பழைய மதுரைவீரன் கோவில் வீதி ஒடையகுளம் 642 129 விஜிஎஸ் அன்பு நாகராஜன் 9/4291, கக்கன் காலனி வால்பாறை - 642 127 எ. சந்திரமோகன் எ6, குறிச்சி ஹவுசிங் யூனிட் சிட்கோ (அஞ்சல்) கோயமுத்தூர் 641 021 சா. முகமது இப்ராஹிம் 2/84, கொண்டாம்பட்டி கிணத்துக்கடவு கோயமுத்தூர் 641 202 சை.யூ. சையது அமான் 137, யூனிக் ஷெல்டர்ஸ் பாரதி நகர், மைல்கல் பஸ் ஸ்டாப் போத்தனூர் 641 023

### தருமபுரி கிழக்கு மாவட்டம்

தலைவர் : பி.கே. தாஸ் 7/டீ2, சின்னசாமி கவுடு காலனி தருமபுரி

துணைத் தலைவர் : இரா. கருணாநிதி 5/1557, நாகர்கோயில் தெரு, இலக்கியம்பட்டி தருமபுரி

அமைப்பாளர் : **இரா.சிவம்** பாலஜங்கமன அள்ளி நல்லம்பள்ளி வட்டம் தருமபுரி

துணை அமைப்பாளர்கள் : ஜி. அசோகன் 113/10, மஜீத் கோவில் தெரு பென்னாகரம் தருமபுரி என்.பி. முத்துசாமி நாகமரை கிராமம், நெருப்பூர்அஞ்சல் பென்னாகரம் வட்டம் தருமபுரி எம். மாதவன் 1/125, கனிவயல்பூட்டுகாரன் தோப்பு நத்த அள்ளி அஞ்சல் நல்லம்பள்ளி வட்டம் தருமபுரி ஆர். இந்திராகாந்தி 29/11, புதூர்மாரியம்மன் கோவில் தெரு தருமபுரி அ. கார்த்திக் 4/347, நலப்பரம்பட்டி கிராமம் அஞ்சேஅள்ளி அஞ்சல் பென்னாகரம் வட்டம் தருமபுரிமாவட்டம்

### ஈரோடு வடக்கு மாவட்டம்

தலைவர் : பி.எஸ். கணேசன் பி.ஏ., பி.எல்., 892, மெயின் ரோடு, பவானி பவானி தாலுகா ஈரோடு மாவட்டம் 638 301

துணைத் தலைவர் : ஆர். செந்தில்குமரன் பி.ஏ., பி.எல்., 2131, கவுண்டர்நகர் பவானி,

அமைப்பாளர் : **இரா. ராஜா,** பி.எ.,எல்.எல்.பி., காமராஜ் நகர் அம்மாபேட்டை

துணை அமைப்பாளர்கள் : ஆர். நளினா பழனிச்சாமி, எம்.எ.,எல்.எல்.பி.,எம்.எல் 5ஏ/6, அம்மன் கோவில் வீதி வெட்டையம்பாளையம் எலத்தூர் வி.கே. மதியழகன் எம்.ஏ., பி.எல்., 2/74, மேட்டுப்புதூர், அரசூளூர் சத்தியமங்கலம் கே. தேவராஜ் எம்.சி.ஏ., எல்.எல்.பி., 442, முத்துக்காளிமடை பாரியூர்வெள்ளாளபாளையம் கோபி இ. செந்தில்குமார்பி.ஏ., பி.எல்., 315, அய்யர்தோட்டம் படவல்கால்வாய், சிங்கம்பேட்டை, பவானி தாலுகா ஈரோடு மாவட்டம் வி.எஸ். சரவணபவா பி.காம்.,பி.எல்., பாரதியார்வீதி அம்மாபேட்டை

### ஈரோடு தெற்கு மாவட்டம்

தலைவர் : சி. துளசிமணி 10, தங்கம் வீதி 1 பவத்தாம்பாளையம் கதிரம்பட்டி ஈரோடு - 638 107

துணைத் தலைவர் : எம். முருகேசன் மானியம்காட்டு தோட்டம் தெற்குபள்ளம், கீழ் திண்டல் ஈரோடு - 12

அமைப்பாளர் : **சி. முத்துக்குமார்** 89/1, ராணி வீதி சம்பத் நகர், ஈரோடு - 11

துணை அமைப்பாளர்கள் : ஆர். ராமகிருஷ்ணன் 65, சம்பத் நகர் ஈரோடு - 11 எம். சரவணன் 42, வீரப்பன்பாளையம் கஸ்பா பேட்டை ஈரோடு - 638 115 திருமதி. வி. முத்து முத்தையா 19/1, ஆறுபடையன் நகர் அடுக்குப்பாறை, வில்லரசம்பட்டி அஞ்சல் நசியனூர்ரோடு ஈரோடு - 638 107 எ. பிரபு செல்லப்பா காம்ப்ளக்ஸ் ஆர்.எஸ். ரோடு, பெருந்துறை - 638 052 எல். ஜெகதீஸ்குமார் டாக்டர். ராதாகிருஷ்ணன் வீதி பெரியவலசு ஈரோடு - 638 011

### கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டம்

தலைவர் : ஆர். கோகுல்தாஸ் செக்குமேட்டு தெரு கள்ளக்குறிச்சி நகரம் கள்ளக்குறிச்சி வட்டம் (ம) மாவட்டம்

துணைத் தலைவர் : ஆர்.அர்சுணன் இராயப்பனூர்ஊராட்சி மேல்நாரியப்பனூர்அஞ்சல் சின்னசேலம் வட்டம் கள்ளக்குறிச்சி வட்டம் (ம) மாவட்டம்

அமைப்பாளர் : **சி. இளவரசு** பெருமங்கலம் ஊராட்சி கள்ளக்குறிச்சி வட்டம் (ம) மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் எஸ். சையத் அலி மணலூர் பேட்டை, பேரூர் திருக்கோவிலூர்வட்டம் கள்ளக்குறிச்சி மாவட்டம் ஜெ. தமிழ்புரட்சி கிழக்கு தெரு நயினார்பாளையம் ஊராட்சி சின்னசேலம் வட்டம் கள்ளக்குறிச்சி மாவட்டம் எம். ஆனந்தன் மேமாளூர்ஊராட்சி திருக்கோவிலூர்வட்டம் கள்ளக்குறிச்சி மாவட்டம் கா. ரஞ்சித் துருகம் சாலை கள்ளக்குறிச்சி நகரம் கள்ளக்குறிச்சி வட்டம் (ம) மாவட்டம் ஏ. பி. சூரியகுமார் கோட்டைமேடு கள்ளக்குறிச்சி நகரம் கள்ளக்குறிச்சி வட்டம் (ம) மாவட்டம்

### கிருஷ்ணகிரிகிழக்கு மாவட்டம்

தலைவர் : எம்.ஜி. ரகுநாத் 1/2314, வாகாப் நகர் ராயகொட்டை ரோடு கிருஷ்ணகிரிமாவட்டம்

துணைத் தலைவர்: தா. ஜான்பால் முதலாவது குறுக்குத் தெரு மாதா நகர் காவேரிப்பட்டணம்

அமைப்பாளர் : **இ. வெங்கடேஷ்ராஜா** எம்302, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், 2வது பகுதி, 3வது வலது கிராஸ் கிருஷ்ணகிரி

துணை அமைப்பாளர்கள் : டி. புகழேந்தி கன்னடஹல்லி கிராம் (ம) அஞ்சல் பருகூர்வட்டம் கிருஷ்ணகிரிமாவட்டம் டி. பிரபாகரன் 2/51எ, கீழ்குப்பம் கிராமம் பாரூர்அஞ்சல் போச்சம்பள்ளி வட்டம் கிருஷ்ணகிரிமாவட்டம் சே. வீரபாண்டியனார் 1/104, திருவண்ணாமலை மெயின்ரோடு அஞ்சூர், பருகூர் கிருஷ்ணகிரிமாவட்டம் டாக்டர். கே.எ. மதியழகன் 153எ, சென்னை சாலை கிருஷ்ணகிரிமாவட்டம் எம். சுரேஷ் 1/34டீ, சாமுடி நகர், ஓரப்பம், பருகூர், கிருஷ்ணகிரிமாவட்டம்

### மதுரை மாநகர்மாவட்டம்

தலைவர் : பி. அன்புசெல்வம், பி.எஸ்சி.,பி.எல்.,., 321, தென்றல் நகர், சர்வேயர்காலனி மதுரை 625 001

துணை தலைவர் : எம். திருநாவுக்கரசு, பி.ஏ., பி.எல்., 47/864, சம்பக்குளம், மூன்றுமாவடி கே. புதூர் மதுரை 625 007

அமைப்பாளர் : **ஜெ. தேவசேனன்**, எம்.எல்., 8, நமச்சிவாயம் நகர் துரைச்சாமி நகர் பைபாஸ் ரோடு, பழங்காநத்தம் மதுரை 625 016

துணை அமைப்பாளர்கள் : எஸ். தம்பிதுரை, பி.காம்., பி.எல்.,., 19ஜெ/46, சிவன் ,ல்லம், சொக்கலிங்கறசர் 4வது தெரு மதுரை 16 பி. பாலகிருஷ்ணன், பி.எ., பி.எல்.,, 4, அழகரடி, கரிமேடு மதுரை 625 016 பி. முஹம்மது இத்ரிஸ், எம்.எல், 189, தெற்கு மாரட் வீதி தெற்குவாசல் மதுரை 625 001 எஸ். சிவகுருநாதன், பி.ஏ., பி.எல்.,, 18எ, திரௌபதி அம்மன் கோவில் தெரு தவிட்டுச்சந்தை மதுரை 625 001 எம். ஒளிராஜா, எம்.எ.,பி.எல்.,, பானு இல்லம், மாடி, 15,2,2 தென்றல் நகர் நரிமேடு மதுரை 625 002

### மதுரை தெற்கு மாவட்டம்

தலைவர் : ஓ. செல்வராஜ் 11/6, நாடார்புதுத்தெரு உசிலம்பட்டி மதுரை மாவட்டம்

துணைத் தலைவர் : எஸ். ராமசந்திரன் 20/10டி, மொக்கையார்அம்பலம் நகர் சோழவந்தான் ரோடு திருமங்கலம் மதுரை மாவட்டம்

அமைப்பாளர் : **சி. சிவனேசன்** 65, மாயாண்டி நகர், அரசு ஆண்கள் பள்ளி பின்புறம் திருமங்கலம் மதுரை மாவட்டம்

துணை அமைப்பாளர் : க. கவிஸ்ரீ தினேஷ் 180 ராஜாஜி முதல் தெரு திருமங்கலம் மதுரை மாவட்டம் வி. வையத்துரை 5/266, காளியம்மன் கோவில் தெரு கூத்தியார்குண்டு திருப்பரங்குன்றம் மதுரை மாவட்டம் சே. அரவிந்த் 3/379, கிழக்கு தெரு நடுமுதலைக்குளம் முதலைக்குளம், உசிலம்பட்டி வட்டம் மதுரை மாவட்டம் பா. சின்னராஜா 1/8, வடக்கு தெரு எல்.கொட்டாணிப்பட்டி பேரையூர்வட்டம், மதுரை மாவட்டம் நா. ரேவதி 1/170, அருப்புக்கோட்டை மெயின்ரோடு வளையங்குளம் திருப்பரங்குன்றம் வட்டம் மதுரை 22

### நாமக்கல் கிழக்கு மாவட்டம்

தலைவர்: அய். கணபதி 115/12, சீராப்பள்ளி அஞ்சல் இராசிபுரம் தாலுகா நாமக்கல் மாவட்டம் 637 406

துணைத் தலைவர் : என். செல்வகுமார் ஆண்டிக்காடு பட்டணம் (அ), இராசிபுரம் நாமக்கல்

அமைப்பாளர் : **எஸ். ஆனந்த்பாபு** 1/1, வெட்டுகாடு, தெத்துகாடு அஞ்சல் சேந்தமங்கலம் (வ) நாமக்கல் மாவட்டம் 637 404

துணை அமைப்பாளர்கள் : என்கேபி. வடிவேல் 1/183எ,எசிடிகிரின் ஹோம்ஸ் மோகனூர்ரோடு, நாமக்கல் டவுன் நாமக்கல் மாவட்டம் 637 001 எஸ். பழனிசாமி 17/64, சக்கரைப்பட்டி செம்மேடு அஞ்சல் வாழவந்தி நாடு கொல்லிமலை தாலுகா நாமக்கல் மாவட்டம் 637 411 எஸ். கண்ணன் 2/90, முனியப்பன் கோவில் தெரு குருசாமிபாளையம் அஞ்சல் இராசிபுரம் தாலுகா நாமக்கல் மாவட்டம் 637 403 ச. வெங்கடாசலம் 6/361, வன்னியர்தெரு ஓ.சௌதாபுரம் (அ) இராசிபுரம் வட்டம் நாமக்கல் மாவட்டம் 637 505 எம். அகிலன் 4/160, நடுத்தெரு வடுகபட்டி, வலையபட்டி அஞ்சல் மோகனூர்தாலுகா நாமக்கல் மாவட்டம் 637 402

### நாமக்கல் மேற்கு மாவட்டம்

தலைவர் : டி. சுரேஷ்பாபு 10/1, வி.கே.ஈ. தெரு திருச்செங்கோடு நாமக்கல்

துணைத் தலைவர் : டி.எம். சரவணகுமார் பெரிய சோளிபாளையம் பரமத்திவேலூர் நாமக்கல்

அமைப்பாளர் : **எ.சு. தனகரன்** 96, கண்டர்சாலை ஹைஸ்கூல் ரோடு பரமத்திவேலூர் நாமக்கல்

துணை அமைப்பாளர்கள் : எ.பி. வெங்கட்கண்ணன் 1/1, தைலாம்பிகைவர்மா தெரு தொண்டிகரடு, திருச்செங்கோடு நாமக்கல் எஸ். ரமேஷ் 2/4, புளியங்காடு திருச்செங்கோடு நாமக்கல் இ.என். மாதேஸ்வரன் 2/195, ஜமீன்இளம்பள்ளி பரமத்திவேலூர் நாமக்கல் எஸ். ஆனந்த் 5/6/4, தெற்கு ரதவீதி மல்லசமுத்திரம் திருச்செங்கோடு நாமக்கல் க. நல்லுசாமி 6/54, சீனிவாசன்பாளையம் கருவேப்பம்பட்டி திருச்செங்கோடு நாமக்கல்

### சிவகங்கை மாவட்டம்

தலைவர் : எஸ்பிடி. சேது ராமச்சந்திரன், பி.எ.பி.எல்., நெ.12, வெள்ளாளர்கீழத்தெரு திருப்புவனம் சிவகங்கை மாவட்டம்

துணை தலைவர் : என். செந்தில்குமார்பி.எ.பி.எல்., நெ.66சி, தொண்டி ரோடு இலக்குமி இல்லம் சிவகங்கை சிவகங்கை மாவட்டம்

அமைப்பாளர் : **எஸ். பாஸ்கரன்** பி.எ.பி.எல்., நெ.85/19எ, மதுரை ரோடு சிவகங்கை சிவகங்கை மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் : பழ. துரைவேலவன் எம்.ஏ.பி.எல்., காசியா பிள்ளை நகர் சிங்கம்புணரி சிவகங்கை மாவட்டம் கே. நாகூர்கனி பி.எஸ்சி.பி.எல்., நெ. 7/8, எஸ்.வேலங்குடி அஞ்சல் திருப்பத்தூர்தாலுகா சிவகங்கை மாவட்டம் எம். கோதண்டராமன் எம்பிஏ.பி.எல்., அருணா காம்பளக்ஸ் 1வது தெரு சிவகங்கை ரோடு காளையார்கோவில் சிவகங்கை மாவட்டம் சி. ஆறுமுகம் பி.ஏ.பி.எல்., நெ.1, அம்சராஜ் புதிய நீதி மன்றம் எதிரில் காரைக்குடி சிவகங்கை மாவட்டம் எம். உமாவதி, எம்.எல். நெ. 269/5, போஸ் நகர் தொண்டி ரோடு சிவகங்கை 630 561

### தஞ்சாவூர்வடக்கு மாவட்டம்

தலைவர் : எம். ராமச்சந்திரன் 675எ, தெற்கு தெரு முள்ளங்குடி திருவிடைமருதூர்தாலுகா

துணைத் தலைவர் : பி. விக்னேஷ் 314, தெற்கு தெரு, பசுபதிகோயில் பாபநாசம்

அமைப்பாளர் : **என்.பாஸ்கரன்** 29, சன்னதி தெரு பாபநாசம்

துணை அமைப்பாளர்கள் : ஆர். பிரபாகரன் 57, வடக்கு வீதி திருவிடைமருதூர் கோவி. இளையராஜா 416, அம்மன் கோயில் தெரு தெனசருக்கை பாபநாசம் தாலுக்கா சா. இராஜசேகரன் 72/1114, கச்சோற ரோடு ஐஓபி மாடி, கும்பகோணம் என். ஹாஜி முகம்மது 1190, வெள்ளாளர்தெரு ஆவூர் 612 701 வலங்கைமான் தாலுகா சு. தர்மராஜ் 18, கள்ளர்நத்தம் கீழ தெரு மெலட்டூர், பாபநாசம்

### தேனி வடக்கு மாவட்டம்

தலைவர் : ஜி. பிரதீப் 13, ஜக்கம்மாள் கோவில் தெரு குலாலர்பாளையம் போடிநாயக்கனூர்

துணைத் தலைவர் : பா. முத்துச்சாமி 25, பட்டாபுலித் தெரு வடகரை பெரியகுளம்

அமைப்பாளர் : **பொ. ஆசை தம்பி** 89, பெருமாள் கோவில் தெரு உப்புக்கோட்டை போடிநாயக்கனூர்

துணை அமைப்பாளர்கள் : க. தமிழ்மணி 10, கிழக்கு தெரு வீரபாண்டி தேனி ஜி. அகமது யாஸ்மின் பர்வீன் 54, புகையிலைத் தோட்ட மேற்கு தெரு வடகரை பெரியகுளம் சே. மணிகண்டன் பிரபு முத்துராமலிங்கம் தெரு தர்மத்துப்பட்டி மேலசொக்கநாதபுரம் போடிநாயக்கனூர் கே.எம்.வெங்கடேஷ் 225எ, சுப்பன் தெரு தேனி கே.சி. முருகானந்தன் பிளாட் எண்.30, ஸ்ரீசாய் நகர் முத்துதேவன்பட்டி தேனி மாவட்டம்

### திருச்சி மத்திய மாவட்டம்

தலைவர் : எம். காரல்விக்டர்வீராசாமி பி.எ.பி.எல்., 36/1, 2வது குறுக்கு வீதி இராமலிங்க நகர்தெற்கு விஸ்தரிப்பு வயலூர்சாலை புத்தூர், திருச்சி - 17

துணைத் தலைவர் : எஸ். ஆரோக்கியதாஸ் பி.எ.பி.எல்., 115/2, அந்தோனியார்கோவில் வீரேஸ்வரம், ஸ்ரீரங்கம் திருச்சி - 6

அமைப்பாளர் : **டி.எ. ஓம் பிரகாஷ்** பி.எ.பி.எல்., 7எ, கொட்டகொல்லத் தெரு மார்சிங்பேட்டை பீமநகர், திருச்சி - 1

துணை அமைப்பாளர்கள் : பி. ஷீலா பி.எ.பி.எல்., 22எ, சோழகர்நகர் கருமண்டபம், திருச்சி ஆர். வெங்கட்ராமன், பி.எஸ்சி.,பி.எல்., 54, பேங்கர்ஸ் காலனி 5வது கிராஸ் குமரன் நகர் தெற்கு விஸ்தரிப்பு, திருச்சி எம். திரு.வி.கா, எம்.காம்.பி.எல்.,., 10,6வது கிராஸ், கனரா பேங்க் காலனி சீனிவாசநகர் திருச்சி 17 என். காமராஜ், எம்.ஏ.பி.எல்.,., 1/228, எச்.பி. காலனி மலைப்பட்டி, ராம்ஜி நகர் (அ) திருச்சி 9 லியோராஜ், எம்.ஏ.பி.எல்.,., 3/27எ, மாதா கோவில் தெரு எசனகோரை (அ) இலால்குடி

### விருதுநகர்வடக்கு மாவட்டம்

தலைவர் : அசோக் 6461, குறிஞ்சி தெரு என்.ஜி.ஓ.நகர் விருதுநகர்

துணைத் தலைவர் : பாலாஜி கிழக்குத் தெரு கோவிலாங்குளம் விருதுநகர்மாவட்டம்

அமைப்பாளர் : **எஸ். திருநாவுக்கரசு** 68, பாண்டியன் நகர் காரியாபட்டி விருதுநகர்மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் : முத்துப்பாண்டி 137, பள்ளிமடம் திருச்சுழி தாலுகா விருதுநகர்மாவட்டம் கிருஷ்ணன் 2941, குரண்டி காரியாபட்டி தாலுகா விருதுநகர்மாவட்டம் மாரி 6371, பி.பச்சேரி தமிழ்பாடி, திருச்சுழி விருதுநகர்மாவட்டம் மாரிச்செல்வம் 6567, பெத்தனாட்சி நகர் விருதுநகர் சதீஷ்பாபு 22, பெரியபள்ளிவாசல் தெரு சிவகாசி விருதுநகர்மாவட்டம்

### சேலம் கிழக்கு மாவட்டம்

தலைவர் : இரா. திரவியம் சின்னம்மநாயக்கன்பாளையம் வாழப்பாடி

துணைத் தலைவர் : இரா. வேணுகோபாலன் 4/10, கோவிந்தன் தெரு பேளூர், வாழப்பாடி

அமைப்பாளர் **செ. அருள்** 343, பைத்தூர், ஆத்தூர், சேலம்.

துணை அமைப்பாளர்கள் : ஜெ. ரமேஷ் 161/49, சி.ஓ.தொடக்கப்பள்ளி அருகில் கொண்டையம்பள்ளி கெங்கவல்லி ஜெ. காளிமுத்து 55, அருந்ததியர்தெரு வீரகனூர் தலைவாசல் க. சரவணகுமார் 69, சக்தி நகர், நரசிங்கபுரம் ஆத்தூர் கி. தங்கராஜீ 1/48, பாரிவள்ளல் தெரு, கைபுதூர் வி. பாப்பாரப்பட்டி ஆட்டையாம்பட்டி எம். ஜெயசந்திரன் 5/107, வி.என்.மங்களம் காரிப்பட்டி

### வேலூர் மாவட்டம்

தலைவர் : பி.எச். கோபாலகிருஷ்ணன் 241, வேலூர்ரோடு தாராபடவேடு, காட்பாடி

துணைத் தலைவர் : எம். கார்த்திகேயன் கே.கே.தெரு காமாட்சியம்மன் பேட்டை குடியாத்தம்

அமைப்பாளர் : **எம்.இ. கோவிந்தராஜ்** 21/13, மேற்கு மெயின் ரோடு காந்திநகர்மேற்கு வேலூர்

துணை அமைப்பாளர்கள் :ஜெ. மணி பெரிய தனம் சுப்பராய முதலி தெரு வேலப்பாடி வேலூர் பி. ராஜன்பாபு தேவாலயம் தெரு மேலபட்டி பேர்ணாம்பட்டு வட்டம் பி. பிரவின்குமார் கேமரான்பேட்டை பள்ளிகொண்டா அணைக்கட்டு வட்டம் எம். ஆர். பாலாஜி 2,2 வது மேற்கு தெரு எம்.ஜி.ஆர்.நகர் காட்பாடி எம். பாலாஜி 2/48, மாரியம்மன் கோயில் தெரு பொய்கை அணைக்கட்டு வட்டம்

### திருவாரூர் மாவட்டம்

தலைவர் : ஜி. பஞ்சமூர்த்தி 78ஏ, தாலுக்கா ஆபீஸ் ரோடு மன்னார்குடி - 614 001

துணைத் தலைவர் : பி. செல்லப்பா சாமி நகர் நன்னிலம் - 610 105

அமைப்பாளர் : **என். விநாயகமூர்த்தி** 4/169, செம்மொழி நகர் புலிவலம் அஞ்சல் திருவாரூர்வட்டம் - 610 109

துணை அமைப்பாளர்கள் : ஆர். கோவிக்கண்ணன் 110, வாசன் நகர் திருவாரூர் - 610 001 என். மகாலெட்சுமி 78/4, எஸ்.என். காம்ப்ளக்ஸ் தாலுக்கா ஆபீஸ் ரோடு மன்னார்குடி - 614 001 ஜி. சிலம்பரசன் 28, ஆற்றங்கரைத்தெரு நன்னிலம் - 610 105 எம். குமணவள்ளல் மாரியம்மன் கோவில் தெரு சீலத்தநல்லூர், களப்பால் திருத்துறைப்பூண்டி வட்டம் 614 710 ஜி. வீரக்குமார் டி 65, புதிய வீட்டு வசதி வாரிய நகர் மன்னார்குடி - 614 001

### விருதுநகர் தெற்கு மாவட்டம்

தலைவர் : மு. இராக்கப்பன், 12, வடக்குகர்ணம்தெரு, மம்சாபுரம் - 626110.

துணைத்தலைவர் க. சதீஸ்குமார் 18, வடக்குத்தெரு, கோட்டைப்பட்டி, திருவில்லிபுத்தூர் - 626125

அமைப்பாளர்: **ல. முரளி** 32, பெருமாள்கோவில்தெற்கு மாடவீதி, சாத்தூர் - 626203,

துணை அமைப்பாளர்கள் : பா. இராஜேந்திரன் 15/8/18, குழிவீட்டார்தெரு, அருப்புக்கோட்டை - 626101. மு. முனீஸ்வரன் 4/48, வடக்குத்தெரு, தைலாபுரம் - 626149. செ. செல்வக்குமார் 5/எ, பிள்ளைமார்தென்வடல்தெரு, சேத்தூர் - 626121. அ. செல்லப்பாண்டியன் 1/90, அக்ரஹாரம்தெரு, கோட்டையூர் - 626149. க. கனகராஜ் 178/4, மேலத்தெரு, தெற்குவெங்காநல்லூர் - 626102,

### சென்னை வடக்கு மாவட்டம்

தலைவர் : டி. மதன்ராஜ், பி.ஏ., பி.எல்., 112/86, ஸ்ரீ ரங்கம்மாள் தெரு பழைய வண்ணாரப்பேட்டை சென்னை - 600 021

துணை தலைவர் : ச. சேனாபதி,பி.ஏ., பி.எல்.,பி.ஜி.டி.எல்.ஏ., எண். 29, ரத்தினம் நகர் 2 வது தெரு வியாசர்பாடி - 600 039

அமைப்பாளர் : **ஜெ.காணிக்கை நாதன்**,எம்.காம். பி.எல். எண். 18/21எ, மணிகண்டன் 6வது தெரு பழைய வண்ணாரப்பேட்டை சென்னை - 600 021

துணை அமைப்பாளர்கள் : எஸ்.எம்.டி.ரவிச்சந்திரன்,எம்.காம்.பி.எல். எண். 21/11, வள்ளுவர் நகர் ஏ. இ கோயில் தெரு தண்டையார்பேட்டை சென்னை - 600 081 எஸ்.சரவணக்குமார் ,எம்.ஏ. எம்.எல், எண். 186, 2 வது தெரு இந்திராகாந்தி நகர் தண்டையார்பேட்டை சென்னை - 600 081 எஸ்.சசீதரன்,எம்.பி.ஏ.,எல்.எல். பி., எண். 6, இராமா 3 வது தெரு இராயபுரம் சென்னை - 600 013 ஆர். ராஜன்,பி.ஏ.,பி எல்., எண். 14 , சிங்கார தோட்டம் 2 வது சந்து பழைய வண்ணாரபேட்டை சென்னை - 600 021 சி . பாலமுருகன்,பி.ஏ.,பி எல்., எண். 14 , கடும்பாடி அம்மன் கோயில் 4 வது தெரு சின்னாடிமடம் , கொடுங்கையூர் சென்னை - 600 118

### கன்னியாகுமரி மேற்கு மாவட்டம்

தலைவர் : பி. ஜெ.ஸ்டீபன் எலக்கறி ஹவுஸ் நித்திரவிளை அஞ்சல் குமரி மாவட்டம் - 629 154

துணை தலைவர் : முத்துகுமரேஷ் 134/2, அஸ்மிந்த் இல்லம் கொட்டான்காச்சிவிளை திருவிதாங்கோடு அஞ்சல் குமரி மாவட்டம் - 629 174

அமைப்பாளர் : **ஜோசப் ராஜ்** 5/90டி /4, மேலசந்தவிளை கருங்கல் அஞ்சல்

துணை அமைப்பாளர்கள் : தே. சௌந்தர் ராஜ் 970, புளியறவிளை குமாரபுரம் அஞ்சல் குமரி மாவட்டம் - 629 164 பி. வின்செண்ட் 22/160, சிசிலி இல்லம் உன்னியூர் கோணம் குலசேகரம் குமரி மாவட்டம் - 609 161 சி. ஜெங்கின்ஸ் செல்வராஜன் 1295/4, நெடுவிளை, இனயம்புத்தன் துறை அஞ்சல் குமரி மாவட்டம் எ.கே. பினு பாரத் 3 /86 , பாரத் பவன் பூவன்கோடு, வேர்கிளம்பி அஞ்சல் குமரி மாவட்டம் ஜெ . கென்சிலின் ஜோசப் ஏறத்தான்விளை வெள்ளியோடு, முளகுமூடு குமரி மாவட்டம்

### தென்காசி தெற்கு மாவட்டம்

தலைவர் : கே. பி. குமார் பாண்டியன் 25, கிருஷ்ணன் விலாஸ் இராமாலயம் காலனி குற்றாலம்

துணை தலைவர் : ஜாபர் ஹனிப் 38, அரசினர் நடுநிலைப் பள்ளி கச்சேரி காம்பௌண்ட் செங்கோட்டை செல் : 87542 51171

அமைப்பாளர் : **எஸ். தங்கராஜ் பாண்டியன்** 28 எச் , முதல் மாடி சம்சுதீன் பில்டிங் கடையநல்லூர்

துணை அமைப்பாளர்கள் : ஜெ. வளன்ராஜா 7/179/1, தெற்கு மாலைசூடிப்பட்டி அரியப்பபுரம் மேட்டூர், தென்காசி எஸ். கே. மயிலவன் 2/199 , செல்லப்பிள்ளையார்குளம் அணைந்த நாடானூர் அஞ்சல் ஆலங்குளம் எம் . நவநீத கிருஷ்ணகண்ணன் 16117, முதல் தெரு சிவகுருநாதபுரம் சுரண்டை எஸ். காளிராஜ் 5/13, ஜுப்ளி 7 வது தெரு இலஞ்சி, தென்காசி எம். ரகுமான் சாதத் எச் 86, தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய குடியிருப்பு தென்காசி

### திருச்சி வடக்கு மாவட்டம்

தலைவர் எஸ். இராஜ்ீ 5/244 சி, கத்தாள் அம்மன் கோவில் தெரு அமைதிபுரம், துறையூர் திருச்சி - 621 010

துணை தலைவர் : எஸ். அருள் மொழிவர்மன் நெ .88, மேலகுடித் தெரு செவந்தலிங்கபுரம் அஞ்சல் முசிறி தாலுக்கா திருச்சி - 621 202

அமைப்பாளர் : **எம். ஜி. ராஜன்** நெ. 69/1, கே என் பாளையம் முசிறி வட்டம் திருச்சி - 621 211

துணை அமைப்பாளர்கள் : எம். கதிரேசன் நெ. 5/212 பி, அகத்தியர் நகர் அழகாபாட்டி சாலை, முசிறி திருச்சி - 621 211 வி. கனிமொழி நெ. 32 /19 எ, சமயபுரம் ரோடு மண்ணச்சநல்லூர் அஞ்சல் திருச்சி - 621 005 கே. சசிகுமார் நெ. 38/66, கீழகடை வீதி துறையூர் அஞ்சல் & வட்டம் திருச்சி - 621 010 பி. சிவசங்கரன் அட்டாளப்பட்டி மேட்டுப்பட்டி அஞ்சல் முசிறி தாலுக்கா திருச்சி மாவட்டம் - 621 211 ஆர். நரேஷ் குமார் 1248, முசிறி பிரிவு ரோடு மதுராபுரி அஞ்சல் துறையூர் வட்டம் திருச்சி மாவட்டம்

### கரூர் மாவட்டம்

தலைவர் : பி. ரமணி திருநகர், தாந்தோணிமலை அஞ்சல் கரூர் தாலுக்கா கரூர் மாவட்டம் - 639 005

துணை தலைவர் : ரெ. மணிவாசகம் நெ .4/40 , செல்லிபாளையம் கோயம்பள்ளி அஞ்சல் மண்மங்கலம் தாலுக்கா கரூர் மாவட்டம் - 639 114

அமைப்பாளர் : **கே. தாசப்பிரகாஷ்** நெ. 2 /1, மகாலட்சுமி கார்டன் காந்திகிராமம் தெற்கு பசுபதிபாளையம் அஞ்சல் கரூர் தாலுக்கா கரூர் மாவட்டம் - 639 004

துணை அமைப்பாளர்கள் : கே. எஸ். எம். சாகுல் ஹமீது நெ. 22 ஈ , வண்டிபேட்டை தெரு பெரியபாலம் குளித்தலை அஞ்சல் & தாலுக்கா கரூர் மாவட்டம் - 639 102 எம். செல்வகுமார் 7/67, மாரியம்மன் கோவில் தெரு மாயனூர் அஞ்சல் கிருஷ்ணராயபுரம் தாலுக்கா கரூர் மாவட்டம் - 639 108 செ. சோமசுந்தரம் 184, திருக்காம்புலியூர் எல். என். எஸ். அஞ்சல் கரூர் தாலுக்கா கரூர் மாவட்டம் - 639 001 ம. லட்சுமணன் 74, கண்ணாரசந்து மாவடியான் கோவில் தெரு கரூர் அஞ்சல் & தாலுக்கா கரூர் மாவட்டம் - 639 001 டி. பிச்சைமுத்து நடையனூர் வேலாயுதம்பாளையம் அஞ்சல் புகளூர் தாலுக்கா கரூர் மாவட்டம் - 639 117

### மயிலாடுதுறை மாவட்டம்

தலைவர் : வி. பன்னீர்செல்வம், எம்.காம்.,பி.எல்., 168/ஜி, மெயின் ரோடு விளந்திட சமுத்திரம் சீர்காழி

துணை தலைவர் : இரா. ஸ்டாலின், எம்.எஸ்சி.,எம்.எல்., கற்பள்ளம் நல்லவினாயகபுரம் அஞ்சல் சீர்காழி தாலுக்கா

அமைப்பாளர் : **வி. எஸ். பிரபாகரன்**, பி.காம்., பி.எல்., தெற்கு வீதி, வழுவூர் அஞ்சல் குத்தாலம் தாலுக்கா துணை அமைப்பாளர்கள் பூ. அறவொளி, பி.காம்., பி.எல்., 26/5, மேலத்தெரு :ஆற்காடு ஆனந்ததாண்டவபுரம் மயிலாடுதுறை தாலுக்கா ஆர். ரகுவர்மா, பி. ஏ., பி.எல்., தெற்கு தெரு கோடிமங்கலம் கே. ஆர். புரம் அஞ்சல் குத்தாலம் தாலுக்கா வே. விஜயகுமார், எம். ஏ.,பி.எல்., 1/80, அழகன் தோப்பு தெரு திருவளாப்புத்தூர் அஞ்சல் மயிலாடுதுறை தாலுக்கா எ. தியாகராஜன் , பி.எஸ்சி.,பி.எல்., நெ. 17 டி, சால்ட் ஆபீஸ் மெயின் ரோடு 92, கீழையூர் பூம்புகார் - கவிரிப்பூம்பட்டினம் அஞ்சல் சீர்காழி தாலுக்கா என். பிரபு 3 பி, ராதாநல்லூர் தோட்டம் காலமநல்லூர் அஞ்சல் தரங்கம்பாடி தாலுக்கா

| | |
|---|---|
| **"அண்ணா அறிவாலயம்"** | **என்.ஆர். இளங்கோ** |
| சென்னை - 18. | செயலாளர் |
| நாள் : 30-08-2023 | தி.மு.க. வழக்கறிஞர் அணி |




தருமபுரி கிழக்கு மாவட்டம் அதியமான் கோட்டை ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவு திட்டம் குறித்து வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.உடன் மாவட்ட ஆட்சியர் திருமதி.சாந்தி,முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும்,தருமபுரி கிழக்கு மாவட்ட கழக செயலாளருமான தடங்கம் பெ.சுப்ரமணி,மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் கு.குணசேகரன் மற்றும் அரசு அலுவலர்கள் இருந்தனர்.



தூத்துக்குடி மாவட்டம் வ.உ.சி துறைமுகத்தின் தெற்கு கடற்கரைப் பகுதியில் உள்ள முள்ளக்காடு கடற்கரைப் பகுதியில் கடல்நீர் சாகச விளையாட்டுகள் தொடங்குவது குறித்து சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி.பி.கீதாஜீவன், சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆகியோர், சுற்றுலாத்துறை இயக்குநர் சந்தீப் நந்தூரி, மாவட்ட ஆட்சியர் தலைவர் மரு.கி.செந்தில்ராஜ், ஆகியோர் முன்னிலையில் 29.08.2023 அன்று கள ஆய்வு மேற்கொண்டார்கள். அருகில் மாவட்ட வருவாய் அலுவலர் ச.அஜய் சீனிவாசன், தூத்துக்குடி சார் ஆட்சியர் கௌரவ்குமார், மண்டல மேலாளர் (சுற்றுலா வளர்ச்சிக் கழகம், மதுரை) டேவிட் பிரபாகரன், சுற்றுலா அலுவலர் திருவாசன், தூத்துக்குடி வட்டாட்சியர் பிரபாகரன், முள்ளக்காடு ஊராட்சி மன்றத் தலைவர் கோபி மற்றும் அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.

### திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்றத் தொகுதி ரெட்டியார் சத்திரம் ஒன்றியத்தில்

# ரூ.65.50 லட்சத்தில் முடிவுற்ற கட்டிடப் பணிகள்!

## மக்கள் பயன்பாட்டிற்கு அமைச்சர் ஐ.பெரியசாமி திறந்து வைத்தார்!

திண்டுக்கல், செப். 1 -

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்ற தொகுதி ரெட்டியார் சத்திரம் ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி ரூ.65.50 இலட்சம் மதிப்பீட்டிலான முடிவுற்ற கட்டடப் பணிகளை பொதுமக்கள் மற்றும் மாணவ, மாணவிகள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.

ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி, பலக்கனூாத்து, கே.புதுக் கோட்டை, குருநாத நாயக்கனூார் மற்றும் முரு நெல்லிக்கோட்டை ஊராட்சி பகுதிகளில் ரூ.65.50 இலட்சம் மதிப்பீட்டிலான முடிவுற்ற கட்டடப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் பூங்கொடி தலைமையில் பொதுமக்கள் மற்றும் மாணவ, மாணவிகள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். இதில் ரெட்டியார்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், பலக்கனூாத்து ஊராட்சிக்குட்பட்ட ஒண்டிவாடநாயக்கன் பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய பள்ளி கட்டடம், கே.புதுக் கோட்டை ஊராட்சியில் ரூ.5.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பயணிகள் நிழற்குடை, குருநாத னாயக்கனூார் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய பள்ளி கட்டடம், முருநெல்லிக் கோட்டை ஊராட்சிக்குட்பட்ட ஆசாரிபுதூார் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய பள்ளிக்கட்டடம் என மொத்தம் ரூ.65.50 இலட்சம் மதிப்பீட்டிலான முடிவுற்ற திட்டப்பணிகள் பொதுமக்கள் மற்றும் மாணவ, மாணவிகள் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழக மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து, அவற்றை கடைக்கோடி மக்களையும் சென்றடையும் வகையில் செயல்படுத்தி, இந்தியாவிலேயே தலைசிறந்த முதலமைச்சராக திகழ்கிறார்.

திண்டுக்கல் மாவட்டத்தில் கிராமப்புற சாலைகள் மேம்பாட்டுக்காக ரூ.600 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில் ஆத்தூார் சட்டமன்ற தொகுதிக்கு ரூ.100 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**விதிகளின்படி அனைவருக்கும் உரிமைத் தொகை!**

அரசு பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் வாயிலாக சுமார் 17.50 இலட்சம் பள்ளி மாணவ, மாணவிகள் பயனடைகின்றனர்.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், திட்டமிட்டபடி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் செப்டம்பர் 15ஆம் தேதி துவக்கி வைக்கப்படவுள்ளது. கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் இது வரை 1.62 கோடி விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. அரசு விதித்துள்ள விதிகளின்படி அனைவருக்கும் உரிமைத்தொகை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். விவசாயிகள் மற்றும் பொதுமக்களுக்கு தேவையான அனைத்து வசதிகளை மேம்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

பலக்கனூாத்து ஊராட்சியில் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று குடிநீர் திட்டப்பணிகள், சாலைப்பணிகள் என பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளுக்கு கடந்த 2 ஆண்டுகளில் ரூ.61.34 இலட்சம் நிதி வரப்பெற்று பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கே.புதுக் கோட்டை ஊராட்சியில் ரூ.5.50 கோடி மதிப்பீட்டில் பல்வேறு திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நியாய விலைக்கடைகளில் பொது மக்களுக்கு தரமான குடிமைப்பொருட்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில், ரெட்டியார்சத்திரம் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் ப.க.சிவகுருசாமி ,கிழக்கு மாவட்டக் கழக பொருளாளர் சத்தியமூர்த்தி, துணைத் தலைவர் செல்வகுமார் மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் தி சுப்புலட்சுமிசண்முகம்,ரெட்டியார்சத்திரம் ஒன்றியச் செயலாளர் மணி, ஊராட்சி மன்றத் தலைவர் செல்வராணி, ஈஸ்வரி தமிழ்ச்செல்வன், வெள்ளையன், ரமேஷ், சின்னு என்ற வி முருகன் வட்டார வளர்ச்சி அலுவலர் மலரவன், கிருஷ்ணன், வட்டாட்சியர் வடிவேல்முருகன், அரசு அலுவலர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

### கட்சி, ஆட்சியை கட்டுக்கோப்புடன் நடத்துவதில்

# கலைஞரின் உருவாகவே மு.க.ஸ்டாலின் காட்சியளிக்கிறார்!

## விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் அறிக்கை!

சென்னை, செப். 1 -

பல்வேறு சோதனைகளை சாதனைகளாக மாற்றி ஜனநாயகத்தையும் சமூக நல்லிணக்கத்தையும் பேணிக் காப்பவராக தி.மு.க தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் உயர்ந்து நிற்கிறார்.

ஆறாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் முதல்வருக்கு பொன்குமார் பாராட்டு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராகப் பொறுப்பேற்று ஐந்து ஆண்டுகளை நிறைவு செய்து, ஆறாவது ஆண்டில் அடியெடுத்து வைக்க இருக்கும் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சியின் சார்பில் வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஐந்தாண்டு காலத்தில் அவர் சந்தித்த சோதனைகள் அதனை சாதனைகளாக மாற்றிய சாதுர்யம், கட்சியையும், ஆட்சியையும் கட்டுக் கோப்புடன் நடத்தி வரும் பாங்கு, கூட்டணி கட்சிகளை ஒருங்கிணைத்து, அரவணைத்து செல்லும் விதம், இவை அனைத்தும் தலைவர் கலைஞர் அவர்களின் உருவாகவே தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் காட்சியளிக்கிறார்.

தலைவர் கலைஞருக்கு பிறகு திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற நாள் முதல் இன்று வரை கட்சியின் தலைவராகவும், ஆட்சியின் தலைவராகவும் அவர் பல்வேறு சோதனைகளையும் நெருக்கடிகளையும் சந்தித்து வருகிறார். ஆனால் சோதனைகளைக் கண்டு துவண்டு விடாமல் அதனை லாவகமாக கையாண்டும் தேவைப்படும் இடங்களில் துணிச்சலோடு எதிர்த்த நின்றும் வென்றும் காட்டி தன்னுடைய தலைமைத்துவப் பண்பை இந்த நாட்டிற்கு உணர்த்தியுள்ளார். கட்சியின் தலைவராக இருந்து கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வலிவான கூட்டணி அமைத்து மகத்தான வெற்றியை பெற்று இந்தியாவையே திரும்பி பார்க்க வைத்தார். அதன் பிறகு நடைபெற்ற தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தலில் வென்று தமிழ்நாட்டின் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தார். ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின் ஒன்றிய அரசு கொடுத்து வரும் தொல்லைகளுக்கு அளவே இல்லை.



இந்த தமிழ் மண்ணுக்கு, தமிழ் மக்களுக்கு, தமிழ் மொழிக்கு எப்போதெல்லாம் துரோகம் எந்த திசையில் இருந்து வந்தாலும் அதை எதிர்த்து நிற்கிற தைரியம், துணிச்சல் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எப்போதும் உண்டு என்பதை தளபதியார் தலைமையிலும் நிரூபித்து காட்டப்பட்டுள்ளது. ஒன்றிய அரசின் அடாவடித்தனமான செயல்களால் பாரதிய ஜனதா கட்சி ஆட்சி இல்லாத மாநிலங்களில் எல்லாம் அந்த ஆட்சியை அகற்றுவதற்கும் அந்த ஆட்சிக்கு தொல்லை கொடுப்பதற்கும் சாம, தான, பேத, தண்டம் என அனைத்து வகைகளையும் கையாண்டு வருவதை இந்த நாடு அறியும். அதே முறைகளை தமிழ்நாட்டிலும் நடைமுறைப்படுத்தி வருவதை கண்கூடாக பார்க்கிறோம். அதற்கு ஆளுநர் ஒரு பெரும் கருவியாக பயன்படுத்தப்பட்டு வருகிறார். மாநில அரசின் திட்டங்களுக்கு ஒத்துழையாமை, நிதி ஒதுக்கீடு செய்வதில் ஓரவஞ்சனை, மாநில அரசின் மக்கள் திட்டங்களுக்கு ஆதரவு அளிக்காமல் எவ்வளவோ தொல்லைகள் கொடுத்தாலும் அவைகளை எல்லாம் தவிடு பொடி ஆக்கி, தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக்கிக் காட்டிய பெருமை முதல்வர் தளபதி மு.க.ஸ்டா லின் அவர்களுக்கு உண்டு. அதைத் தான் கடந்த ஆண்டு இந்தியா டுடே நாளேடு நடத்திய ஆய்வின் மூலம் வெளிப்படுத்தப்பட்டு இருக்கிறது. கல்வி, சுகாதாரம், பொருளாதாரம், தொழில், சட்டம் ஒழுங்கு, விவசாயம் போன்ற 12 தலைப்புகளில் ஆய்வு செய்த அந்த ஏடு இந்தியாவிலேயே தமிழ்நாடு ஒன்பது துறைகளில் முதன்மை பெற்ற விளங்குகிறது என்பதை வெளிப்படுத்திருக்கிறது. இதுதான் திராவிட மாடல் ஆட்சியின் சாதனை.

அறிவு சார்ந்த அடுத்த தலைமுறையை உருவாக்குவதற்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பள்ளி மாணவர்களுக்கான காலை உணவு திட்டம், மகளிருக்கு இலவச பேருந்து பயண திட்டம், உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் ரூபாய் 1000 வழங்கும் திட்டம், மாதம் தோறும் ரூபாய் ஆயிரம் வழங்கும் மகளிர் உரிமைத் தொகை திட்டம், இல்லம் தேடி கல்வி, மக்களை தேடி மருத்துவம், இந்நுயிர் காக்கும் 48 மணிநேர அரிய திட்டம் இவையெல்லாம் ஏற்கனவே நடைமுறையில் உள்ள திட்டங்களின் நீடிப்பு அல்ல ஒரு முதலமைச்சரின் தனி சிந்தனையில் ஏற்பட்ட திட்டங்கள் ஆகும். இப்படிப்பட்ட அரிய திட்டங்களால் தமிழ்நாட்டு மக்களின் தனி மனித வருமானம் உயர்ந்து, பொருளாதார வளர்ச்சி பெற்றிருப்பதாக புள்ளி விவரங்கள் கூறுகின்றன. இப்படிப்பட்ட ஒரு சிறந்த ஆட்சியை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொடுத்து வருகிறார்கள்.

சமூக நீதி, பெண்களுக்கு சம உரிமை, சாதி மத வேறுபாடற்ற நிலை, பிறப்பால் அனைவரும் சமம், எல்லோருக்கும் எல்லாம் என்கிற கொள்கைகளை உள்வாங்கிய திராவிடம் என்பது தந்தை பெரியாருக்கு பின் தமிழ்நாட்டில் மறைந்து விட்டது என்று எண்ணியவர்களுக்கு பேரறிஞர் அண்ணா அவர்கள் அந்தக் கொள்கையை தூக்கிப் பிடித்தார்கள். அண்ணாவின் மறைவிற்கு பிறகு மகிழ்ச்சி கொண்ட சனாதான சக்திகளுக்கு தலைவர் கலைஞர் ஒரு சாட்டை அடியாக விளங்கினார். கலைஞரின் மறைவுக்கு பிறகு தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியா முழுவதும் உள்ள சனாதன கும்பல் இனி திராவிடத்திற்கு இடமில்லை என்று மகிழ்ச்சியுற்ற நிலையில் அந்த திராவிடத்தை மற்ற தலைவர்களை விட தூக்கி பிடிக்கக் கூடிய ஆற்றல், தொடர்ந்து அந்த கொள்கையை அடுத்த நிலைக்கு கொண்டு சென்று நடைமுறைப்படுத்தக் கூடிய தைரியம் தனக்கு உண்டு என்று காட்டியவர் திமுக தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் ஆவார்.

ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியை கண்டு பல்வேறு மாநிலங்கள் மிரண்டு கிடந்த நிலையில் ஒன்றிய அரசின் தவறான, ஜனநாயக விரோத, சமூக நல்லிணத்திற்கு எதிரான செயல்பாடுகளை சம்மட்டி கொண்டு அடித்து சனாதான சக்திகளை எதிர்த்து நின்றவர் தளபதி மு.க. ஸ்டாலின் ஆவார். தளபதி அவர்களின் செயல்பாடுகளை பார்த்த பிறகு தான் இந்திய அளவில் பல்வேறு தலைவர்களுக்கு ஒரு நம்பிக்கையும் தைரியமும் ஏற்பட்டது. அதனுடைய விளைவுதான் இன்றைக்கு உருவாக்கப்பட்டிருக்கிற இந்தியா (ஐ.கூ.னு.ஐ.ஹ) கூட்டணி என்பதை எவரும் மறந்திட முடியாது. ஆகவே மாநில அளவிலும், ஒன்றிய அளவிலும் ஜனநாயகத்தை காக்கவும் சமூக நல்லிணக்கத்தை பேணவும்; இன, மொழி, மண்ணைக் காக்கவும் உயர்ந்து நிற்கக்கூடிய சிறந்த தலைவராக தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் விளங்குகிறார்கள். ஆறாம் ஆண்டின் அடியெடுத்து வைக்கும் அவரை விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி வாழ்த்தி வரவேற்கிறது. அவருடைய பணித் தொடர, வெற்றிகளைக் குவித்திட விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி அவருக்கு பக்கபலமாக இருந்து பணியாற்றும்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### 3 திருக்கோயில்களுக்குச் சொந்தமான

# ரூ.5.90 கோடி மதிப்பீட்டிலான நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்பு!

## இந்து சமய அறநிலையத்துறை அதிரடி நடவடிக்கை!

சென்னை, செப். 1 -

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படியும், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அறிவுறுத்தலின் படியும் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமான சொத்துக்களை ஆக்கிர மிப்பாளர்களிடமிருந்து மீட்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. அந்த வகையில் நேற்று முன்தினம் (30.8.2023) தூத்துக்குடி மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களைச் சேர்ந்த 3 திருக்கோயில்களுக்கு சொந்தமான ரூ.5.90 கோடி மதிப்பீட்டிலான நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டு திருக்கோயில்கள் வசம் சுவாதீனம் பெறப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம், மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான 22 ஏக்கர் 48 சென்ட் புன்செய் நிலம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்தது. தூத்துக்குடி இணை ஆணையர் நீதிமன்ற உத்தரவின்படி சட்டப்பிரிவு 78ன் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு, தூத்துக்குடி உதவி ஆணையர் டி.சங்கர் முன்னிலையில், வருவாய் மற்றும் காவல் துறையினர் உதவியோடு ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டு திருக்கோயில் வசம் சுவாதீனம் பெறப்பட்டது. இதன் தற்போதைய மதிப்பு ரூ. 2 கோடியாகும்.

திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டம், சிறுபுலியூர் அருள்மிகு கிருபா சமுத்திர பெருமாள் திருக்கோயிலுக்குச் சொந்தமான 24 ஏக்கர் நன்செய் நிலமும் மற்றும் திருப்பள்ளி முக்கூடல் கிராமம் அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயிலுடன் இணைந்த அபிசேகக் கட்டளைக்குச் சொந்தமான 19 ஏக்கர் 54 சென்ட் நன்செய் நிலமும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்தது.

நாகப்பட்டினம் இணை ஆணையர் நீதிமன்ற உத்தரவின்படி சட்டப்பிரிவு 78ன் படி இன்று நாகப்பட்டினம் இணை ஆணையர் வி.குமரேசன் மற்றும் திருவாரூர் உதவி ஆணையர் (கூ.பொ.) ப.ராணி ஆகியோர் முன்னிலையில் வருவாய் மற்றும் காவல் துறையினர் உதவியோடு ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு திருக்கோயில்கள் வசம் சுவாதீனம் பெறப்பட்டது. மீட்கப்பட்ட சொத்துக்களின் மதிப்பு ரூ.3.90 கோடியாகும்.

ஆகமொத்தம் இன்றைய தினம் மீட்கப்பட்ட 3 திருக்கோயில்களுக்குச் சொந்தமான சொத்துக்களின் மதிப்பு ரூ.5.90 கோடியாகும்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## ‘வாட்ஸ் அப்’ பில் வந்த செய்தி!





### ஊழலை விசாரித்ததில் ஊழல்!

# அமலாக்க துறையை உடனே இழுத்து மூட உத்தரவிட வேண்டும்!

## உச்ச நீதிமன்றத்துக்கு ஆம் ஆத்மி வலியுறுத்தல்!

புதுடெல்லி,செப். 1-

அமலாக்க துறை உதவி இயக்குநர் மீது சி.பி.ஐ. வழக்குப் பதிவு செய்ததை தொடர்ந்து, அமலாக்க இயக்குனரகத்தை உச்ச நீதிமன்றம் மூட வேண்டும் என்று ஆம் ஆத்மி கட்சி வலியுறுத்தி உள்ளது.

டெல்லி மதுபானக் கொள்கை முறைகேடு வழக்கில் நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்காக மதுபான விற்பனை நிறுவன தொழிலதிபர் அமன்தீப் தாலிடம் அமலாக்க இயக்குநரகத்தின் துணை இயக்குநர் பவன் காத்ரி ரூ.5 கோடி லஞ்சம் கேட்டு பெற்றுள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், செய்தியாளர்களைச் சந்தித்து பேசிய ஆம் ஆத்மி கட்சியின் மாநிலங்களவை எம்.பி. சஞ்சய் சிங், “ரூ.5 கோடி லஞ்சம் பெற்றுள்ள விவகாரத்தில் அமலாக்க இயக்குநரக உதவி இயக்குநருக்கு எதிராக சி.பி.ஐ. வழக்கு பதிவு செய்துள்ளது.

மதுபான ஊழல் தொடர்பான ஆதாரத்தை கண்டுபிடிக்க அமலாக்கத்துறை தவறிவிட்டது. தற்போது அமலாக்கதுறை என்பது மிரட்டி பணம் பறிக்கும் துறையாகி விட்டது. முறைகேடு விசாரணை என்ற பெயரில் பணம் பறிக்கிறார்கள். நாட்டின் பல்வேறு பகுதிகளில் எம்.எல்.ஏ.க்களை உடைக்க இது பயன்படுத்தபடுகிறது. இது குண்டர் களின் துறை.

எனவே, இந்த துறையை உடனடியாக மூட உச்சநீதிமன்றம் நடவடிக்கை எடுக்க வேண்டும். லஞ்சமாக பெற்றத் தொகையில் யாருக்கு எவ்வளவு பங்கு கிடைத்தது என்பது பற்றி விசாரணை நடத்த வேண்டும்,” என்று கூறினார்.


தமிழ்நாடு அரசு

**நெடுஞ்சாலைத்துறை**

**கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், சேலம்**

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

**குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.20/2023-2024/தவஅ/நாள்-28.08.2023**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், ஆளுநரின் சார்பாகவும் கண்காணிப்புப்பொறியாளர் (நெ), க(ம)ப, சேலம் வட்டம் அவர்களால், **தருமபுரி (நெ)** க(ம)ப கோட்டத்தைச் சார்ந்த 2023–24 திட்டம் சாரா ஒரு பணிக்கு இணையவழியில் மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **08.09.2023 – 15.00 மணி வரை** வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்பு தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் பெறப்படும் நாள் மற்றும் அனைத்து இதர விபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **31.08.2023** முதல் தெரிந்துக் கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

**கண்காணிப்புப்பொறியாளர் (நெ)**
**க(ம)ப, சேலம் வட்டம்**

செ.ம.தொ.இ/4798/ஒப்பந்தப்புள்ளி/2023

தமிழ்நாடு அரசு

**நெடுஞ்சாலைத்துறை**

**கண்காணிப்புப்பொறியாளர் (நெ), திட்டங்கள் வட்டம், தஞ்சாவூர்.**

கலைஞர் 100 1924 - 2023

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு(இணையதள வழியில் மட்டும்)**

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். 05/2023-24 / முவஅ / நாள்: 25.08.2023.**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், ஆளுநரின் சார்பாகவும் கண்காணிப்புப்பொறியாளர் (நெ), திட்டங்கள் வட்டம், தஞ்சாவூர் அவர்களால் தஞ்சாவூர் (நெ) திட்டங்கள் கோட்டத்திற்கான கீழ்கண்ட பணிக்கு இணையதள வழியில் மட்டுமே இனவாரி ஒப்பந்தப்புள்ளி (இரண்டு உறைகள் முறை) **21.09.2023, 15.00 மணி வரை** (இணைய நேரப்படி) வரவேற்கப்படுகிறது.

சி.ஆர்.ஐ.டி.பி. 2023-24 “முசிறி-குளித்தலை-புதுக்கோட்டை-ஆலங்குடி-பேராவூரணி-சேதுபாவாச்சத்திரம் சாலை (மா.நெ.71) கி.மீ 147/6 ல் பூனைக்குத்தி ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் திரும்பகட்டுதல் பணி”

பணியின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விவரங்களை **http://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **04.09.2023** முதல் தெரிந்துக் கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

**கண்காணிப்புப் பொறியாளர் (நெ)**
**திட்டங்கள் வட்டம், தஞ்சாவூர்.**

செ.ம.தொ.இ./4777/ஒப்பந்தப்புள்ளி/2023

**பெருநகர சென்னை மாநகராட்சி**
**மண்டலம் – 1**

கலைஞர் 100 1924 - 2023

ம.அ.1.ந.க.எண் பி1/1690/2023 **மின்னணு ஒப்பந்த புள்ளி அறிவிப்பு**

**கீழ்காணும் பணிக்கு மண்டல அலுவலர்–1 அவர்களால் கோரப்படுகிறது**

மண்டலம்–1, 2023–24 ஆம் ஆண்டு **சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் கீழ் (MLA Fund)** பகுதி–3 வார்டு எண்–11 காலடிப்பேட்டை மார்க்கெட் லேனில் உள்ள சென்னை உயர்நிலைப் பள்ளியில் புதியதாக 3 வகுப்பறைகள் மற்றும் கழிவறை கட்டும் பணி.

மேலும் விவரங்களுக்கு **http://tntenders.gov.in** இணைய தளத்தின் மூலம் விவரங்கள் தெரிந்து கொண்டு மின் ஒப்பத்தில் கலந்து கொள்ளலாம்

**முன்வைப்பு தொகை ரூ.80500/-**

**ஒப்பம் சமர்ப்பிக்கும் நாள் : 13.09.2023 அன்று பிற்பகல் 3.00 மணி வரை**

**ஒப்பம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் 14.09.2023 பிற்பகல் 3.30 மணி**

**மேலும் விவரங்களுக்கு http://tntenders.gov.in**

செ.ம.தொ.இ / 4818 / ஒப்பந்தப்புள்ளி / 2023

**மண்டல அலுவலர் – 1**



சிலி குடியரசு நாட்டிற்கு மூன்று நாள் அரசு முறை பயணமாக சென்ற குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் (23.8.2023) அன்று சிலி குடியரசின் அமைச்சர்கள், உயர் அலுவலர்கள் மற்றும் உலக வங்கி பிரதிநிதிகளுடன் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார். உடன் சிலி குடியரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற திட்டமிடல் அமைச்சர் கார்லோஸ் மான்டெஸ் சிஸ்டர்னாஸ் (Mr. Carlos Montes Cisternas, Minister for Housing and Urban planning) வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா , தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் முனைவர் பொ.சங்கர், வாரிய இணை மேலாண்மை இயக்குநர் .மீ.தங்கவேல் , உலக வங்கியின் மூத்த ஆலோசகர் திருமதி இசபெல் பிரெயின் (Isabel Brain, Senior Consultant, World Bank), உலக வங்கியின் மூத்த நகர்ப்புற நிபுணர் திருமதி யான் எஃப் ஜாங் (Yan F Zhang, Senior Urban Specialist World Bank) உட்பட பலர் உள்ளனர்.

## தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம்

# தமிழ் நாடு அரசின் UPSC முதல்நிலை தேர்வுக்கான ஊக்கத்தொகைத் திட்டம்

### நான் முதல்வன் மதிப்பீட்டுத் தேர்வுக்கான நுழைவுச் சீட்டு வெளியீடு

சென்னை, செப்.1-

நான் முதல்வன் திட்டத்தின் கீழ் போட்டித் தேர்வுப் பிரிவானது மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை மற்றும், சிறப்புத் திட்ட செயலாக்க துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் 07.03.2023 அன்று துவங்கி வைக்கப்பட்டது. அப்பிரிவானது தமிழ்நாட்டு இளைஞர்கள் ஒன்றிய அரசு வேலைவாய்ப்புக்கான போட்டித் தேர்வுகளை எளிதாக அணுகும் வண்ணம் பல பயிற்சித் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

இந்நிலையில் 2023-24க்கான தமிழ் நாடு அரசின் பட்ஜெட் உரையில், நான் முதல்வன் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு ஆண்டும் ஒன்றிய அரசுக் குடிமைப் பணித் தேர்வுகளுக்குத் தயாராகி வரும் 1000 மாணவர்கள் , மதிப்பீட்டுத் தேர்வு மூலம் தேர்வு செய்யப்பட்டு, முதல்நிலைத் தேர்வுக்குத் தயாராவதற்கு ஒவ்வொரு மாணவருக்கும் மாதம் 7,500 ரூபாய், பத்து மாதங்களுக்கு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

ஊக்கத்தொகைக்கான 1000 பயனாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக 2.08.2023 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு 17.08. 2023 ஆம் தேதி வரை விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக நான் முதல்வன் மற்றும் அகில இந்திய குடிமை பணிகள் பயிற்சி மையங்களுக்கான மதிப்பீட்டுத் தேர்வு 10.09.2023 அன்று நடைபெறும் நிலையில், இத்தேர்வுக்கான நுழைவுச் சீட்டு 30.08.2023 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

நான் முதல்வன் ஊக்கத்தொகைக்கான மதிப்பீட்டுத் தேர்வுக்கு விண்ணப்பித்திருக்கும் மாணவர்கள் https://www.naanmudhalvan.tn.gov.in என்ற இணையதளத்தில் நுழைவுச் சீட்டை பதிவிறக்கம் செய்து கொள்ளுமாறு நான் முதல்வன் சிறப்பு திட்ட இயக்குநர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## திண்டுக்கல் மாவட்டத்தில்

# ரூ.34.80 லட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள்!

### நாடாளுமன்ற நிலைக்குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி ஆய்வு செய்து வழங்கினார்!

திண்டுக்கல், செப்.1-

திண்டுக்கல் மாவட்டத்தில் பாராளுமன்ற நிலைக்குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் தலைமையிலான குழுவினர் ஆய்வு மேற்கொண்டு, ரூ.34.80 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

திண்டுக்கல் மாவட்டத்திற்கு 2 நாட்கள் ஆய்வுப் பயணம் மேற்கொண்டுள்ள நாடாளுமன்ற நிலைக்குழு (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை) தலைவர் கனிமொழிஅவர்கள் தலைமையிலான குழுவினர் மாவட்ட ஆட்சித்தலைவர் மொ.நா.பூங்கொடி, முன்னிலையில் திண்டுக்கல் பகுதியில் பல்வேறு இடங்களில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

இந்த ஆய்வின்போது, திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர்ப.வேலுச்சாமி, பாராளுமன்ற நிலைக்குழு உறுப்பினர்கள் ஏ.கே.பி சின்ராஜ், ராஜ்வீர் டீலர், நரேந்திர குமார், டாக்டர் தலாரி ரங்கய்யா, ஷியாம் சிங் யாதவ், எம்.அப்துல்லா சிர் ஆகியோர் உடனிருந்தனர்.

நாடாளுமன்ற நிலைக்குழுவினர், திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், எத்திலோடு ஊராட்சியில் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் மற்றும் வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டனர்.

அதனைத்தொடர்ந்து, அங்கு தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கிராம வறுமை ஒழிப்பு சங்கம் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு அலுவலகத்தை பார்வையிட்டனர். அங்கு அமைக்கப்பட்டிருந்த மகளிர் சுயஉதவிக்குழுவினர் உற்பத்தி பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்த அரங்கை பார்வையிட்டனர். மகளிர் சுயஉதவிக் குழுவினருக்கு அளிக்கப்படும் தொழிற்பயிற்சிகள், தொழில் தொடங்கிட வழங்கப்படும் வங்கி கடனுதவிகள், உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள வசதிகள், அதன்மூலம் கிடைக்கும் வருமானம், மகளிரின் பொருளாதார மேம்பாடு ஆகியவை குறித்து மகளிர் சுயஉதவிக்குழுவினரிடம் கேட்டறிந்தனர். தொடர்ந்து, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் கிராம பஞ்சாயத்து சேவை மையத்தின் செயல்பாடுகளை கேட்டறிந்தனர். பின்னர் அங்குள்ள அங்கன்வாடி மையத்திற்குச் சென்று, குழந்தைகளுக்கு அளிக்கப்படும் கற்றல் முறை, வழங்கப்படும் உணவுகள், சமையலறை, குடிநீர் வசதி, சுற்றுப்புற சுகாதாரம் ஆகியவை குறித்து ஆய்வு மேற்கொண்டனர்.

பின்னர், இ.கோவில்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவு வழங்கும் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். இன்றைய குழந்தைகள்தான் நாளைய எதிர்கால சமுதாயம் என்பதை அறிந்து, அவர்களுக்கு கல்வி அளிக்கவும், பசியின்றி கல்வி கற்கவும் அரசு தொடக்கப்பள்ளிகளில் காலை உணவுத் திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்துள்ளார்கள். இத்திட்டத்தின்படி வாரந்தோறும் வழங்க வேண்டிய உணவு வகைகள் அட்டவனையில் குறிப்பிட்டுள்ளபடி வழங்கப்படுகிறதா என்பது குறித்தும், சமையலறை, பாத்திரங்கள், குடிநீர் வசதி, கழிப்பறை வசதி உள்ளிட்டவை குறித்தும் ஆய்வு மேற்கொண்டனர்.

அதனைத்தொடர்ந்து, பிரதம மந்திரி ஊரக குடியிருப்பு திட்டம்(PMAYG) மூலம் இலவச வீடுகள் கட்டி பயனடைந்த பயனாளிகளுடன் பாராளுமன்ற நிலைக்குழுவினர் கலந்துரையாடினர். பயனாளிகளை தேர்வு செய்யும் முறை, இத்திட்டத்தின் பயன்கள் குறித்து கேட்டறிந்தனர்.

பின்னர் சிலுக்குவார்பட்டியில் நியாயவிலைக் கடையைப் பார்வையிட்டு, அங்கு குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும், அரிசி, சர்க்கரை உள்ளிட்ட பொருட்களின் தரம் குறித்தும், பொருட்கள் இருப்பு குறித்தும் ஆய்வு மேற்கொண்டனர். தொடர்ந்து சிலுக்குவார்பட்டியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் செல்வராஜ் தோட்டத்தில் இருந்து பாலு தோட்டம் வரை அமைக்கப்பட்ட நீர் உறிஞ்சும் அகழிகளை பார்வையிட்டனர்.

இந்த ஆய்வின்போது, நாடாளுமன்ற நிலைக்குழு தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள், 20 நபர்களுக்கு ரூ.27.50 இலட்சம் மதிப்பிலான வங்கி கடனுதவிகள், 23 நபர்கள் தங்கள் விளைநிலங்களில் பலன் தரும் மரக்கன்றுகள் நடவு செய்வதற்காக ரூ.7.3 இலட்சம் மதிப்பிலான ஆணைகள் என மொத்தம் ரூ.34.80 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பெ.திலகவதி, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் திட்ட இயக்குநர் நா.சரவணன், உதவித் திட்ட அலுவலர் திருமதி சங்கமித்ரா உட்பட பலர் உடனிருந்தனர்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் 30.08.2023, புதன்கிழமை அன்று மாலை 6.00 மணிக்கு நாகர்கோவில், செம்மாங்குடி சாலையில் வைத்து மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் அகஸ்தீசன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் தலைமை கழக கொள்கை பரப்பு செயலாளர் திருச்சி என். சிவா எம்.பி. கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.கூட்டத்தில் மாநில மகளிர் அணிச் செயலாளர் திருமதி. ஜெ. ஹெலன்டேவிட்சன் தில்லைசெல்வம், வழக்கறிஞர் ஏ.என். லிவிங்ஸ்டன், வி. ஜோசப் ராஜ், என். தாமரைபாரதி மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

# இளைஞர்களின் உற்சாக எழுச்சி கண்டேன்! அளவற்ற மகிழ்ச்சி கொண்டேன்!

### கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் நெகிழ்ச்சிப் பதிவு! 5ஆம் பக்கத் தொடர்ச்சி

‘மெனு’வில் உள்ளபடி உணவு வழங்கப்படுகிறதா, சமையலறை சுகாதாரமாகப் பராமரிக்கப்படுகிறதா, கழிவறைகளை முறையாகப் பராமரிக்கிறார்களா என்று ஆய்வு செய்தோம். அங்கிருந்த குறைகளைச் சுட்டிக்காட்டி, அவற்றைச் சரிசெய்து எங்களுக்கு அறிக்கையாக அளிக்கும்படி மாவட்ட ஆட்சியரிடம் கேட்டுக்கொண்டோம். பள்ளி மாணவர்கள் கேட்டுக்கொண்டபடி அவர்களுக்கான விளையாட்டு உபகரணங்களையும் உடனடியாக வழங்கி மகிழ்ந்தோம்.

பெரம்பலூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் திடீர் ஆய்வின் போது, நோயாளிகளும் அவர்களின் உறவினர்களும் வைத்த கோரிக்கைகள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வலியுறுத்தினோம். “மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கல்விக்கும் சுகாதாரத்துக்கும்தான் அதிக முக்கியத்துவம் கொடுத்து திட்டங்களைத் தீட்டி வருகிறார். அவற்றை முறையாகப் பயன்படுத்தி மக்களுக்குப் பயனுள்ள வகையில் மருத்துவச் சேவை கிடைக்க உதவ வேண்டும்” என்று சுகாதாரத் துறையினரை அறிவுறுத்தினோம்.

அன்றிரவு பெரம்பலூரிலேயே தங்கி விட்டு, மறுநாள் காலை கடலூர் நோக்கிப் பயணமானோம். வழியில், பெரம்பலூர் எறையூர் சிப்காட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்ட காலணித் தொழிற்சாலை அமைப்பதற்கான கட்டுமானப் பணிகளையும் ஆய்வு செய்தோம். இந்தத் தொழிற்சாலை அந்தப் பகுதியைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்பை உறுதி செய்யும் என்பது நிச்சயம்.

**தொழுதூரில் - அண்ணன் அமைச்சர் சி.வெ.கணேசன் தலைமையில் வரவேற்பு!**

கடலூர் மாவட்ட எல்லையில் தொழுதூரில் மாண்புமிகு அமைச்சர் அண்ணன் சி.வெ.கணேசன் அவர்களின் தலைமையில் கழகத்தினர் வரவேற்பு அளித்தனர். கழுதூரில் கடலூர் ஒருங்கிணைந்த மாவட்டத்துக்கான இளைஞர் அணி செயல்வீரர் கூட்டம். உண்மையிலேயே அதை மாநாடு என்று சொன்னால்தான் பொருத்தமாக இருக்கும். அந்தளவுக்கு இளைஞர்கள் திரண்டிருந்தனர்.

கூட்டம் நடைபெறுவது கடலூர் மேற்கு மாவட்ட எல்லையான கழுதூர். அங்கு நடைபெறும் கூட்டத்திற்கு கடலூரின் கிழக்கு மாவட்ட எல்லையில் இருந்தெல்லாம் இளைஞர்கள் திரளாகக் கலந்துகொண்டிருந்தது என்னை உற்சாகம் கொள்ள வைத்தது. வெவ்வேறு மனநிலை, வெவ்வேறு பின்னணியில் இருந்து அங்குக் கூடியுள்ள அந்த இளைஞர்கள் அனைவரும் கழகம், கழகத் தலைவர் என்ற ஒற்றை நம்பிக்கையில் கூடியுள்ளதை எவரும் புரிந்துகொள்ள முடியும்.

நம்மீது இவர்கள் கொண்டுள்ள நம்பிக்கையை வென்றெடுக்கும் வகையிலும், இவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையிலும் நம் கழகப் பணியை, மக்கள் பணியை அமைத்துக்கொள்ள வேண்டும், அதற்குத் தளராமல் உழைக்க வேண்டும் என்ற உறுதி எனக்குள் ஏற்பட்டது.

**கடலூர் மாவட்டத்தின் - முதன்மையான செயல்வீரர்கள் அண்ணன் எம்.ஆர்.கே.- அண்ணன் சி.வெ.கணேசன்!**

``இளைஞர் அணியில் இருந்து படிப்படியாக உயர்ந்து இன்று மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சராக உள்ள அண்ணன் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள், அமைச்சர் அண்ணன் கணேசன் அவர்கள் இருவரும்தான் இம்மாவட்டத்தின் முதன்மையான செயல்வீரர்கள். அவர்களின் வழியில் உழைக்க உறுதியேற்போம்” என்று உரையாற்றி அனைவரையும் மாநாட்டுக்கு வர வேண்டுகோள் விடுத்தேன்.

அங்கிருந்து கிளம்பி வேப்பூரில் அமைக்கப்பட்டிருந்த முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவு 100 அடி உயர கொடிக் கம்பத்தில் கழகக் கொடியேற்றினேன். அதைத் தொடர்ந்து விருத்தாசலம், வடலூரில் கழகத்தினர் அளித்த வரவேற்பில் மிதந்தபடியே கடலூர் வந்தடைந்தோம்.

முன்னதாகக் கடலூர் பச்சையாங்குப்பம் பகுதியில் முதலமைச்சரின் கிராமச் சாலை மேம்பாட்டுத் திட்டத்தில் 76 லட்சம் ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள தார்ச்சாலையை ஆய்வு செய்தோம்.

மாலை கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி, பல்வேறு துறைகளின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் நலத்திட்டப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டோம்.

பள்ளி, கல்லூரிகளின் தேர்ச்சி விகிதத்தை உயர்த்துவது குறித்துத் தொடர் நடவடிக்கைகள் எடுத்து அது குறித்த தகவல்களை எனக்கு அனுப்பும்படியும் மாவட்ட ஆட்சியரைக்கேட்டுக்கொண்டேன்.

மாண்புமிகு அமைச்சர்கள் எம்.ஆர்.கே அண்ணனும், கணேசன் அண்ணனும் வழியனுப்பி வைக்க நள்ளிரவில் சென்னை வந்து சேர்ந்தோம்.

**மாநாட்டு நிதியளித்தோர்க்கு நெஞ்சார்ந்த நன்றி!**

இந்த செயல்வீரர் கூட்டங்களை ஒருங்கிணைத்து, மாநாட்டுக்கு நிதியளித்த மாண்புமிகு அமைச்சர்கள் அண்ணன் நேரு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், ரகுபதி, மெய்யநாதன், சிவசங்கர், அன்பில் மகேஷ் பொய்யாமொழி, கணேசன், மாவட்டக் கழகச் செயலாளர்கள் அண்ணன்கள் சுந்தர், எஸ்.கல்யாணசுந்தரம், துரை.சந்திரசேகரன், அண்ணாதுரை, பூண்டி கலைவாணன், காடுவெட்டி தியாகராஜன், கௌதமன், நிவேதா முருகன், காரைக்கால் நாஜிம், செல்லபாண்டியன். குன்னம் ராஜேந்திரன், வைரமணி ஆகியோருக்கும், அரசு ஆய்வுக் கூட்டங்களை ஒருங்கிணைத்த சிறப்புத் திட்ட செயலாக்கத் துறைச் செயலாளர் மருத்துவர் தாரேஷ் அகமது ஐ.ஏ.எஸ். அவர்களுக்கும் நன்றி.

இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் இளையராஜா, அப்துல் மாலிக், ஆனந்தகுமார் உள்ளிட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவருக்கும் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**பட்டாசு, பொன்னாடை தவிர்த்து மாநாட்டு நிதி தாரீர்!**

பட்டாசு வெடிப்பதையும், பொன்னாடை, பூங்கொத்து கொடுப்பதையும் தவிர்க்குமாறு பலமுறை அறிவுறுத்தியிருக்கிறேன். அதை மீண்டும் மீண்டும் நினைவூட்ட விரும்புகிறேன். அதற்கு பதிலாக புத்தகங்கள், கழக வேட்டிதுண்டுகள் போன்றவற்றைத் தாருங்கள். வாய்ப்பு உள்ளவர்கள் மாநில மாநாட்டுக்கு, இளைஞர் அணிக்கு வளர்ச்சி நிதியாகவும் தரலாம்.

இந்தப் பயணத்தில் பார்த்த, மகிழ்ச்சிக் கடலில் திளைத்த, ஆயிரக்கணக்கான இளைஞர்கள், நலத்திட்ட உதவிகளைப் பெற்றுக்கொண்டு முதலமைச்சர் அவர்களுக்கும் திராவிட மாடல் அரசுக்கும் நன்றி சொன்ன ஏழை எளிய மக்கள், கோரிக்கை மனுக்களைக் கையில் சுமந்தபடி காத்திருந்த பெண்கள் எனக் கலவையான முகங்கள் என் முன் வந்துபோகின்றன.

லட்சக்கணக்கான கழக இளைஞர்களை ஒருங்கிணைக்கக்கூடிய நாம் இன்னும் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும், மக்களின் தேவை குறித்து இன்னும் கற்க வேண்டும், அவர்களுக்குப் பயன்படும்படி இன்னும் செயலாற்ற வேண்டும் என்ற எண்ணம் தான் எனக்குள் ஏற்படுகிறது.

இன்று ஒரு நாள் பயணமாக திருவள்ளூர் மாவட்டம் செல்கிறேன். அங்கும் காலையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் ஆய்வுக் கூட்டம். மாலையில் இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற உள்ளது.

“மக்களிடம் செல், அவர்களுடன் வாழ், அவர்களிடமிருந்து கற்றுக்கொள்” என்ற அண்ணாவின் வாக்கின்படி, முத்தமிழறிஞர் வழியில், கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டலில் அடுத்தப் பயணத்துக்கான அறிவிப்பு விரைவில் வெளிவரும்.

நன்றி, வணக்கம்.

இவ்வாறு அம்மடலில், கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயற்குழுக் கூட்டம்!

### கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் அறிவிப்பு

நாமக்கல், செப். 1-

நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயற்குழுக் கூட்டம் நாளை (2.9.2023 சனிக்கிழமை) மாலை 04.00 மணிக்கு நாமக்கல் திருச்சி சாலையில் உள்ள நளா ஹோட்டலில் நடைபெற உள்ளது.

மாவட்ட அவைத்தலைவர் திரு.சி.மணிமாறன் அவர்கள் தலைமையில், மாண்புமிகு. வனத்துறை அமைச்சர் டாக்டர்.மா.மதிவேந்தன், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் திரு. பெ.இராமலிங்கம், சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினரும், மாவட்ட கழக துணை செயலாளருமான திரு.கே.பொன்னுசாமி ஆகியோர்கள் முன்னிலையில், நடைபெறும் இக்கூட்டத்திற்கு முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணியின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் தலைவர்கள் என அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.



பொருள்:

கழக இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாடு குறித்து.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களின் நாமக்கல் வருகை குறித்து.

தமிழின தலைவர் டாக்டர். கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா குறித்து.

04.09.2023 அன்று நகர்ப்புற மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என். நேரு அவர்களால் அடிக்கல் நாட்டப்பட உள்ள இராசிபுரம் கூட்டு குடிநீர்; திட்டம் குறித்து.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், எம்.பி. கேட்டுக் கொண்டுள்ளார்.



திண்டுக்கல் மாவட்டத்திற்கு ஆய்வுப் பயணம் மேற்கொண்டுள்ள பாராளுமன்ற நிலைக்குழு (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை) தலைவர் திருமிகு கனிமொழி கருணாநிதி நேற்று முன்தினம் (30.08.2023) நிலக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், எத்திலோடு ஊராட்சியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கிராம வறுமை ஒழிப்பு சங்கம் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு அலுவலகத்தில் ஆய்வு மேற்கொண்டு, மகளிர் சுயஉதவிக்குழு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பினருக்கு வங்கிக் கடனுதவிகளை வழங்கினார். அருகில் பாராளுமன்ற நிலைக்குழு உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மொ.நா.பூங்கொடி, திண்டுக்கல் பாராளுமன்ற உறுப்பினர் ப.வேலுச்சாமி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி பெ.திலகவதி, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் திட்ட இயக்குநர் நா.சரவணன் உட்பட பலர் உள்ளனர்.



முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி, காணை ஊராட்சி ஒன்றியம், நல்லப்பாளையம் ஊராட்சியில், 2022–2023 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் மூலமாக கட்டப்பட்ட புதிய அங்கன்வாடி மையத்தை உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி துவக்கி வைத்தார். மாவட்ட ஆட்சியர் டாக்டர் சி.பழனி, விழுப்புரம் தெற்கு மாவட்ட செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ, விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயசந்திரன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர் செ.புஷ்பராஜ், மாநில விவசாய தொழிலாளர் அணி செயலாளர் அன்னியூர் சிவா, ஒன்றிய குழு தலைவர் கலைச்செல்வி, ஒன்றிய செயலாளர்கள் மாவட்ட கவுன்சிலர் ஆர்.முருகன், ஆர்.பி.முருகன், மாவட்ட கவுன்சிலர் சிவக்குமார், ஒன்றிய குழு துணை தலைவர் வீரராகவன், ஊராட்சி மன்ற தலைவர் நித்யா கதிரவன் மற்றும் ஒன்றிய கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், கிளை செயலாளர்கள் ராஜேந்திரன், ஏழுமலை, செல்வம், கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### திருப்பூர் சுதந்திரப் போராட்ட தியாகிகளின் வாரிசுதாரர்களுக்கு

# பொன்னாடை அணிவித்து கௌரவித்து பாராட்டுச் சான்றிதழ்கள்!

### அமைச்சர் மு.பெ.சாமிநாதன் – என்.கயல்விழி செல்வராஜ் வழங்கினர்!

திருப்பூர், செப். 1 - 75வது சுதந்திர தின விழா, அமுதபெரு விழா, நிறைவு விழா நிகழ்ச்சியாக திருப்பூர் சுதந்திரப் போராட்ட தியாகிகளின் வாரிசுதாரர்களுக்கு பொன்னாடை அணிவித்து கௌரவித்து பாராட்டுச் சான்றிதழ்களை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் மு.பெ. சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் வழங்கினர்.

திருப்பூர் மாநகராட்சி, தெற்கு ரோட்டரி மஹாலில் 75வது சுதந்திர தின விழா, அமுதபெரு விழா, நிறைவு விழா நிகழ்ச்சியாக திருப்பூர் சுதந்திரப் போராட்ட தியாகிகளின் வாரிசுதாரர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில் மாநகராட்சி மேயர், வடக்கு மாநகர கழக செயலாளர் ந.தினேஷ்குமார், திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் பவன்குமார் ஜி.கிரியப்பனவர் ஆகியோர் முன்னிலையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் பொன்னாடை அணிவித்து கௌரவித்து பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினர்.

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தெரிவித்ததாவது : இந்திய மக்கள் அந்நிய ஆதிக்கத்தில், அடிமைத்தனத்தில் கட்டுண்டு, கரை காணாது வெந்துருகிய காலத்தை வென்று, இந்திய நாடு சுதந்திரம் பெறுவதற்கு அவனி காணாத முயற்சிகளும், பெரும் போராட்டங்களும் நடந்தன. இப்போராட்டங்களில் புன்முறுவலுடன் ஒப்பற்ற தங்களின் உயிரைத் துச்சமென மதித்து இந்திய திருநாட்டின் விடுதலைக்காக அரும்பலி கொடுத்து சுதந்திரம் வாங்கிக் கொடுத்த திருப்பூர் தியாகிகளை கௌரவிக்கும் விதமாக அவர்களது வாரிசுதாரர்களுக்கு பாராட்டு விழா நடைபெற்றது. நம் நாட்டில் நாம் சுவாசக்காற்றை சுவாசிக்க காரணமாக இருப்பதற்கு சுதந்திரப்போராட்ட தியாகிகள் தன் உயிரை கொடுத்து சுதந்திரத்தை பெற்ற காரணத்தினால் தான் இன்று சுதந்திரமாக இருக்கிறோம். அதன் அருமையை மற்றும் அவர்கள் செய்த தியாகத்தை எல்லாம் நம் இளைஞர்கள் சமுதாயத்திற்கு எடுத்து சொல்ல வேண்டும். இளைஞர்கள் பாடப்புத்தகத்தில் படித்திருந்தாலும், நம் சான்றோர்கள் செய்த தியாகங்களை எல்லாம் நாம் அவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும்.


நம் நாடு சுதந்திரம் பெற்று 77 வது ஆண்டு நடைபெற்று வருகிறது. கடந்த 75 ஆம் ஆண்டு அமுத பெருவிழாவாக ஒன்றிய அரசு அறிவித்ததை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பின்பற்றி சிறப்பாக செயல்படுத்தி கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி மற்றும் மகாத்மா காந்தி போன்றவர்களின் தியாகத்தை எடுத்துரைக் கும் வகையில் சுதந்திர போராட்ட தியாகிகள் புகைப்படங்கள், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர் கள் மற்றும் பொதுமக்கள் அறியும் வகையில் கண்காட்சிகள் அமைக்கப்பட்டது. கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி அவர்களின் தியாகத்தை பற்றி பேருந்தில் ஒளிநாடவாக வடிவமைத்து ஆங்காங்கு பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு தமிழ்நாடு முழுவதும் அனுப்பி வைக்கப்பட்டது. சுதந்திரப் போராட்ட வீரர்களின் அனைத்து தியாகங்களையும் காட்சிப்படுத்தும் வகையில் அலங்கார வண்டியில் அமைத்து செய்தித்துறையின் சார்பில் தமிழ்நாடு முழுவதும் பொதுமக்கள் பார்வைக்கு காட்சிபடுத்திட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள்.

தியாகிகளின் பணிகளை பொதுமக்கள் அறியும் வகையில் மகத்தான பணியை செய்த செய்தித்துறை அமைச்சர் என்கிற வகையில் பெருமை கொள்கிறேன். மகாகவி பாரதியார் போன்றவர்கள் தன் கவிதையின் மூலம் விடுதலை உணர்வை ஊட்டினார்கள். அந்த வகையில் சுதந்திரப் போரட்ட தியாகிகளுக்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறையின் சார்பில் மணிமண்டபம், நினைவகங்கள் அமைக்கப்பட்டு வருகிறது. முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் மக்கள் அதிகமாக கூடும் மாவட்ட தலைநகரில் அவர்களுடைய புகைப்படங்களை வைத்து மாரியதை செய்யும் வகையில் திருப்பூர் குமரன் நினைவகத்தில் வைக்கப்பட்டுள்ளது. சென்னையில் வீரபாண்டிய கட்டப்பொம்மன் சிலை, மருது சகோதர்கள் சிலை, வ.உ.சி மார்பளவு சிலை அமைக்கப்பட்டுள்ளது.

திருப்பூர் மாவட்டத்தில் தளி பாளையக்கார் அவர்களுக்கு அரங்கம் அமைக்கப்பட்டு வருகிறது. அவர்களின் திருவுருவச்சிலை உடுமலைப்பேட்டை நகராட்சியில் அமைக்க பணிகள் நடைபெற்று வருகிறது. இவ்வாறு பல்வேறு பணிகள் செய்யப்பட்டு வருகிறது. பவானிசாகர் அணை அமைய காரணமாக இருந்த ஈஸ்வரன் அவர்களின் திருவுருவச் சிலை மற்றும் அரங்கம் பவானிசாகர் அணை பகுதியில் அமைக்கப்படுகிறது. கொடிகாத்து சுதந்திர உணர்வை வெளிப்படுத்திய குமரன் அவர்களின் மண் திருப்பூர் மண். சென்னிமலையில் திருப்பூர் குமரன் அவர்களுக்கு அரங்கம் அமைக்கப்படவுள்ளது. திருப்பூர் மாநகராட்சியில் சுதந்திர போரட்ட வீரர்களின் வாரிசாக உங்கள் அனைவருக்கும் என் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன் என் அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர் இல.பத்ம நாபன், தொ.மு.ச. மாநில துணைத் தலைவர் சி. கோவிந்தசாமி, வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பளர் ஈ.தங்கராஜ், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் அ.லட்சுமணன், மாநகராட்சி துணை மேயர் பால சுப்பிரமணியம், திருப்பூர் மாநகராட்சி துணை ஆணையாளர் அ.சுல்தானா பர்வீன், உதவி ஆணையர் வினோத், தலைமை பொறியாளர் (பொ) செல்வநாயகம், செயற்பொறியாளர் வாசுகுமார், மாவட்ட முன்னாள் பொருளாளர் ரத்தின சாமி, கருவம்பாளை யம் பகுதி கழக செயலாளர் மியாமி ஆ.அய்யப்பன், கல்விக்குழு தலைவர் பெ.திவாகரன், பொதுசுகாதாரக்குழு தலைவர் கவிதா நேதாஜி கண்ணன் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், தமிழ்நாடு சுதந்திரப் போரட்ட வீரர் மற்றும் வாரிசுகள் சமதி, பொதுச் செயலாளர் பி.ஆர.நடராஜன், பொருளாளர் எஸ். சுப்பரமணியம், மாநகர் நல அலுவலர் கௌரி சங்கர், 38 திருப்பூர் சுதந்திரப் போராட்ட தியாகிகள், கழக நிர்வாகிகள் உள்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## ‘வாட்ஸ்அப்’பில் வந்த செய்தி!






புதுக்கோட்டை மாவட்டம் கீரனூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற விழாவில் 9 பள்ளி மாணவ – மாணவிகளுக்கு இலவச மிதிவண்டிகளை புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே. செல்லப்பாண்டியன், கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் சின்னத்துரை ஆகியோர் வழங்கினார்கள். இந்நிகழ்வுகளில் புதுக்கோட்டை நகர்மன்ற துணை தலைவர் மு.லியாகத் அலி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மஞ்சுளா, மாவட்ட கல்வி அலுவலர் ஆ.ரமேஷ், ஒன்றிய செயலாளர்கள் சி.சண்முகம், ஆர்.ஆர்.சாமிநாதன், டாக்டர் செ.குறிஞ்சிவாணன்,கே.எம். கே.ரவிக்குமார், எம்.ஏ.எம்.இம்தியாஸ், எஸ்.வி.ஆர்.ஸ்டாலின், மு.கலைஞர் கருணாநிதி, கராத்தே முத்து, வி.எஸ்.பழனி, ராயல் சபா, தலைமை ஆசிரியர் பரிமளம், ஆசிரியர்கள் வி.தங்கம், கே.ஆர். ரமேஷ், சு.கிருத்திகா, குரு மாரிமுத்து மற்றும் அரசு அதிகாரிகள், கட்சி நிர்வாகிகள், ஆசிரியர்கள், பெற்றோர்கள்,மாணவ மாணவிகள், பொதுமக்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# பசிபோக்கிய சூரியன்!



திராவிட மாடல் அரசின் பேரரசர் முதலமைச்சர் அவர்களின் ஆட்சியில் “முதலமைச்சர் காலை சிற்றுண்டி திட்டம்” தமிழ்நாடு முழுவதும் விரிவுப்படுத்தப் பட்டுள்ளது. சுமார் 17 இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயன்பெறும் வகையில் இத்திட்டம் தற்போது செயல்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தற்போது பசியாறிக் கொண்டிருக்கிறது! வயிற்றுப்பசி இல்லாத தமிழ்நாட்டை உருவாக்கி அறிவை மட்டுமே தேடும் மாணவச் செல்வங்களை உருவாக்குவதை தனது இலட்சியமாக கொண்டு செயல்படுகிறார் முதலமைச்சர் அவர்கள்.

கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் இத்திட்டத்தை இந்திய ஒன்றியத்தின் அனைத்து மாநிலங்களிலும் செயல்படுத்த வேண்டும் என மாநில அரசுகளும், அம்மாநில உயர் அலுவலர்களும் ஆர்வம் செலுத்த தொடங்கியுள்ளார்கள்.

தங்களின் உரிமைகளுக்காக பல ஆண்டுகள் போராடி வெற்றிபெற்ற மக்கள் நிறைந்த மாநிலம் தெலங்கானா. சமீபத்தில் (29/08/2023) அம்மாநிலத்தில் உள்ள அரசுப் பள்ளியை பார்வையிடும் வாய்ப்பு கிடைத்தது. அம் மாநிலத்தில் உள்ள Balapur மாவட்டம் Jillelaguda பகுதியில் அமைந்துள்ள CHALLA LINGA REDDY நினைவு ZILLA PARISHAD அரசுப் பள்ளியினை பார்வையிட்டோம்.



அன்பில் மகேஷ் பொய்யாமொழி
திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளர்
பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்

அம்மாநில பள்ளிக் கல்வித்துறை உயர் அதிகாரி திருமிகு.தேவசேனா அவர்களும், அம்மாநில கல்வித்துறை உயர் அலுவலர்களும் எங்களுடன் பயணித்து அம்மாநிலத்தில் செயல்படும் கற்றல் மற்றும் கற்பித்தல் முறைகளை எடுத்துரைத்தார்கள்.

நமது தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும்கல்விமேம்பாட்டிற்கானதிட்டங்கள் குறித்தும் அறிந்துவைத்திருந்தார்கள். குறிப்பாக நமது கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து “தேசிய கல்விக் கொள்கையை” எதிர்த்து வருவது குறித்தும், அதனை தொடர்ந்து மாநில கல்விக் கொள்கை அமைப்பதற்காக குழு அமைக்கப்பட்டது குறித்தும் கேட்டறிந்தார்கள்.

25.08.2023 அன்று விரிவுப் படுத்தப்பட்ட காலை உணவுத் திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் பயின்ற பள்ளியில் தொடங்கி வைத்தார். அதுகுறித்து ஆச்சர்யத்துடன் கேட்டறிந்து நமது தமிழ்நாட்டிற்கு வருகைதர ஆர்வமாக உள்ளதாக திருமிகு.தேவசேனா அவர்களும், அம்மாநில கல்வித்துறை உயர் அலுவலர்களும் விருப்பம் தெரிவித்தார்கள்.

காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்படும் முறை பற்றியும், நிதி ஒதுக்கீடு, மாணவர்களின் பயன் ஆகியவற்றை பற்றி களத்தில் நின்று அறிந்துகொள்ள விரும்புவதாக தெரிவித்தார்கள். தங்கள் மாநிலத்திலும் இத்திட்டத்தை செயல்படுத்த தெலங்கானாமுதலமைச்சர் சந்திரசேகர ராவ் அவர்களும், கல்வித்துறை அமைச்சர் சப்தா இந்திர ரெட்டி அவர்களும் விரும்புவதாக தெரிவித்தார்கள்.

தெலங்கானா மாநிலத்தின் முதலமைச்சர் சந்திரசேகர ராவ் அவர்களின் கல்வி மேம்பாட்டுத் திட்டங்களையும், அவரின் போராட்ட குணத்தையும் பாராட்டி, தங்களை வரவேற்க தமிழ்நாடு எப்போதும் தயாராக உள்ளது என வரவேற்றோம்.

“முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்” எனும் பெயரில் தெற்கிலிருந்து எழுந்துள்ள சூரியன் இந்திய ஒன்றியத்தில் உள்ள மாணவர்களின் வயிற்றுப் பசியை போக்கட்டும்! அவர்களுக்கு அறிவுப்பசி மட்டுமே இருக்கட்டும்!



தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் மாவட்ட வாரியாக நிர்வாகிகளை நியமனம் செய்து அறிவித்தார். இதனைத் தொடர்ந்து சேலம் கிழக்கு மாவட்ட சிறுபான்மையினர் நிர்வாகிகள் கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ் .ஆர்.சிவலிங்கத்திடம் சால்வை அணிவித்து வாழ்த்துப் பெற்றனர். அப்போது ஏ.ஏ.ஆறுமுகம் உடனிருந்தார்.

## தூத்துக்குடி – முள்ளக்காட்டில் ரூ 1.70 கோடியில்

# கடல்நீர் சாகச விளையாட்டுகளுடன் சுற்றுலா தலம்!

### அமைச்சர் கா.ராமச்சந்திரன் பேட்டி!

திருச்செந்தூர், செப்.1-

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூரில், சுற்றுலாத்துறையின் கீழ் செயல்பட்டுவரும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல் தமிழ்நாட்டின் உட்கட்டமைப்பு வசதிகளை மேலும் மேம்படுத்துவது குறித்து சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேற்று முன்தினம் (30.08.2023) ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது அவர் தெரிவித்ததாவது : -

முதலமைச்சர் அவர்கள் உத்தரவின்பேரில், தமிழ்நாட்டில் சுற்றுலாவை மேம்படுத்த ஒவ்வொரு மாவட்டத்திலும் கள ஆய்வு செய்து தொடர்ந்து பணியாற்றி வருகிறோம். திருச்செந்தூரில் 1967ம் ஆண்டில் இருந்து ஓட்டல் தமிழ்நாடு 4.57 ஏக்கரில் 47 அறைகளுடன் இயங்கி வருகிறது. மேலும், கூடுதல் அறைகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். திருச்செந்தூரில் மற்ற எந்தவொரு ஓட்டல்களிலும் ஓட்டல் தமிழ்நாடு அளவுக்கு அதிக இடவசதி கிடையாது.

தற்போது ஓட்டல் தமிழ்நாட்டில் உள்ள படுக்கைகள் ரூ.1.25 கோடி மதிப்பீட்டில் புதிதாக மாற்றப்பட்டுள்ளன. மேலும், இங்கு வரும் பொது மக்களுக்கு தேவையான வசதிகளை செய்து தருவதற்காக சுமார் 55 ஆண்டுகள் பழமையான இந்த கட்டிடத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்து வருகிறோம். ஓராண்டிற்குள் பழுதுகள் முழுமையாக சரி செய்யப்படும்.



தூத்துக்குடி மாவட்டம் முள்ளக்காடு கடற்கரைப்பகுதியை கடல்நீர் சாகச விளையாட்டுகள் அடங்கிய சுற்றுலா தலமாக ஏற்படுத்த ரூ.1.70 கோடி திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை தொடங்குவது தொடர்பாக நேற்று நேரில் சென்று கள ஆய்வு செய்தோம். இத்திட்டத்திற்கு தூத்துக்குடி வ.உ.சி. துறைமுக நிர்வாகத்திடம் சமூக பொறுப்பு நிதியில் இருந்து ரூ.45.46 இலட்சம் முதற்கட்டமாக பெறப்பட்டு சாகச விளையாட்டுகளுக்கு தேவையான பொருட்கள் வாங்கப்பட்டுள்ளது. முள்ளக்காடு கடற்கரை கோவளம் கடற்கரையைப்போல் நன்றாக மேம்படுத்தப்படும்.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில், ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் சுற்றுலாத்துறை மூலம் 10 இடங்கள் தேர்வு செய்யப்பட்டு சுற்றுலாவை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குலசேகரப்பட்டினம் முத்தாரம்மன் திருக்கோவில் மற்றும் மணப்பாடு சிலுவைக்கோவில் ஆகிய 2 இடங்களில் சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக அடுத்த ஆண்டு பணிகள் மேற்கொள்ளப்படும். வருகின்ற 5ஆம் தேதி நடைபெறும் சுற்றுலா மேம்பாடு தொடர்பான ஆய்வுக்கூட்டத்தில் ஓட்டல் தமிழ்நாடுகளில் உள்ள அறைகளின் வாடகை தொடர்பாக ஆலோசிக்கப்படும்.

மேலும், ராமேஸ்வரத்திற்கு கடந்த ஆண்டு 1.80 கோடி சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளனர். இந்த ஆண்டு கடந்த 6 மாதத்தில் மட்டும் 1.60 கோடி சுற்றுலா பயணிகள் வருகைத் தந்துள்ளனர். இந்த ஆண்டு 3 கோடிக்கு சுற்றுலா பயணிகள் வருகைதருவார்கள் என்று எதிர்பார்க்கிறோம். அதன்படி, திருச்செந்தூருக்கு கடந்த ஆண்டு 58.67 இலட்சம் சுற்றுலா பயணிகள் வருகை தந்தனர்.

இந்த ஆண்டு கடந்த 4 மாதத்தில் மட்டும் 28.22 லட்சம் சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளனர். இதை இன்னும் அதிகப்படுத்துவதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. தற்போது திருச்செந்தூர் திருக்கோவில் ரூ.300 கோடி மதிப்பீட்டில் பெருந்திட்டவளாக மேம்பாட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

இப்பணிகள் முடிந்தவுடன் திருப்பதி கோவிலைவிட திருச்செந்தூர் திருக்கோவில் சிறப்பாக இருக்கும். எனவே வருங்காலங்களில் இன்னும் அதிகமான சுற்றுலா பயணிகள் வருவார்கள்.

இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்தார்.

ஆய்வில் சுற்றுலாத்துறை இயக்குநர் சந்தீப்நந்தூரி, மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.கி.செந்தில்ராஜ், திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் அறங்காவலர் குழுத்தலைவர் இரா.அருள் முருகன், மண்டல மேலாளர் (சுற்றுலா வளர்ச்சிக்கழகம், மதுரை) டேவிட் பிரபாகரன், திருச்செந்தூர் வருவாய் கோட்டாட்சியர் குருச்சந்திரன், சுற்றுலா அலுவலர் திருவாசன், திருச்செந்தூர் வட்டாட்சியர் வாமனன் மற்றும் அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

## பாரத ஸ்டேட் வங்கி – முன்னாள்

# தொழிற்சங்கத் தலைவர்கள் கூட்டமைப்பின் கூட்டம்!

### தஞ்சையில் நடைபெற்றது!

தஞ்சை, செப்.1-

பாரத ஸ்டேட் வங்கி முன்னாள் தொழிற் சங்க தலைவர்கள் கூட்டமைப்பின் நிர்வாக குழு கூட்டம் தஞ்சாவூர் நீதி மன்ற சாலை, அகில இந்திய இன்சூரன்ஸ் ஊழியர் சங்க வளாகத்தில் நடைபெற்றது. AFCCoM அமைப்பின் தலைவர் எஸ்.பி.இராமன் தலைமையில் நடந்த கூட்டத்துக்கு துணைத் தலைவர் டி.வி. சந்திரசேகரன், பொருளாளர் திருச்சி என். சுப்பிரமணியன், துணை செயலாளர் மதுரை எம்.முருகையா, பாரத ஸ்டேட் பேங்க் ஊழியர் சங்க முன்னாள் பொதுச்செயலாளர் டி.சிங்காரவேலு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிர்வாகக் குழு கூட்டத்தில் விவாதங்களுக்கு பின்னர் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

அஞ்சலக ஆயுள் காப்பீட்டு பாலிசிகளுக்கு ஜி.எஸ்.டி, வருமான வரி பிடித்தம் செய்யும் மத்திய அரசின் முடிவை திரும்பப் பெற வேண்டும்.

அஞ்சலகங்களில் குறிப்பாக கிராமப்புற அஞ்சலகங்களில் விவசாயிகள், கிராமப்புற கைவினைஞர்கள், வேளாண்மைக் கூலிகள், சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ளோர் எதிர்காலத்தை பாதுகாக்கும் நோக்கத்தோடு பிரிட்டிஷ் ஆட்சியில் 1884 ஆண்டு பிப்ரவரி 1 ஆம் தேதி அஞ்சலக ஆயுள் காப்பீட்டு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஏறத்தாழ 140 ஆண்டுகளாக செயல்பட்டு வரும் அஞ்சலக ஆயுள் காப்பீட்டு திட்டத்தில் அண்மையில் மத்திய அரசு விதித்துள்ள கட்டுப்பாடுகள், ஆயுள் காப்பீட்டு திட்டத்தின் மூல நோக்கத்தையே முறியடிப்பதாக உள்ளன. வாழ்வாதாரத்தை காக்கவே வழியற்று நிற்கும் ஏழை எளியவர்களின் ஆயுள் காப்பீட்டு பாலிசி முதிர்வடையும்போது கிடைக்கும் தொகை ஒரு லட்சத்துக்கு மிகுதியாக இருந்தால் 5 சதவிகிதம் வருமான வரி பிடித்தம் செய்வதோடு ஏறத்தாழ 7 சதவிகிதம் ஜி.எஸ்.டி பிடித்தம் செய்ய வேண்டுமென பிறப்பித்த உத்தரவை மத்திய அரசு தாமதமின்றி திரும்ப பெறுவதன் மூலம் 50 லட்சத்துக்கும் மேற்பட்ட அஞ்சலக ஆயுள் காப்பீட்டு பாலிசிதாரர்களின் நல்லெண்ணத்தை பெறவேண்டும் என AFCCoM வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது.

பொதுத்துறை வங்கிகளில் சேமிப்பு கணக்கு வைத்திருக்கும் வங்கி வாடிக்கையாளர்கள், வங்கி நிர்ணயித்த குறைந்த பட்ச தொகையை வைக்காததற்காக அபராத தொகை பிடித்தம் செய்யும் தவறான நடைமுறையை தாமதமின்றி திரும்ப பெற பொதுத்துறை வங்கிகள் முன் வர வேண்டும்.

பொதுத்துறை மற்றும் ஐந்து தனியார் துறை வங்கிகளில் குறைந்த பட்ச இருப்புத் தொகையை வங்கி கணக்கில் வைக்காததற்காக 21000 கோடி ரூபாய் அபராத தொகை வசூலிக்கப்பட்டிருப்பதாக நிதித்துறை துணையமைச்சர் நாடாளுமன்றத்தில் அளித்துள்ள பதில் நல்லெண்ணம் படைத்த நடு நிலையாளர்கள் மனதில் ஆழ்ந்த அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. ‘பிரதம மந்திரி ஜன் தன்’ திட்டத்தில் 50 கோடி பேர் வங்கி கணக்குகளை துவக்கி உள்ளதாக மத்திய அரசு அறிவித்துள்ளது. ‘ஜன் தன்’ கணக்குகளை துவங்கி வங்கித்துறையின் வரம்புக்குள் வந்துள்ள 50 கோடி வாடிக்கையாளர்களும் குறைந்த பட்ச தொகையை வங்கி கணக்குகளில் வைத்திருக்க வேண்டிய அவசியமில்லாத ‘ஜீரோ பேலன்ஸ்’ (ZERO BALANCE) விதிமுறை உள்ளது.

கடந்த 2001 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டுவரை பொதுத்துறை வங்கிகள் ஏறத்தாழ 14 லட்சத்து 57 ஆயிரம் கோடி ரூபாயை வர்த்தக சூதாடி களிடமிருந்தும், பெருந்தனக்காரர்களிடமிருந்தும், கார்ப்பரேட் கனவான்களிடமிருந்தும் வராத கடனை வசூலிக்காமல் தாராளமாக தள்ளுபடி செய்துள்ளதை நிதித்துறை பதிவு செய்துள்ளது.

அனைத்து 38 மாவட்ட தலை நகரங்களிலும் பாரத ஸ்டேட் வங்கி மருந்தகங்களை (BANK DISPENSARIES) நிறுவுவதோடு தேவையான, தரமான மருந்துகளை வழங்க முன் வரவேண்டும்.

தமிழ்நாட்டிலுள்ள 38 மாவட்ட தலைநகரங்களிலும் பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்திலுள்ள காரைக்கால் நகரிலும் பாரத ஸ்டேட் வங்கி, வங்கி மருந்தகங்களை தாமதமின்றி நிறுவ முன் வர வேண்டும். வங்கி மருந்தகங்களில் தரமான மருந்துகள், தாமதமின்றி வழங்குவதோடு, உரிய நேரத்தில் மருந்துகளை வழங்காததால் ஏற்படும் உயிரிழப்புகளையும் தவிர்க்க முன் வர வேண்டும். வங்கியின் வளர்ச்சிக்கும் அதன் மூலம் நாட்டு முன்னேற்றத்துக்கும் காலம் கருதாது உழைத்த வங்கி ஓய்வூதியர்களின் நலம் காப்பதை பாரத ஸ்டேட் வங்கி பிரதான கடமையாக கருதி செயல்பட முன்வரவேண்டுமென AFCCoM வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது.

AFCCoM நிர்வாக குழு கூட்டத்தில் உதவிப் பொருளாளர் வீ.பூமிநாதன், நிர்வாக குழு உறுப்பினர்கள் திருச்சி எம். சந்திரா கில்பர்ட், திருவாரூர் என். பாண்டுரங்கன், பாண்டிச்சேரி எஸ். கருணாகரன், வேலூர் ஆர்.லோகநாதன், செயலாளர் எம்.கே.மூர்த்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். நிர்வாக குழு கூட்டத்திற்கான ஏற்பாடுகளை ஸ்டேட் பேங்க் ஊழியர் சங்கத்தின் ஒரத்தநாடு மேனாள் செயலாளர் வி.சம்பத் செய்திருந்தார்.




ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச் செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் திருப்பூர் மாவட்டம், தாராபுரம் ஒன்றியம், அலங்கியம் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில் விரிவாக்கம் செய்யப்பட்ட முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை தொடங்கி வைத்தார். இதில் மாவட்ட வருவாய் அலுவலர் த.ஜெய்பீம், ஒன்றியக்குழு பெருந்தலைவர், ஒன்றியக் கழகச் செயலாளர் எஸ்.வி.செந்தில்குமார், ஊராட்சி மன்றத் தலைவர் தேவி குப்புசாமி உள்பட மாவட்ட, ஒன்றிய, பேரூர்க் கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோவை மு.மா.சண்முகசுந்தரம்

### செப்டம்பர் 1 (2018)



திராவிட இயக்கத்தைத் தொடர்ந்து, கழகம் துவங்கியதும் அதில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

கோவை பகுதியில் கழக முன்னோடிகளின் பெயரில் பல்வேறு மன்றம் – படிப்பகங்களை நிறுவிய இவர், இராமநாதபுரம் பகுதியில் ‘கலைஞர் தமிழ் மன்றம்’ தொடங்கி, அதில் திருக்குறள் வகுப்பும், திருக்குறள் மாநாடும் நடத்தி வந்தவர்.

ஒன்றுபட்ட கோவை மாவட்ட அவைத் தலைவராக பொறுப்பு வகித்தவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# அச்சம் தரும் கருத்துக் கணிப்புகள்! சமையல் எரிவாயு விலை குறைப்பு!

### கடந்த நான்கு ஆண்டுகளாக ரக்‌ஷா பந்தன் வரவில்லையா?

மக்களவைத் தேர்தல் குறித்த பல்வேறு கருத்துக் கணிப்புகள் வெளியாகி வரும் நிலையில் நாடாளுமன்றத் தேர்தல் முன்கூட்டியே நடப்பதற்கான வாய்ப்புகள் இருப்பதாகக் கூறப்படுகின்றன.

அதன் எதிரொலியாகவே, நேற்றைய தினம் மத்திய அமைச்சர் அனுராக் தாக்கூர், ரக்‌ஷா பந்தன் பண்டிகையை முன்னிட்டு, நாட்டின் பெண்களுக்குப் பரிசளிக்கும் விதமாக, சமையல் எரிவாயு சிலிண்டர் விலையை இருநூறு ரூபாய் குறைக்க பிரதமர் மோடி முடிவு செய்துள்ளார் என்று தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து 2019, 2020, 2021, 2022 ஆண்டுகளில் எல்லாம் ரக்‌ஷா பந்தன் வந்த போதெல்லாம் குறைக்கத் தோணலியா? 2024 மக்களவைத் தேர்தல் வரும் போதுதான் எரிவாயு சிலிண்டர் விலையை குறைக்கத் தோணுகிறதோ? என்று நெட்டிசன்கள் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

ஆனால், இதன் பின்னணியில் வருகின்ற கருத்துக் கணிப்புகள் பா.ஜ.க மீதான அதிருப்தியை பறைசாற்றி வருவதால் எடுக்கப்பட்ட முடிவென்றும், மேலும் பா.ஜ.க. வின் டேமேஜ் கூடும் முன்னரே, இந்தாண்டு இறுதியிலேயே மக்களவைத் தேர்தலை நடத்த திட்டமிடுவதாக நம்பத்தகுந்த வட்டாரங்களில் பேசப்படுகிறது.

ஏற்கனவே, எதிர்வரும் 2024 மக்களவைத் தேர்தல் குறித்து பல்வேறு கருத்துக் கணிப்புகள் வெளியாகி உள்ளன.

இதில் சில கருத்துக் கணிப்புகள் ஆளும் பா.ஜ.க.விற்கு மீண்டும் வாய்ப்புக் கிடைக்கும் என்று கூறி வந்த நிலையில், பா.ஜ.க.வுக்கு இந்த முறை மெஜாரிட்டி கிடைக்காது என்று PCSurvey sIndia அதாவது Political Critic என்ற அமைப்பு இன்னொரு கருத்துக் கணிப்பை வெளியிட்டு உள்ளது.

அதில், பா.ஜ.க.வின் என்.டி.ஏ. கூட்டணி 255 இடங்களையும், எதிர்க்கட்சிகளின் “இந்தியா” கூட்டணி 225 இடங்களையும் மற்ற கட்சிகள் 63 இடங்களையும் கைப்பற்றும் என்று இந்த அமைப்பு வெளியிட்டுள்ள கருத்துக் கணிப்பில் கூறப்பட்டுள்ளது.

மாநில வாரியாக மக்களவைத் தேர்தலில் வெளியாகும் முடிவுகளில், தமிழ்நாட்டில் 38 இடங்களை தி.மு.க காங்கிரசின் இந்தியா கூட்டணி வெல்லும் என்றும், அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி ஒரே ஒரு இடத்தில் வெல்லும் என்றும் இந்தக் கருத்துக் கணிப்பில் தெரிவித்துள்ளது.

ஸ்மால் பாக்ஸ் இந்தியா சர்வே என்ற அமைப்பும் ஒரு புதிய கருத்துக் கணிப்பை வெளியிட்டுள்ளது. அதில், தமிழ்நாட்டில் தி.மு.க.வின் இந்தியா கூட்டணி 36 இடங்களையும்,

பா.ஜ.க.வின் தேசிய ஜனநாயகக் கூட்டணி 03 இடங்களையும் கைப்பற்றும் என்று கூறியுள்ளது. தமிழ்நாட்டில் கடந்த மக்களவைத் தேர்தலில் தி.மு.க. கூட்டணி 38 இடங்களில் வென்றது. அ.தி.மு.க. ஒரே ஒரு இடத்தில் வென்றது.

இந்த முறை தி.மு.க. கூட்டணி இரண்டு இடங்களை இழக்கும்.

பா.ஜ.க. கூட்டணி கூடுதலாக மேலும் இரண்டு இடங்களைப் பெறும். அதாவது தமிழ்நாட்டில் இருந்து பா.ஜ.க. கூட்டணிக்கு மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களாக வருவார்கள் என்று கூறப்பட்டு உள்ளது. இவர்கள் தனிப்பட்ட பா.ஜ.க. கட்சியா, அ.தி.மு.க. கட்சியா என்பது தெரிவிக்கப்படவில்லை.

மொத்தமாக மக்களவை கருத்துக்கணிப்பு :

மொத்த இடங்கள் : 543

மெஜாரிட்டி பெறத் தேவையான இடங்கள் : 272

இந்தியா கூட்டணி : 243

பா.ஜ.க.வின் தேசிய ஜனநாயகக் கூட்டணி : 255

மற்றவை : 45 கைப்பற்றும் என்று கூறியுள்ளது.

மக்களவைத் தேர்தல் குறித்த பல்வேறு கருத்துக் கணிப்புகள் வெளியாகி வரும் நிலையில் பா.ஜ.க.விற்கு ஆறு விஷயங்கள் வரும் மக்களவைத் தேர்தலில் எதிராக திரும்பும் வாய்ப்புகள் உள்ளன.

1. சீக்கிய சமூகத்தினர் முன்பு போல பா.ஜ.க.விற்கு வாக்களிக்கும் வாய்ப்பு குறைவு.

2. பட்டியலின மற்றும் மலைவாழ் பழங்குடியினர் சமூகத்தினர் 2019 இல் செய்தது போல் அதிக எண்ணிக்கையில் வாக்களிக்கும் வாய்ப்பு குறைவு.

3. வேளாண்மைத் தொழிலை நம்பி வாழ்வாதாரம் கொண்ட விவசாயிகள் 2019 இல் வாக்களித்தது போல் அதிக எண்ணிக்கையில் வாக்களிக்க வாய்ப்பில்லை.

4. மோடிஜி மட்டும் பா.ஜ.க. மீது இளைஞர்கள் மத்தியில் அதிருப்தி அடைந்துள்ளனர்.

5. NRC மற்றும் CAA பிரச்சினைகள் இல்லாத காரணத்தால் 2024 இல் மதப் பிளவு குறைவாக உள்ளது.

6. பாலகோட் தாக்குதல் போன்ற உணர்ச்சிக் காரணி இந்தத் தேர்தலில் காணவில்லை.

இந்த ஆறு விஷயங்கள் பா.ஜ.க.வுக்கு எதிராக திரும்பலாம் என்று கூறப்படுகிறது.

இது தவிர மூத்தக் குடிமக்கள் பெற்று வந்த சலுகைகளை நிறுத்தியது, மல்யுத்த வீரர்கள் பிரச்சினையில் மௌனம் சாதித்தது, மணிப்பூர் மாநிலத்தில் ஏற்பட்ட கலவரத்தை தடுக்கத் தவறியதுடன் அம்மாநில மக்களை இதுநாள் வரை சென்று பிரதமர் மோடி சந்திக்காதது, அருணாச்சலப் பிரதேசம் பகுதிகளில் அத்துமீறும் சீனாவின் நடவடிக்கை குறித்து கண்டும் காணாது இருப்பதும் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் எதிர்ப்பு அலையாக பார்க்கப்படுகிறது.

இதுதவிர, மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க.வை வீழ்த்துவதற்காக, 26 எதிர்க்கட்சிகள் ஒருங்கிணைந்து “இந்தியா” என்றக் கூட்டணியை உருவாக்கி உள்ளன. இந்தக் கூட்டணியின் மூன்றாவது கூட்டம் வரும் ஆகஸ்ட் 31 மற்றும் செப்டம்பர் 1 ஆம் தேதிகளில் மகாராஷ்டிரா மாநிலம் மும்பையில் நடைபெற உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. இதில் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களும் கலந்து கொள்ள உள்ளார்.

இந்தியாவில் அடுத்த ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற உள்ளது. இதில் வெற்றி பெற்று ஹாட்ரிக் சாதனை படைத்து மூன்றாவது முறையாக மத்தியில் ஆட்சியைப் பிடிக்கும் முனைப்பில் பா.ஜ.க. செயல்பட்டு வருகிறது. எதிர்பக்கம் பா.ஜ.க.வை வீழ்த்தும் முனைப்பில் எதிர்க்கட்சிகள் ஓரணியில் திரண்டுள்ளன.

காங்கிரஸ், திரிணாமுல் காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ், ஐக்கிய ஜனதாதளம், ராஷ்ட்ரிய ஜனதாதளம், சமாஜ்வாடி, ஆம்ஆத்மி, தி.மு.க உள்ளிட்ட 26 கட்சிகள் இணைந்து ‘இந்தியா’ எனும் கூட்டணியை உருவாக்கி உள்ளன.

இந்தக் கூட்டணி இணைந்து வலிமை அடைந்து வருகின்றன. கடந்த 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற 2ஜி அலைக்கற்றை குறித்த சி.ஏ.ஜி. அறிக்கை வெளியிட்ட 1,76,000 கோடி இழப்பு என்றக் கருத்தை நாடாளுமன்றத் தேர்தலில் பிரச்சாரமாகப் பயன்படுத்தினர்.

ஆனால், கடந்த ஒன்பதரை ஆண்டுகளாக ஆட்சி நடத்தி வரும் பா.ஜ.க. வின் ஏழரைச் சனி ஆட்சியில், ஏழு துறைகளில் மட்டுமே ஏழரை லட்சம் கோடி ரூபாய்க்கு இழப்பு என்று சமீபத்தில் சி.ஏ.ஜி. வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்ட விவகாரம் வரும் தேர்தலில் மோடிக்கு எதிராக பெரும் பின்னடைவை ஏற்படுத்தும் என்று அரசியல் நோக்கர்கள் கருதுகிறார்கள்.

மக்களவைத் தேர்தல் குறித்த பல்வேறு கருத்துக் கணிப்புகள் வெளியாகி வரும் நிலையில் நாடாளுமன்றத் தேர்தலை முன்கூட்டியே நடத்துவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகக் கூறப்படுகின்றன.

அதன்படி இந்த வருட இறுதியில் தேர்தலை நடத்த அல்லது அடுத்த வருடம் தொடக்கத்தில் தேர்தலை நடத்த மோடி திட்டமிட்டு வருகிறாராம். இதற்கு பின்வரும் காரணங்கள் சொல்லப்படுகின்றன.

1. இந்தியா கூட்டணி மேலும் வலிமைடையாமல் தடுக்க முடியும்.

2. இந்தியா கூட்டணி முறையாகத் திட்டங்களை வகுக்கும் முன் தேர்தலை நடத்தலாம்.

3. கள நிலவரம் எதிரணிக்கு ஆதரவாக மாறும் முன் தேர்தலை சந்திக்க முடியும் உள்ளிட்ட காரணங்களால் அமைச்சரவையைக் கலைத்துவிட்டு தேர்தலை சந்திக்க மோடி திட்டமிட்டு வருகிறாராம்.

இதன் எதிரொலியாகவே சமையல் எரிவாயு சிலிண்டர் விலையை குறைத்து அறிவித்துள்ளது என்று கூறப்படுகிறது. ஒரு வழியாக மோடிக்கு தேர்தல் ஜுரத்தை எதிர்க்கட்சிகளின் கூட்டணியான “இந்தியா” உருவாக்கியுள்ளது என்றால் அது மிகையல்ல.

**நியூ வணக்கம் தமிழ்நாடு**
**30,08,2023**


01.09.2023 மாமன்னன் பூலித்தேவன் அவர்களின்
308 - வது பிறந்தநாள் விழாவிற்கு வருகை தரும்...
கலைஞர் 100 1924 - 2024
மாண்புமிகு :
K.K.S.S.R.ராமச்சந்திரன்
தமிழக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர்
மாண்புமிகு
தங்கம் தென்னரசு
தமிழக நிதி மற்றும் மனிதவள மேம்பாட்டுதுறை அமைச்சர்
உயர்திரு :
அன்பகம் கலை
கழக துணை அமைப்பு செயலாளர்
உயர்திரு
ராஜா ஈஸ்வரன் MLA
தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர்
வருக! வருக!!
ச.தங்கவேலு Bsc., Ex.MP.
தலைமை செயற்குழு உறுப்பினர்
ப.ஆ.சரவணன் Bsc.,
தலைமை தீர்மானக்குழு உறுப்பினர்
S.பரமகுரு
தலைமை செயற்குழு உறுப்பினர்
S.பத்மநாதன்
மாவட்ட கழக அவைத்தலைவர்
வே.மனோகரன்
மாவட்ட கழக துணைச்செயலாளர்
சு. புனிதா
மாவட்ட கழக துணைச்செயலாளர்
ஜோ.ராஜதுரை
மாவட்ட கழக துணைச்செயலாளர்
இல.சரவணன்
மாவட்டக் கழகப் பொருளாளர்
பொதுக்குழு உறுப்பினர்கள் : க.வேல்சாமிபாண்டியன், S.M.சாகுல் ஹமிது, D.வெள்ளத்துரை, பா.மாரிச்சாமி, P.மாரிச்சாமி, R.தேவதாஸ், மு.பராசக்தி, த.மகேஷ்வரி
ஒன்றிய கழக செயலாளர்கள் : பொன்.முத்தையா பாண்டியன் B.Sc.,LL.B., (வாசுதேவநல்லூர் வடக்கு), லாலா P.சங்கரபாண்டியன் (சங்கரன்கோவில் தெற்கு), கோ.பூசைப்பாண்டியன் (வாசுதேவநல்லூர் தெற்கு), மா.மாரிமுத்து (சங்கரன்கோவில் வடக்கு), K.V.பெரியதுரை (மேலநீலிதநல்லூர் கிழக்கு), வெற்றி விஜயன் (மேலநீலிதநல்லூர் தெற்கு), M.கடற்கரை (குருவிகுளம் தெற்கு),
R.கிறிஸ்டோபர் (குருவிகுளம் மேற்கு), சேர்மதுரை (குருவிகுளம் வடக்கு), T.T.ராமச்சந்திரன் (மேலநீலித நல்லூர் மேற்கு)
நகர செயலாளர்கள் : ஆ.அந்தோணிசாமி (புளியங்குடி நகரம்), மு.பிரகாஷ் (சங்கரன்கோவில் நகரம்)
பேரூர் கழக செயலாளர்கள் : Dr.செ.சு.செண்பக விநாயகம் (சிவகிரி பேரூர்), ச.குருசாமி (இராயகிரி பேரூர்), ரூபி.ஆ.பாலசுப்பிரமணியன் (வாசுதேவநல்லூர் பேரூர்), கா.மாரிமுத்து (திருவேங்கடம் பேரூர்)
U.S.D. சீனிவாசன் B.A.,
தலைமை செயற்குழு உறுப்பினர்
தென்காசி வடக்கு மாவட்டம்

# திராவிட சினிமா

21

**திராவிடக் கொள்கைகளை, சமதர்ம நோக்கங்களை, சமூகநீதிச் சிந்தனைகளைத் திரைத்துறை மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தனர் நமது முன்னோடிகள். அந்த வகையில் திரைப்படம் என்கிற நவீன ஊடகத்தின் மூலம் அரசியல் மாற்றத்துக்கான திருப்புமுனைகளை உருவாக்கின, திராவிடம் பேசிய திரைப்படங்கள். அந்த வரலாற்றை மீண்டும் வாசிக்கத் தருகிறது திராவிட சினிமா.**





படங்கள் உதவி : ஞானம்

■ வீ.மா.ச.சுபகுணராஜன்

## கோட்பாடுகளை உடைத்த இருவர் உள்ளம்

**க**லைஞர் திரைப்படங்களின் பட்டியலில் இந்தப் படத்தைக் கண்ட போது பெரும் ஆச்சரியத்துக்கு உள்ளானேன். ஏனென்றால், பெரும்பாலான கலைஞர் படங்கள் வழக்கமாக நினைவில் இருக்கும். அவற்றின் பெயரைக் கண்டவுடன் எந்தவித ஐயமுமின்றி அடையாளப்படும்.

**‘இருவர் உள்ளம்’** திரைப்படம் இந்த வகையில் ஒரு மாற்றாக இருந்தது. அந்தப் படத்துக்கு கலைஞர்தான் திரைக்கதை-வசனம் எழுதியிருக்கிறாரா என ஒருமுறைக்கு இருமுறை சரிபார்த்துக் கொள்ள வேண்டியிருந்தது. பிரச்சினை திரைப் படத்திலோ, கலைஞர் அவர்களின் எழுத்திலோ இல்லை. மாறாக அந்தத் திரைப்படத்தை, பதின்ம வயதில் சிவாஜி கணேசன் படமாக அடையாளப் படுத்திக் கொண்ட எனது நினைவுதான்.

கலைஞர் திரைக்கதை-வசனம் எழுதிய திரைப்படம், அவரது முத்திரையான காதல் கொஞ்சும் மொழி வசனங்களைக் கொண்ட படம், எப்படித் தடம் புரள முடியும்? கலைஞர் எனும் திரைக்கதை வசன ஆசிரியரை முழுக்க ஓர் அரசியல் சார்ந்த, அதிலும் முற்றாக திராவிட அரசியல் சார்ந்த திரைப்படங்களோடு மட்டும் அடையாளப்படுத்திக் கொண்டதே என் பிழை. ஒரு மாபெரும் திரைக்கதையாசிரியருக்கான சிறப்பு அத்தனைவிதமான களங்களையும் கையாளும் திறன்தானே..!

### திரைக்கதையான நாவல்

ஒரு திரைக்கதாசிரியரின் முன்பு உள்ள சவால், பல பரிமாணங்கள் கொண்டது என்கிறது திரைக் கதை எழுதுதல் குறித்த கோட்பாடுகள். கலைஞர், கோட்பாடுகளை அவர் போக்கில் உருவாக்கியவர். அதாவது அவரது திரைக்கதைகளை வாசித்தால் அவர் அவற்றைக் கையாண்ட நுட்பங்கள், கோட்பாட்டுச் சட்டகங்களைக் கடந்தும் இயங்குவதைக் காண முடியும். ‘இருவர் உள்ளம்’ திரைப் படமே அதற்கான நல்ல உதாரணம் எனலாம்.

> **‘இருதயம் இந்த வாட்ச் மாதிரி கடையில் வாங்கும் பொருளல்ல. நீ தலைகீழாக நின்று தவம் செய்தாலும், உன்னிடம் நான் ஏமாற மாட்டேன்!’**

**தமிழ் நாவலாசிரியர் லட்சுமி** (திரிபுரசுந்தரி) அவர்களின் **‘பெண் மனம்’** என்ற நாவலுக்குத்தான் கலைஞர் திரைக்கதை வசனம் எழுதியிருக்கிறார். இந்தச் செய்தியே கொஞ்சம் ஆச்சரியமானதுதான். எழுத்தாளர் லட்சுமி அவர்கள் பிரபல ஆங்கில நாவலாசிரியர்களான சார்ல்ட் பிராண்டே - எமிலி பிராண்டே நாவல்களின் பாதிப்பில் தமிழில் எழுதிக் குவித்தவர்.

அவர் எழுதிய நாவலுக்குத் திரைக்கதை வசனம் எழுதும் பொறுப்பு கலைஞரிடம் வந்ததற்கு இயக்குநர் எல்.வி.பிரசாத் அவர்களே காரணமாக இருந்திருக்கலாம். இருவருக்கும் நெடுநாள் நட்பு மட்டுமில்லை, ஏற்கெனவே பல வெற்றிப் படங்களில் இணைந்து பணியாற்றிய அனுபவமும் உண்டு. கலைஞரால் வெகுமக்களைக் கவரும் ‘ஜனரஞ்சக’ படத்துக்கான திரைக்கதை வசனம் எழுத முடியும் என்ற உறுதியான நம்பிக்கையே காரணம். கலைஞர் எனும் மேதையும் அந்த நம்பிக்கையைப் பொய்க்கவிடாமல் பார்த்துக்கொண்டு, அந்த நாட்களில் மாபெரும் வெற்றிபெற்ற காதல் திரைப்படத்தை எழுதியிருக்கிறார்.

### நீண்ட உச்சம் கொண்ட திரைக்கதை

திரைக்கதையை வழக்கமாக மூன்று பகுதிகளாகப் பிரித்துக் கொள்வதே போக்கு. **தொடக்கம், உச்சம், தீர்வு** என்பதாகக் கொள்ளலாம். உச்சத்தின் பிரதானப் போக்கு ஒரு சிக்கலை உருவாக்குவதாக / முன் வைப்பதாக இருக்கும். திரைக்கதைகளில் மூன்று பகுதிகளும் ஒரே சீரான நேர ஒதுக்கீடு கொண்டவையாக இருப்பதில்லை. அதைத் தீர்மானிப்பதில்தான் திரைக்கதையாசிரியரின் விற்பன்னத்துவம் உள்ளது.

இந்தப் படத்துக்கான திரைக்கதை அமைப்பில் சிறிய அளவில், நாயகனின் குணாம்சத்தை அறிமுகம் செய்யும், தொடக்கத்தை வைத்துக் கொண்டிருக்கிறார். திரைக்கதையின் நீண்ட பகுதியை உச்சமே நிறைத்துள்ளது. உச்சத்தினை ஒற்றையாகவன்றி இரண்டாக அமைத்துள்ளார். அதாவது ஓர் உச்சம் இன்னோர் உச்சத்துக்கான தீர்வை நோக்கிய பயணத்தில் தனக்கான தீர்வைக் கண்டடைகிறது.

தீர்வு வழக்கமான கலைஞர் பாணி வழக்காடு மன்ற வாத பிரதிவாதங்கள் வழியாக அரங்கேறுகிறது. ஆனால் ஊடாகத் தெறிப்பான பகுத்தறிவுச் சிந்தனைக்கான துணை/இணைக்களமும் உண்டு.

### திருமணம் என்றொரு எலிப்பொறி

‘நடிகவேள்’ எம்.ஆர்.ராதா முற்றிலும் நேர்மறையான பாத்திரமேற்று நடித்த திரைப்படம். பிள்ளை வேண்டாமெனக் காசிக்குப் போய் வந்து இரட்டைப் பிள்ளை பெற்றுக் கொள்கிறார்.

**நாயகன் செல்வம்** ஒரு காதல் மன்னன் அல்லது **‘பிளே பாய்’**. அறிமுகமாகும் போதே **‘பறவைகள் பலவிதம் ஒவ்வொன்றும் ஒரு விதம்’** என உல்லாசமாகப் பெண்களுடன் பாடி ஆடித் திரிகிறான். பெங்களூரில் மருத்துவப் படிப்பைவிட இந்தக் கேளிக்கைக்கே முன்னுரிமை.

காதலிக்கவே நேரம் போதாதவனுக்குக் கல்யாணம் என்றால் கசப்பு. ‘திருமணம் என்பது ஒரு எலிப் பொறி. அதிலிருக்கும் தேங்காய்க்கு ஆசைப்பட்டு உள்ளே போனால், குடும்பம் எனும் சுமையைச் சுமத்தி விடுவார்கள்’ என்பதே கவலை. காம லீலைகளை காதல் எனக் கருதுபவனுக்குக் காதலைக் கையாளத் தெரிவதில்லை. ‘உன்னைத் தேடிவரும் அதிர்ஷ்டத்தை எட்டி உதைக்காதே. எனக்கென்ன படிப்பில்லையா, பணமில்லையா, அழகில்லையா’ எனப் பேசி, தான் காதலிக்கும் பெண்ணான சாந்தாவைத் திருமணத்துக்குச் சம்மதிக்க வைக்க முயல்கிறான்.

பணத்துக்காக வந்த பெண்களோடு மட்டுமே பழகியவனுக்கு உள்ளத்தின் உருக்கத்தைச் சொல்ல வார்த்தைகளில்லை. பரிசுகளால் மடக்கி விட நினைப்பவனிடம், ‘இருதயம் இந்த வாட்ச் மாதிரி கடையில் வாங்கும் பொருளல்ல. நீ தலைகீழாக நின்று தவம் செய்தாலும், உன்னிடம் நான் ஏமாற மாட்டேன்’ என நிராகரிக்கிறாள் சாந்தா.

செல்வம் உருவாக்கும் அவப்பெயரால் கட்டாயத் திருமணத்துக்கு நிர்பந்திக்கப்படுகிறாள். ஆனால், மண உறவை ‘காதலாக’ அங்கீகரிக்க மறுக்கிறாள். நிராகரிப்பின் வலியில், ‘உன் கண்ணின் ஒளியிலே உன்னைப் பார்க்கிறேன். என் இதயத்திலே உன்னைப் பார்’ எனும் செல்வத்தின் இறைஞ்சல் ஏற்கப்படுவதில்லை. இது முதல் உச்சம்.

### மகனைத் தூக்கிலிடும் அப்பா

தன் காதலை நிறுவும் போக்கில் அவளிடம் திருமணப் பந்தத்தின் உரிமையைக் கோராமல் வாழ்கிறான். ஆனால் அவனது குற்றங்களின் கொடுங்கரமாகத் தொடர்கிறாள் வசந்தி. அவளது கணவன் பரமாத்மாவும் உடந்தை. திருமணத்துக்குப் பின்னும் தன் லீலையைத் தொடரும் வசந்தி பரமாத்மாவால் கொலை (ஆம்... கொலைகாரன் பெயர் பரமாத்மா) செய்யப்பட, பழி செல்வத்தின் மீது விழுகிறது. இது இரண்டாவது உச்சம். சாந்தா செல்வத்தின் உண்மையான காதலை உணரத் தொடங்கும் போது இந்த விபரீதம் நிகழ்கிறது.

எப்போதும் மகன் செல்வத்தின் நடத்தையில் வெறுப்புற்றிருக்கும் அப்பா, நீதிமாணிக்கம், அரசு வழக்கறிஞராக, மகனுக்கெதிராக வாதிட்டு, அவனுக்குத் தூக்கு வழங்க வேண்டுகிறார். சாந்தாவோ செல்வத்தின் சார்பாக அவன் குற்ற மற்றவன் என்பதற்கான சாட்சியாக நின்று, அவனது விடுதலைக்காகக் கண்ணீர் விட்டுப் போராடுகிறாள்.

செல்வத்தின் தந்தை அவனைத் தூக்கு மேடைக்கு அனுப்புகிறார். செல்வமோ அந்தத் தூக்குக் கயிறை முத்தமிடுவதன் மூலம் அப்பாவின் புகழ் கிரீடத்தில் ஒரு மாணிக்கக் கல்லைப் பொருத்துகிறான். இந்த நன்றிக்காக என் கல்லறையில் ஒரே ஒரு மலரை வைத்து மன்னித்து விட்டேனடா மகனே’ என்றால் போதும் என்கிறான்.

என் வாழ்க்கையில் ஏற்பட்ட பழி, பாவம், களங்கம் அனைத்தையும் சாந்தாவின் கண்ணீர் கழுவி விடும் என்கிறான். எதிர்த்தரப்பு வக்கீலாக அண்ணன் ஞானசிகாமணி வாதாடி தம்பியை நீதியின் முன் நிரபராதி என நிரூபிக்கிறார். சிவாஜி, சரோஜாதேவி, எம்.ஆர்.ராதா, ரங்காராவ் நடித்து கே.வி.மகாதேவன் இசையில் வெளிவந்தது இந்தப் படம்.

...படம் விரியும்

---

## உடைக்க வேண்டிய உளவியல்!

**க**டந்த வாரம், பெங்களூர் நகரம் மற்றும் புறநகர் பகுதிகளுக்கு ஆட்டோவில் பயணம் செய்தேன். அப்போது பல இடங்களில் 10 முதல் 15 வயதிருக்கும் குழந்தைகள் 12-20 பேர் வரை கும்பலாக நின்றுகொண்டு, வரும் அனைத்து வாகனங்களையும் வழிமறித்து பிள்ளையார் சதுர்த்தி வசூல் செய்து கொண்டிருந்தனர். பண்டிகை நாட்கள் நெருங்க நெருங்க இந்த வசூல் கடுமையாக இருக்கும் என ஆட்டோ ஓட்டுநர் தெரிவித்தார். இப்படியான வருங்காலத்தவர்களைத்தான் மதப் பண்டிகை என்னும் பெயரில், வளர்த்துக் கொண்டிருக்கிறது இந்துத்துவம். இங்கேதான் நாம் நுட்பமாகக் கவனிக்க வேண்டிய ஒன்று உள்ளது.

பண்டிகை என்கிற பெயரில் உயரம் உயரமாக திடீர் பிள்ளையார் சிலைகளைத் தெருக்களில் வைத்து வழிபடுவதற்கும், அதைத் தண்ணீரில் கரைக்கிறேன் என்னும் பெயரிலும், வசூல் வேட்டை செய்வது என சூத்திரர்களே. ஆனால், வேளாவேளைக்கு அந்தச் சிலைகளுக்குப் பூஜை செய்வது, தீபம் காட்டுவது போன்றவற்றைப் பார்ப்பனர்கள் வந்து செய்வர். இதற்கு தனிச் சம்பளம் மற்றும் தட்டில் விழும் தொகையையும் எடுத்துக்கொள்வர்.

வசூல் செய்வது. ஆட்டம் ஆடுவது. பண்டிகை என்னும் பெயரில் ஆர்ப்பாட்டமும் அடாவடியும் செய்வதில் ஒரு பார்ப்பனரைக் கூடப் பார்க்க முடியாது. அதே நேரம் அந்தச் சிலையைச் சுற்றி எப்படியெல்லாம் இருக்க வேண்டும், யாரெல்லாம் அனுமதிக்கப்பட்ட இடம்வரை வர வேண்டும் என்றெல்லாம் முடிவு செய்வது பார்ப்பனர்களே. இந்தப் படிநிலையைத்தான் அனைத்து மட்டங்களிலும், அத்தனை விடயங்களிலும் செய்துகொண்டிருக்கிறது இந்துத்துவம். அந்தத் தொடர்ச்சியை உடைக்க முயற்சி செய்தால் மட்டுமே பார்ப்பனியத்தின் பிடியில் இருந்து வெளியேற முடியும்.

-எழுத்தாளர் இனியன்

---

## :.ப்ளாஷ்பேக்





குமார்

### வீரவாள் பரிசு!

**2002** -ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த கோவை மாவட்டத்தில், மூன்று நாட்கள் இளைஞர் அணி பயிற்சிப் பாசறைக் கூட்டம் நடைபெற்றது. நகர இளைஞர் அணி அமைப்பாளர் என்ற முறையில் நானும் பங்கேற்றேன். அதன் பின்னர் 2 ஆண்டுகள் கழித்து, உடுமலைப்பேட்டையில் தளபதி அவர்கள் கலந்து கொண்ட பொதுக்கூட்டத்தை ஏற்பாடு செய்தோம். அப்போது, பயிற்சிப் பாசறையில் பெற்ற படிப்பினைகள் செயலாக்கம் பெறுவது குறித்து மகிழ்ச்சி அடைவதாக குறிப்பிட்டுப் பேசினார். உடுமலை நகர இளைஞர் அணி சார்பாக, மேடையில் தலைவர் அவர்களுக்கு வெற்றி வீரவாளைப் பரிசாக வழங்கினோம். இது அவருடன் மேடையில் எடுத்துக்கொண்ட புகைப்படம்.

**-யு.என்.பி.குமார்**
**தலைமைப் பொதுக்குழு உறுப்பினர், திருப்பூர் தெற்கு மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண்: 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

---

## கருவூலம்

### ‘முதல்’ இழந்த அமைச்சர்!

**1969-ஆம் ஆண்டு, மார்ச் 9-ஆம் தேதி சென்னை நேப்பியர் பூங்காவில் கழகத்தின் கூட்டம் நடைபெற்றது. அண்ணாவுக்குப் பின் கலைஞர் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு நடைபெற்ற கூட்டம் என்பதால், கலைஞரின் பேச்சு எதிர்பார்க்கப்பட்டது. ‘முதலமைச்சர் என்று என்னை எல்லோரும் வாழ்த்தினீர்கள். ஆனால், நானோ ‘முதல்’ இழந்த அமைச்சனாக, என்னை உருவாக்கிவிட்ட முதலினை இழந்த அமைச்சனாக உங்கள் முன் நிற்கிறேன்’’ என நெகிழ வைத்தார்.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம் 227




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131